வேதையுமாகவின்னும் விளம்புறேன்செயநீர்கேளு, ஆதையுமுப்புப்பத்து மதனெடுபுளியுமேழு, கோதையசினமொன்று கொடியதோர்காரமொன்று, பாதையமூத்தானுப்பு பகிரதிற்பலமும்ரெண்டே. (கடுசு)

ரெண்டையுமொக்கக்கூட்டி நிமிரவேபிடித்துரையத், தண்டையதணலையிட்டுத் தாக்கிடச்சுன்னமாகும், கண்டையகல்வத்தாட்டிக் கடும்பனிபடவேவைக்கில், அண்டையில்சாய்க்கநீர்தானப்பனேவருநீபாரே. (கடுஎ)

பாருநீரிங்கநீர்தான் படியதுவொன்றுவாங்கிச், சேருநீரிதற்குள்போடத் திறமாகமருந்துகேளு, ஆருநீமூத்ரனென்று மதிலரைப்பலமேவீரம், காருநீசூதங்காலுங் கலவதிற்பூரங்காலே.

காலுக்குள்பாதிகூட்டு கடியவெள்ளுரத்தைத் தானே, கோலுக்குள்குருவண்டோதான் கொட்டதில்நாற்றுப்பத்து, தாலுக்குள்சிப்பிநீரால் தனியரையெல்லாங்கூட்டிச், சேலுக்குளுகர்க்திநன்றாய்ச் செயநீரிற்கொட்டிடாயே. (கடுகூ)

கொட்டியேசெயநீர்க்குள்ளே குழம்பிவேவைத்துநீயு, மட்டியேவஸ்துவாலே யாத்தாளிப்பூசைபண்ணி, மட்டியவாசிவோர்கம் வழிகண்டுநோக்கிப்பாரு, கொட்டியாம்வாதந்தானுங் கிடைத்திடும்ஞானந்தானே, (கசா0)

ஞானதாஞ்சாரநீரைச் சாற்றுறேனகேளுகேளு, வானதாஞ்சாரமெட்டு வாழ்சிப்பிச்சுன்னமெட்டு, வனதாயிழையுநன்று யியல்படவரைத்துக்கொண்டு, கோனதாமூத்தானுப்பைக் கொட்டிருபலமும்நீயே. (கசாக)

இருபலமொக்கப்போட்டே யியல்படக்குகையில்வைத்துக், கருபலப்புடமேபோட்டுக் கல்வத்திற்போட்டுநீயுங், கருபலப்பனியில்வைத்துத் தாக்கிநீயரைக்கநீராம், அருபலச்செயநீராகு மப்பனேயிங்கான்வாங்கே, (கசாஉ)

வாங்கிநீதெளிவையெல்லாம் வார்த்திடுமேறுபிங்கானில், ஓங்கியநீருக்குள்ளே யுறப்போடமருந்துகேளு, தாங்கியசெயநீர்தானுந் தனியொருபடியேகூட்டிப், பாங்கியமூத்தானுப்பு பலமதுவொன்றுகூட்டே. (கசாங)

கூட்டுநீவீரந்தன்னைக் கொட்டரைப்பலமதற்குள்; நீட்டுநீ சூதங்கால்தான் நிலைத்திடும்பூரங்கால்தான், ஓட்டுகல்லுாமரைக் கா லொருநாறுகுருவண்டுட்டித், தீட்டுகற்கிளிஞ்சினீரால் சேர்க் தரைத்துலர்த்திடாயே. (௧௬௪)

உலர்ந்தபின்சாரநீரி லொக்கவேகெர்ட்டிக்கிண்டிக், கலந்த தைப்புத்னமாகக் கட்டிநீர்வைப்பீரையா; அலர்ந்திடுஞ்சாரகார மறுபத்துநான்குஞ்சரகும், குலந்தனிற்றுபோறுக்குக் கொடுத்த நீர்வாலைதானே. (௧௬௫)

வாலையைப்பூசைபண்ணு வளம்பெறவாசிநோக்கு; சோலையி ன்வண்டின்கூட்டத் தொடர்போலேவாதசித்தி, காலையுமாலையெ ண்டுங் கடுகியேயொன்றுய்ப்போகும், வேலையில்வேறுமில்லை வே தையின்றுறையைக்கேளே. (௧௬௬)

கேளுநீசாரமொன்று கெடியுறுகாரமொன்று வாளுநீமாவி ன்தேவி வளம்பெறவொன்றுகூட்டிக், தோளுயருப்புநீரால் சுகப் படவரைக்கமூன்றும், வேளுயர்தீயில்வைத்து விளங்கியசெயத் தைப்பாரே. (௧௬௭)

செயப்பட்டபின்புதானுஞ் சேர்வங்கத்தகட்டின்மேலே, க யப்பட்டவங்கந்தானுங் கடுகியேநொறுங்குய்பாரா, யயப்பட்டவ ங்கந்தன்னை யரைத்துநீவெள்ளிமேலே, பயப்பட்டுப்பூசிவாட்டிப் புருவமாய்ப்புடத்திற்போடே. (௧௬௮)

போட்டிடாசிதந்தானும் புகழ்பெற்றகுருவேயாகு, மாட்டி யகுருவில்ரெட்டி யப்பனைசூதஞ்சேரு; நீட்டிமுன்தாளகத்தை லேபித்துக்கவசமாக்கி, வாட்டிமேல்வாட்டில்வாட்ட மணிபோல க்கட்டும்பாரே. (௧௬௯)

பாருநீயிந்தச்சூதம் பாய்ச்சொருநூறுவுங்கத், தாருயர்வெ ளளியாகு மசையாமலீயம்போட்டால், தேருயர்ரசிதவித்தை தே விக்கெம்பீசன்சொன்னூர், காருயர்கவலோகத்திற் காட்டிடவெள் ளியாமே. (௧௭0)

## ஏமவித்தை

ஆமிந்தப்போக்கைவிட்டே யிறைகிறேனெமவித்தை; காமி ந்தக்காரமொன்று கடுகியசாரமொன்று, வாமிந்தக்கெந்தியொன் று வார்த்தரையுப்புநீரே, சேமிந்தத்தீயில்வைத்துச் செயத்தை ப்பார்செயத்தைப்பாரே. (௧௭௧)



பாருநீகெந்திகட்டிற் பாய்ச்சுபின்கெந்தியொன்று, காருநீ யரைத்துப்போடத் தனிரெண்டுமொக்கக்கட்டுஞ், சேருநீநாகஞ் சூதஞ் சேர்த்திதைக்கவசம்பண்ணி, யோருநீமணலுக்குள்ளே யுறுதியாய்ப்புடத்தைப்போடே. (௧௭௨)

போட்டிடிற்சூதநாகம் பொலிவுடனுமூன்றுகட்டும், ஆட்டி டிற்கட்டுமட்டு மப்பனைபூசிப்போடு, கூட்டியேசூதம்நாகம் குறி யுறச்சேர்த்தபின்பு, மூட்டியேநாலுக்கொன்று முப்பசியாய்த்தங் கஞ்சேரே. (௧௭௩)

சேர்த்திடத்தங்கந்தானுஞ் சிறந்துநற்களங்கேயாகும், கோ ர்த்திடும்கவலோகத்திற் கொடுக்குமுன்னெமமாகும், ஆர்த்திட வீவதென்னிலைம்பதுக்கொன்றேயீந்து, பார்த்திடாயீசனென்தா யூ பராபரைக்கருளும்வாறே. (௧௭௪)

வாறுகேள்நோயில்லாத வளம்பெறும்சடத்தைப்பார்த்துத், தாறுயர்பாண்டத்துள்ளே தனிமலம்விடவுஞ்சொல்லி, வேறுகே ளமுரிவார்த்து விளங்கியேகுழம்புசெய்து, கூறுகேள்காய்ச்சிவற றக்கொட்டிநீகலயம்பாய்ச்சே. (௧௭௫)

பாய்ச்சியகலயவாய்க்குப் பதையாமல்சில்லுப்போட்டு, ஆச் சியபுடத்தைப்போடி லப்பனேதமர்கிழிட்டு, வோச்சியதமரின்வா யி லொக்கவோர்கலயம்வைத்துக், காய்ச்சிவாய்மூடிமேலே கடு கநிபுடத்தைப்போடே. (௧௭௬)

போட்டிடத்தைலங்கீழே புகலமேல்சாம்பல்நிற்கும், ஆட் டியசாம்பலொன்று லமுரிதான்பத்துவாரு, கூட்டியேகரைத்து வைத்துக் கொள்ளுநீமூன்றுநாளும், நீட்டியேதெளிவைவாங்கி நேர்படக்காய்ச்சிடாயே. (௧௭௭)

காய்ச்சிடுவார்த்துவார்த்துக் கடுகியகுழம்பில்வாங்கி, யாச்சி டுமிணங்கன்சீன மதனோடுவீரம்பூர, மோச்சியசாரத்தோடு முரு கியதுருசுச்சுன்னந், தாச்சியவாறுங்கேளு தனித்தனிகாசுபோ டே. (௧௭௮)

போட்டுநீதைலம்வார்த்துப் புணர்ச்சியாயரைத்துக்கொண் டு, மூட்டுநீகுழம்பினோடே மூதண்டரவியில்வைக்க, வாட்டியதீ ங்கான்கிண்ணி யதற்குள்ளேயிதனைவார்த்துக், கோட்டிநீரவியில் வைக்கக் குழம்புமுத்தாறுமே. (௧௭௯)

ஆமிதையறிந்தாலென்னவே யதைந்திட்டநாமங்கேளு, காமி அவுண்டவுப்பு தனிப்புளிரெண்டுஞ்சென்று, காமிறாகீரிலுப்பாய்க்கமெம்பலபிணிகளாச்சு, வேமிதுமூலத்தியின் விதத்திறூற்பிறந்தவாறே, (௧௭௦)

பிறந்திடுமெதிமையாலே போரச்சமூத்தாளென்று, அறிந்திதையெடுக்கமாட்டார்ப்பனைநிஷித்தமென்பார், பறிந்திடும்வாதந்தானும் பார்த்திதைத்தூஷிக்கோர்க்கு. முறிந்திடுநூல்களெல்லா முற்றிலுங்கிடையாதென்னே. (௧௭௧)

## உப்பு புளி மார்க்கம்.

கிடையாதபுளியினுப்பைக் கேட்கிலும்வல்லோர்சொல்லார், அடையாதப்புளியினுப்பி னளவெல்லாஞ்சொல்லக்கேளு; குடையாதசினமுப்பு கூடினும்மொருமையாகும், படையாததுருசினம் பகரினும்மையொன்றுமே. (௧௭௨)

ஒன்றுனவிணங்களோடு மூட்டுநீபுளியுமொன்று, தன்றுனாதவிர்ந்து தானதாம்புளியுமுப்புங், கன்றுனகெந்தியோடு கல்லுப்பேபுளியுமுப்பு, மன்றுஞரென்னைப்பெற்ற மாயிக்குச்சொன்னவாறே. (௧௭௩)

## உப்புரசன் - புளி சந்தி.

வாறுகேளுப்பேயிசன் வழங்கியபுளியேசந்தி, கூறுகேள் ரெண்டினாலுங் கொண்டதுவாதமெல்லாம், வாறுகேள்காரசாரம் வழங்கியமார்க்கங்கண்டால், காறுகேளாறுதாண்டித் தனிவெளிப்பாருமாமே. (௧௭௪)

ஆமெனவின்னுங்கேளா யுறைகிறேனறிந்தமட்டுங், தாமெனவண்டத்துள்ளே தனித்தவெண்கருவேப்பு, வாமெனமஞ்சள்மார்க்கம் வழங்கியபுளியேயாச்சு, வேரமெனமேவினோடு முயர்ந்திடுநாகமாமே. (௧௭௫)

ஆமதுகூதமுப்பு வப்பனேபுளியாங்கெந்தி, போமதுகிளிஞ்சிலுப்பு புகழ்சதைபுளியுமாகுங், தாமதுசங்கேயுப்பு தனிச்சதைபுளியுமாகும், வாமதுகத்தையுப்பு வளர்சதைபுளியாச்சொல்லே.

புளியுப்புரெண்டினாலே போந்ததில்வண்டமெல்லாம், புளியுப்புரெண்டினாலே போந்ததுவாதமாச்சு, புளியுப்புரெண்டுங்கண்டோர் புகழ்ச்சியோர்வேதகண்டாய், புளியுப்புரெண்டுங்கூடில் புகலண்டச்சுன்னமாமே. (௧௭௬)



சுன்னத்தின்மார்க்கஞ்சொல்லத் தொலையாததென்றாற்கேளீர், சுன்னத்தைவிட்டகன்றால் சுகக்காரசாரஞ்சாகா, சுன்னத்தையறியாதார்க்குச் சொல்லில்லைகுருவுமில்லை, சுன்னத்தின்பெருமைசொல்லச் சுந்தரர்மயங்கினாரே. (௧௭௭)

மயக்கமேமதித்தென்னுத்தாள் வகையாகக்கேட்டபோது, தயக்கதாய்க்காரசாரந் தனித்திடுமார்க்கங்கேளாய், கயக்கமாமுப்பேசாரங் கசங்கியபுளியேகாரம், பயக்கமாய்ரெண்டுங்கூடிற் றையாமற்சாகும்பாரே. (௧௭௯)

பாருநீசாவுதானும் பரிசிக்கில்செத்துஞ்சாகா, சாருநீயினத்தைக்கண்டு சரக்கெல்லாந்தாக்கிக்கொல்லு, கோருநீதங்கஞ்சூதங் கூட்டியேகளங்குசெய்யில், வாருநீவாய்நீரல்லால் மற்றொன்றும்வாராதென்னே. (௧௮௦)

என்னவேகாரசார மியல்புபத்தாலு, மென்னவேயுபரசங்களிருநூறுசாரகார, மென்னவோதவிர்த்த லெடுத்ததுகாரசார, மென்னவேபோகநாத ரியல்புடனருளும்வாறே. (௧௮௧)

வாறுகேள்புளியுமுப்பாய் வளர்ந்ததுப்பித்தாநாலும், வாறுகேள்புளியுமுப்பாய் வளர்ந்ததுவுபரசங்கள், வாறுகேள்புளியுமுப்பாய் வளர்ந்ததுநாதவித்து, வாறுகேள்புளியினுப்பின் மார்க்கமுந்தொலையாதென்னே. (௧௮௨)

என்னவேசினக்கார மெழுபூரஞ்சாரமாகும், பன்னவேகாரத்தோடே பரிசிக்கில்சூடன்சாரம், தன்னயக்கிளிஞ்சிற்சாரம் தனிக்காரந்துரிசியாகும், மன்னியவீரங்காரம் மாட்டண்டம்சாரமாமே. (௧௮௩)

ஆமதையிந்தமார்க்க மறிந்துநீயொன்றோடொன்றைத், தாமதுசேர்ப்பாயாகில் தனித்தனிசாகும்பாரு, வாமதுகட்டுத்தேடி மயங்கியமடையர்கேளீர், பேர்மதையிதற்குள்வேதை யூட்டிநீரறிந்துபாரீர். (௧௮௪)

பாருமுன்சாரநீரில் பரியுடனுங்கஞ்சாய்ப்பாய், ஒருமுன்செம்புசாய்ப்பா யுறவுற்றவிரும்புசாய்ப்பாய், தாருமுன்னூறல்போகுந் தனித்தனிகளங்குக்காகும், வாருநீபதினென்றேதான் வகைவகையினத்துக்கென்னே. (௧௮௫)

## துருசுவெள்ளை.

என்னவேசாரநீரி லியல்பட்டுருசுதோய்த்துப், பன்னவே
ர்வியிற்போடு புச்சைபோய்வெள்ளையாகும், கன்னவேதுருசுதா
னுங்கடுவெள்ளைமயனமட்டும், தன்னவேதுருசுவெள்ளை சமர்த்த
ருக்கெய்தும்வாறே. (௧௯௬)

வாறுகேளிந்தவெள்ளை வாங்கிநீபலமேவைத்துத், தேறுநல்
ன்நாணுஞ் சேர்த்தரைபலமேகூட்டிக், கூறுகேள்சாரச்சுன்ன
முங்கூட்டரைப்பலமுமொக்க, வாறுகேள்சூரச்சுன்ன மதையரைப்
பலமும்போடே. (௧௯௭)

போட்டுநீயொன்றாய்க்கூட்டிப் புகழ்படவரைத்துவைத்தே,
வாட்டியசரக்குக்கெல்லா மப்பனைசத்தைப்பூசி, நீட்டுநீற்சாரநீரி
னிலையுறத்தோய்த்துவாட்டப், பூட்டுமேசரக்குஞ்சாகும் போமதி
வேதைதானே. (௧௯௮)

வேதையுங்காணவேண்டில் விளங்கியசூதந்தங்கம், பாதை
யேகூட்டினாற் புடம்போனால்வாதம்போச்சு, பேதையோசொன்
னேனென்றே யிடும்பரேசூதந்தங்க, மாதையேமறைப்பாயானால்
வாதமும்மயக்கும்பாரே. (௧௯௯)

மயக்கறக்குடவன்றன்னை வளம்பெறவுப்புநீரில், தியக்கரக
க்காய்த்துத்தோய்நீ செயவுடன்பதினெண்ணேதான், தயக்கறுந்
துருசுச்சுன்னந் தனியுறும்வீரச்சுன்னம்; பயக்கறும்பூரஞ்சூதம்
பருங்கோழிப்பிச்சங்கூட்டே. (௨௦௦)

கூட்டியவஞ்சுதானுங் குலாவியவெடியைக்கேளாய், யாட்டி
பவளைக்கோர்காசா யரைப்பலந்தானேகூட்டி, நீட்டிமக்குடவன
தாணும் நீள்புலம்பத்திற்பூசி, வாட்டியேபுடத்திற்போட மாற்றே
றிப்பொன்னாமே, (௨௦௧)

பொன்னானகுடவனுக்குப் பூட்டுபொன்னுக்கொன்று, ம
ன்னானகாரங்குத்தி வளம்பெறவுருக்கிவாரு, பன்னானமாற்றே
வெட்டு பல்காவியுப்புக்கோட்டு, மன்னானமாயிசொல்லிச் சாதித்
தக்கண்டவாறே. (௨௦௨)

வாறுகேளு[illegible]ரும் வளம்பெறுசாரநீரும், தாறுகேள்சரி
யாய்க்கூட்டித் தயக்கமேதவிரேயாகும், வேறுகேள்சாரமொன்
று விளங்கியகாரமொன்று, ஆறுகேளுப்புரெண்டு மதிலொன்று
கண்டுபோடே. (௨௦௩)



போடுநீயாறுந்தூக்கிப் புகழுறப்பலமேயாறு, தேடுநாயுரு
வியுப்பு சிறந்திடுஞ்சவுட்டுவில்லை, சூடுநீசூட்டோடு சொல்கடல்நு
ரையுங்கூட, வாடுறச்சொன்னவஞ்சு மரையரைப்பலமுங்கூட்டே.

கூட்டியமுன்னீர்தன்னிற் குலாவுமுன்தயிரைவார்த்தே, யா
ட்டிடவரைக்கக்கட்டு மப்பனேகுழம்புபோலவை, காட்டியகட்
டுக்குள்ளே கல்லுப்பையுடைத்துக்கொண்டு தீட்டியகுழம்பை
த்தோய்த்துத் திக்குளேவாட்டுவாட்டே. (௨௦௫)

வாட்டுடைவாட்டவாட்ட வளம்பெறுமுப்புச்சாகும், மூட்
டெடையுருவியுப்பு முழங்கியசூட்டோடு, காட்டுடைகடலின்
மேலே கவிழ்ந்திடுநுரையாமூன்றும், தீட்டெடையமுரிவிட்டுச் சி
க்கெனத்துவைத்துவாட்டே. (௨௦௬)

துவைத்திடுங்குழம்புவற்றிச் சுண்டியேசுருக்குத்தாக்க, வ
வைத்துமேதீயின்மேலே யமரியாய்த்தட்டுவாட்டு, புவைத்துமே
யாற்றியாற்றிப் போட்டுநீவாட்டவாட்டப், பலைவத்துமேயுப்புதா
னும் பரிவுடனடங்கும்பாரே. (௨௦௭)

பாரிந்தவுப்புமேலே பாங்குடன்சவுட்டுச்சுன்னம், வாரிந்த
வமுரிதானும் வாதுடனரைத்துக்கட்டிக், காரிந்தமேலேபொன்
று கடுஞ்சுன்னச்சிலைசுற்றிப், போரிந்தவுப்புமண்ணைப் புகட்டிநீ
புடத்தைப்போடே. (௨௦௮)

போட்டபின்கவசம்நீக்கிப் புகழுறவுப்பைவாங்கி, நீட்டிப்பி
ன்னுருக்கிப்பாரு நிலையற்றமணிபோலாமே, ஆட்டப்பின்னுருகா
விட்டாலப்படிவாட்டிப்போடு, கூட்டப்பாவுப்பின்வேதை கோ
டிக்குக்கோடிதானே. (௨௦௯)

கோடியென்றுரைத்தேன்யானுங் கொண்டிடிற்கோடிகோடி
யாடியகுளிகைதானு மறுபத்துநாலுஞ்சாகும், தேடியகெந்தியோ
டு சேரவுஞ்சத்தேயாகும், தாடியதங்கந்தொட்டுஞ் சகலமுங்குரு
வுமாமே. (௨௧௦)

ஆமிந்தயோகமார்க்கமறைந்தவர்மூலமூர்த்தி, வாமிந்தவை
ந்நூற்றுள்ளே வகைவகையெல்லாம்பார்த்துச், கோமிந்துதரித்
தமாயா சொல்லியநாலையூன்றிக், காமிந்தக்கபடமாக்கன் கடா
விநேன்கைகண்டேனே. (௨௧௧)

கண்டதோருப்பைவிட்டாற் கட்டில்லைவாதமில்லை, கண்ட
தோருப்பைவிட்டாற் கவனமுஞ்சித்தியில்லை, கண்டதோருப்பை

விட்டாற் கடுரசசத்துமில்லை, கண்டேகோருப்பையீசன் கையற்க ணணிக்கருளினாரே. (௨௧௨)

அருளினவுப்பைநீயு மப்பனைதமரைப்போட்டே, யருளின வலக்கரத்தி லாட்டிநீசெபமேசெய்யத், தெருளினசத்தகோடிதே வதைசித்தியாகு, மருளினவாதமுன்னே வாய்பொத்திநிற்கும் பாரே. (௨௧௩)

## கெந்தகக்குரு.

பாருநீயுப்புவொன்று பருவியேயுருகும்போது, தாருநீகார மொன்று தாக்கிநீயுள்ளேவாங்குக் காருநீடெண்டுக்குள்ளே கடுஞ் சாரமொன்றைப்போடு, சீருநீமூன்றுக்கொர்க்கக் கெந்தகம்போ ட்டிடாயே. (௨௧௪)

போட்டிடக்கெந்திதானும் புண்யாமலுள்ளேவாங்கும், ஆ ட்டியகுகைக்குமேலேயப்பனை மண்ணைப்பூசி, நீட்டியேபுடத்தை ப்போடு நிலைகெந்திக்குருவுமாகும், பூட்டிடச்சூதஞ்சாகும் போ ர்போராய்ச்சாகும்பாரே. (௨௧௫)

பாரிந்தக்குருவைத்தொட்டுப் பரிசிக்கச் சொர்ணம்நீறும், பாரிந்தக்குருவைத்தொட்டுப் பரிசிக்கநாகஞ்சாகும், பாரிந்தக்கு ருவைத்தொட்டுப் பரிசிக்கவெல்லாஞ்சாகும், பாரிந்தக்குருவை க்கண்டால் பதையாமற்சூதஞ்சாமே. (௨௧௬)

சாகவேசரக்கின்மார்க்கஞ் சாற்றுறேனினத்தைக்கேளு,வா கவேயுப்புநின்று வளம்படவுருகும்போது, போகவேவீரம்போ டு பொலிவுற்றலிங்கம்போடு, வேகவேவெள்ளைபோடு வொன்ப துங்கட்டும்பாரே. (௨௧௭)

கட்டுமேபாஷாணங்கள் காட்டுடையுப்புநீராய், மட்டுமுன் னறிந்தேயியல்வழங்கியதிசைமாற்றுகு, மொட்டியவுப்பின்வேதை யோடாதுகாவிக்கப்பா, பட்டுமேயுருகிலோகம் பளிச்சென்று பொன்னுமாமே. (௨௧௮)

## காரம்.

ஆமிந்தவுப்பைநீயு மரைத்திடுப்பழச்சாற்றாலே, காமிந்தக்கா ரத்தின்மேற் காட்டிநாலுக்கொன்று, சோமிந்தரவியிற்போடு சொக்கியேவெளுத்துக்கட்டும், தாமிந்தக்காரந்தன்னைச் சாற்றி னேற்சினர்க்கென்னே. (௨௧௯)



என்னவேசினாந்தன்னை யெடுத்துநீயிணங்கன்மேலே, பன் னவேரெண்டுக்கொன்று பழச்சாற்றால்பூசிப்பூசித், தன்னவேவா ட்டவாட்டச் சொக்கிபேயெதும்புபோலா, மன்னவேயிருக்கும்பா ரு மகத்தானகட்டுமாமே. (௨௨0)

கட்டியவுப்பைநீயும் கலந்தரைபழச்சாரவிட்டு, ஒட்டியசா ரன்மேலே ஊட்டிடுரெண்டுக்கொன்று, தட்டியதணலின்மேலே சாங்கமாய்வாட்டவாட்டக், கெட்டியாயிருகுச்சாங் கெடிபடத்த ந்தமாமே. (௨௨௧)

ஆமதுயிந்தசார முனைத்திடும்வீரன்மேலே, வாமதுவாட்ட வாட்ட மணிபோலேயுருகிநிற்கும், சேமதுயிந்தவீரம் நியமித்து லிங்கத்துக்கு, மேமதுவாட்டிப்பாரு மியலுடன்வலியுங்காணே. ()

காணிந்தலிங்கந்தன்னைக் கபளித்துமாதேவிக்குந், தானி ந்தவாட்டவாட்டந் தாளகமுருகும்பாரு, பூணிந்தத்தாளகத்தைப் பூட்டிடக்கெந்திசாகும், நீயிந்தகெந்தகத்தை நிமிளைக்குக்கட்டி வாட்டே. (௨௨௩)

வாட்டிடநிமிளையொன்று விள்ம்பபீவீரம்ரெண்டு, ஓட்டியத ங்கம்ரெண்டு உருகையிலிதனையீய்ந்து, கூட்டியகுகைபோடொக் கக் குளிரவேபாரவிட்டு, நீட்டியமணியைவாங்கிச் சேர்த்திடமருந் தாகேளே. (௨௨௪)

கேளுநீயிதுமேற்பூசக் கெடியானசுண்ணமாக்கம்,வாளுநீமூ ன்றின்றாக்க வகையானபலமஞ்சாக,தேளுயிர்மணியின்மேலே சி ராகப்பூசசுண்ணம், தாளுபாளுக்கவங்கம் தனிக்கண்டாவீரங்கட் டே. (௨௨௫)

கூட்டுநீயின்னங்கேளு குமுரியருதம்பூரம், ஆட்டநீசாரத் தோடு அப்பனையெழுசுண்ணம், மூட்டநீவகையொன்றென்று முழுநாக்காலபலமேகூட்டித், திட்டிநீவானாவிட்டுச் சிரக்கநீபூசி ப்போடே. (௨௨௬)

போடுநீரவியில்தானே புகழ்பெரதினமேபத்துக், கூடுநீமரு ந்துவைக்கக் கொள்கியகுகையைத்தேளு, தேடுநீஉப்புச்சுன்னம் சிறந்தவேகுகையாய்ப்பண்ணி, ஆடுநீகடல்மேல்நின்ற அச்சுன் னமுள்ளேபூசே. (௨௨௭)

பூசியகுகையினுள்ளே புகட்டுமுன் மணியின்சுன்னம், மாசிய சில்லுப்போட்டு வளம்பெறச்சந்துசெய்து, ஓசியஉலையிலிட்டு ஊதி நீயொருநாளூதத்தாக்க, காசியவிமிளாதங்கம் கடுவீரஞ்சுன்னமாமே. ()

ஆமிந்தச்சுன்னந்தானும் அப்பனேரவிமிளாச்சுன்னம், ஆமிந் தச்சுன்னந்தானும் அப்பனேதங்கச்சுன்னம், ஆமிந்தச்சுன்னந்தா னும் அப்பனேவீரச்சுன்னம், ஆமிந்தச்சுன்னந்தொட்டு மாட்லாம் பாடலாமே. (௨௨௯)

பாடலாம்வாசியோடு பராபரத்தில்கூடி, ஆடலாம்அகண் டந்தாண்டி அளவில்லைகரையுமில்லை, நீட்லாமிதற்குமொக்கும் நி லைபொத்தவிமிளாச்சுன்னம், காடெல்லாம்பொன்னேயாகுங் கலந் துசவ்வாதுகூட்டே. (௨௩0)

கூட்டியசவ்வாதைத்தொட்டு குறைலறச்சரக்கில்பூசி, ஆட்டி யேவாட்டவாட்ட அறுபதுமணியேயாகும், நீட்டியகுருதத்தாட்ட நிமிஷத்தில்விறைத்துப்போகு, மாட்டியகல்லுமண்ணு மகாமே ரின்மாத்தகதாமே. (௨௩௧

ஆமிந்தக்குருவுக்கேதான் ஆண்மைதான்வந்ததென்னில், வாமிந்தவிசன்பக்க மாயிக்குமுதனுள்ளுதம், காமிந்தவிமிளாதானு க்கட்டியசெயமாங்கெந்தி, சோமிந்தவேதைபோம தூரத்தில்லா ரம்பாரே. (௨௩௨

பாரிந்தவிமிளாபட்டால் பலபலச்சிலையும்பொன்னும், பாரி ந்தவிமிளாப்பட்டால் பால்முதலாத்தந்தன்னீர், பாரிந்தவிமிளாப்ப ட்டால் பரமனுந்தியாகியாவான், பாரிந்தவிமிளாச்சுன்னம் படு முன்னேயெல்லாஞ்சாமே. (௨௩௩)

சாகின்றரசத்தைபெல்லாம் தனித்தனியினமேகண்டு, பாகி ன்றகளங்குபற்பம் பரவியமேழுமார்க்கம், தேய்கின்றசெந்தூரங் கள் செய்துநீமுடித்துக்கொண்டு, வாகின்றலோகங்கண்டு மாட் டிநீவேண்தபாரே. (௨௩௪)

பார்க்கவேசெயநீர்மார்க்கம் பாரப்பறையெனக்குச்சொன்னு ள், ஆர்க்கவேஅண்டச்சுன்னம் அதில்கடல்நுரையின்சுன்னம், சேர்க்கவேஉப்புச்சுன்னம் சிரந்திடுஞ்சூடன்சுன்னம், காரக்கவே காரச்சுன்னம் கடுஞ்சீனச்சுன்னங்கூட்டே. (௨௩௫)

கூட்டிநீயிணங்கன்சுன்னங் குலாவியசாரச்சுன்னம், ஆட்டு நீதாரிசிச்சுன்னம் ஆகியஒன்பதுக்கும், பூட்டிநீஒன்பதுக்கும் பு



ம்புலமொன்பதேதான், தாட்டுரல்சாரந்தானும் தனிபலம்பதி னெண்வையே. (௨௩௬)

வைத்ததையெல்லாமொக்க வளம்பெறமர்த்திப்பிராய், கை த்தலநெல்லிக்காய்ப்போல் கைகண்டசெயநீராகும், மொய்த்திடு ம்பனியில்வைக்க முதண்டசெயநீராகும், எத்தியகுபேரனுக்கு யீசன்தானளித்தநீரே. (௨௩௭)

நீரென்றுசொல்வதல்ல நீருக்குள்தீயாம்நீறு, காரென்றகு மூலாள்தேவி களித்திடுங்காதிறசொன்னாள், சேரென்றும்பூரத்து ள்ளே செயநீரைக்குத்திக்கிண்டி, வாரென்றகுகையிலிட்டு வளம் பெறவூதிப்போடே. (௨௩௮)

ஊதியப்பூரச்சுன்னம் ஒருஅண்டவோட்டில்நீறும், ஊதியப் பூரச்சுன்னம் ஒன்பதும்உரைத்துநீரும், ஊதியப்பூரச்சுன்னம் ஒ ருப்பொட்டில்சூதம்நீறும், ஊதியப்பூரச்சுன்ன மொப்பொன்றுமி ல்லைகாணே. (௨௩௯)

காணிந்தச்சுன்னமொன்று கடியதோர்வீரமொன்று, தேனிந் தத்தேய்க்கவுன்னிச் சிவப்பதாம்பாருபாரு, ஊனிந்தச்சிவப்புத்த ன்னை ஒருபொட்டில்தங்கம்நீறும், வானிந்ததங்கநீற்றை மாட்டி டாய்த்தரிசிக்கெனனே. (௨௪0)

தருசதானுமேலே சூட்டொன்றுதங்கச்சுன்னம், வரிசை யாய்ரவியிலபோட மகத்தானகுருவேயாகும், பரிசிக்கரவலோக ங்கள் படுமுன்னேதங்கமாகும், உரிசையாய்மதுவைக்கொண்ட உத்தமிசொன்னவாரே. (௨௪௧)

சொன்னமாஞ்சுன்னமொன்று தரிசியின்சுன்னமொன்று, பொன்னமாபூரச்சுன்னம் புருந்திடுவீரச்சுன்னம், அன்னயக்காரச் சுன்னம் அப்பனேசமனுப்பக்கூட்டித் தன்னயபொடித்தேபொன் ருய்த் தனிசிமிளடைத்துக்கொள்ளே. (௨௪௨)

அடைத்திடுங்குருவின்பேரு அப்பனேஅறையக்கேளு, கட த்திடும்லயகாயத்தில் நளினமாம்ருத்திரனுகும், படைத்திடும்அ ண்டமெல்லாம் படுமுன்னேவெந்துநீறும், கடைத்திடும்நவலோக த்தில் காட்டுமுன்சாம்பலாமே. (௨௪௩

சாம்பலாயெண்ணவேண்டாந் தனித்தனிக்குருவாம்பேரு, நாம்பலோநவலோகத்தில் நாட்டிதைதங்கமாகும், வேம்பலோதி

ன்னைந்தின்னை விளங்கியக்குழம்போல, வெப்பிலேவிதிக்குள்
வேண்டிய இயம்பவும்மறுக்கொதென்னே. (௨௪௪)

ஓடுங்காதசெய்நீர்க்குள்ளே கட்டியேசர்க்கனவாட்ட, குடுங்
காதமயின்மாகுந் தனித்தனிவேண்டியோடு, மடங்காதருந்தன்
னில் மாட்டுமுன்மைமனமாகும், அடங்காதமர்த்தாள்பர்தம் அறு
பத்துஞ்சுஞ்சித்தே. (௨௪௫)

சித்தெல்லாமடலாகுந் தேகமும்நிறுத்தலாகும், பத்தெல்
லாம்றையந்திதைப் பக்கிரவொன்றாய்ப்போகும், அத்தெல்லாம்
வாசியோடே அகண்டத்திலாட்டலாகும், வித்தெல்லாம்பொன்னே
வித்து விட்டவர்கெட்டவாரே. (௨௪௬)

கெட்டதுசெயநீராலேகெடியசிந்நங்கஞ்சுதன், கெட்டதுசெ
யநீராலே கெடிபடச்சரக்கெல்லாக, வெட்டதுசெயநீராலேகெவ
னிக்தப்பிறப்பிறப்பும், கெட்டதுசெயநீர்ப்பட்டுக் கெடியண்டந்
தானதாமே. (௨௪௭)

தான்பபட்டசெயநீர்க்குள்ளே கூட்டியவேதைமார்க்கம், ஆ
ன்பபட்டாலதுகாண்சொல்வான், அடியேனுமடியேனயா, வேன்
ப்பட்டபாணத்தொக்க, விரவியேடருக்கப்பெறல்லும், காள்பபட்
டதாபநீபம் கலங்கியபரிசமாமே. (௨௪௮)

பரிச்சித்தசெயநீர்பட்டால் பறையாயல்தாகஞ்சாகும், பரிச்
சித்தசெயநீர்ப்பட்டு பருகிடயிரும்புமீயம், பரிச்சித்தசெயநீர்ப்ப
ட்டால் பரிச்செனனும்செம்பினால், பரிச்சித்தசெயநீர்லக்கம்
பறையாமல்கட்டும்பாரே. (௨௪௯)

கட்டுமேசெயநீரென்றால் கரையில்லைகடையுமில்லை, ஒட்டு
மேயித்தமார்க்கம் உத்தமசீஷனுக்குத், தெட்டுமேதுரோகமான
சித்தையில்மனிதர்க்கெல்லாம், பட்டுமன்படாதுமுன்னே பளிச்
செனனும்றுமாற்றே. (௨௫௦)

மாற்றுமாம்பொன்னுமாகும் வணங்கியசீஷனுக்கு, வேற்று
மாங்குநிரையேறு மியல்பெறும்வாசிக்கும், தோற்றும்சகனி
மாங்குந்தாண்டி கறுதியும்கட்டந்தோன்றும், காற்றுமாக்கடிந்தொடு
ங்கவனமுமாகும்பாரே. (௨௫௧)

## சூத சுத்தி.

ஆதுமோசத்தைச்சுத்தி யப்பனேசெய்யுமார்க்கம், பாகுமே
அரசப்பட்டை பலகைப்பிறயிடித்தரைத்து, வாகுமேவில்லைபண்



ணி வளம்பெறச்சுட்டுச்சாம்பல், தாகுமேபடிரெண்டாக்கி தனிக்
குள்ளேஅமுறிவரே. (௨௫௨)

வாருநீயமுரிதானும் வளம்பெறபடியுமெட்டு, தேருநாயுரு
விச்சாம்பல் சேர்த்தொருபடியும்விட்டுக், காருநீமூன்றுனாளில் க
விந்தநீர்தெளிவைவாங்கி, யேருநீபெறித்துக்காச்ச இறுகியே
உப்புமாமே. (௨௫௩)

உப்பதுபல்மும்மூன்று உயர்ந்திடும்சூதமெட்டுக், கப்பதுக்கல்
வத்திட்டுக் கலந்துவார்குமரிச்சாறு, செப்பதுஅரைப்பாயப்பா சி
றந்திடமூன்றுநாள்தான், அப்புயகஞ்சதோஷம் ஆறொன்றும்
போகும்பாரே. (௨௫௪)

பாரிந்தச்சூதமொன்றுப் பார்சொன்பதிலைகும், வாரிந்த
ப்பொடிபோறபண்ணி வைவேழக்குழலுக்குள்ளே, காரிந்தயி
டையோடொக்கத் தனித்துதோர்விரம்போடு, சேரிந்தயேனிச்சா
றுஞ்சேர்க்கவேழ்துள்ளிவாறே. (௨௫௫)

வார்த்துதைக்கிண்டிமெள்ள வைத்திடிரவியில்தானே, சேர்
த்திடின்வாய்க்குச்சீலை சிக்கெனமண்ணைச்செய்து, நேர்த்தியாய்
நெல்லுக்குள்ளே நியிறவைத்தெரிப்பாயாகில், பாத்தியநாகந்தா
னும் பளிச்செனச்சூதமாமே. (௨௫௬)

ஆகின்றநாகச்சூதம் அப்பனேசெயிக்கக்கேளு, பாகின்றசா
தம்பொட்டி பருக்காரச்சுன்னமொன்று, ஏகின்றயிணங்கன்சுன்ன
மயிதுதானும்ஒன்றுபோட்டு, வாகின்றியனைப்பாயாகில் வளம்
பெறசெயநீராமே. (௨௫௭)

நீருக்குள்சூதம்வார்த்து நிலைபுறயெரிப்பாயாகில், காருத்த
வன்னிமிஞ்சுங் களங்கறும்சூதம்பாரும், சேராததசூதத்தோ
டே சிறந்திடும்நாகஞ்சேரு, காரொத்தகல்வத்திட்டு கடுகநீபொ
டியாய்ப்பண்ணே. (௨௫௮)

பொடிக்கிடைசாரங்கூட்டி புணர்ச்சியாயறைக்கும்போது, ம
டிக்கியவுப்புச்சுன்னம் மாட்டுநீசாரத்தோக்க, யிடிக்கியேயரைப்
பாயாகில் யிப்படுஞ்சாமம், தடிக்கியவீரம்போட்டு தனிப்ப
னிவைத்துப்பாரே. (௨௫௯)

வைத்திடும்காகம்ரெண்டு வருகுமோசக்தான்பாரு, கைத்தி
டைத்தும்போல்காக்க கபளித்துவிடுவிப்பீரா, பெத்திசையென்று
கேழ்க்கில் பேழுதிரம்விடுவீர்சேறு, பத்திசைப்பரிவேதைப் ப
மூக்கிறதுசிறைக்கேளே. (௨௬௦)

கேளிந்தச்சூதத்திற்கு கெடிறுனுக்கொன்றேதங்கம், தோ ளிந்தவொன்றாய்க்கூட்டிதொலைவானசெயநீர்வார்த்து, வாளிந்தப் பூம்போட்டு மாட்டிநீயெரிப்பாயாகில், வேளந்தத்தங்கமுண்டு விடுபடும்யானைப்பாரே. (உசுக)

யானையாஞ்சூதங்கேளே படவிலைபரிசவேதை, பூனையரம்ந வலோகங்கள் பொட்டினால்தங்கமாகும், காணவேதிரிந்துமூ ன்றுகனவெருந்தன்முயுஞ்சட்டி, மானமேபோக்கவேண்டாம் வ கையுடனித்தைப்பாரே. (உசுஉ)

பாரிந்தச்சூதத்துள்ளே பரிதன்னைக்கூட்டிக்கூட்டி, விரிந்த விடுவிப்பீராய் வெகுமெத்ததூரமோடும், சேரிந்தச்சூதமார்க்க ந்தேவிக்குச்சிவன்தான்சொன்னார், காரிந்தக்குழலாளென்மேல் கடாக்ஷித்தேயளித்தவாறே. (உசுங)

## லிங்கக்கட்டு.

வாறுகேளிங்கங்கட்டி வளம்பெறும்வேதைபோடக், கூறு கேளுப்புரெண்டு கொடியதோர்காரம்ரெண்டு, தாறுகேள்சார மொன்று தனித்திடித்துருசியொன்று, ஆறுகேள்பலமாருக யம ட்டிநீபொடியாய்ப்பண்ணே. (உசுச)

பண்ணியபொடியைமுன்று பங்குதால்வைத்துக்கொண்டு, த ன்னியலிங்கந்தானுந் தனித்தொருபலமேவாங்கி, அன்னியலிங்க த்துக்கு அப்பனைபத்துக்கொன்று, தன்னியதுரிசிசுன்னந் தாப் புநீர்குழைத்துப்பூசே. (உசுரு)

பூசியேவாட்டிக்கொண்டு கைம்படக்காண்டிக்குள்ளே, ஆசி யேமுன்றுபங்கி லப்பனைவெருபங்கிட்டு, நேசியேநீயில்வைத்து நேருடன்வாட்டிவாட்டிக், காச்சியரெண்டுபங்கு களம்கறவாட் டிப்போடே. (உசுசா)

போட்டபின்லிங்கங்காணீர் புகழ்பெற விறுகிக்கொள்ளும், ஆட்டபின்லிங்கத்துக்கு அதிற்பாதிச்சாரசுன்னம், பூட்டப்பா மேலேநீயும் புகழ்ச்சட்டிதனிலேவைத்து, நீட்டிபகருக்குப்போ டநேர்மையின்பாலைக்கேளே. (உசுஎ)

கேளுநீதுண்டிப்பால்தான் கெடிமுன்றுப்படியேவாங்கி, வா ளுறக்காரச்சுன்னம் வளமணாப்புடமேபோட்டு, தேளுசெம்பரு த்தம்பூவை சிறக்கமுன்னூறுபோட்டு, வேளுயிர்பிழந்துபோடு வெளுத்துப்போம்பூவைப்பாரே. (உசுஅ)



பூவினின்சாரமெல்லாம்புணர்ச்சியாய்ப்பாலேயுண்ணும், கா வுடன்பாலின்சாரங் கடளிக்கும்லிங்கம்பாரு, தேவுடப்பாலைநீயும் சிறக்கவேசுருக்குப்போடு, ஆவுடன்லிங்கந்தானு மப்பனேமுழு க்கட்டாமே. (உசுகூ)

கட்டியலிங்கமொன்று காட்டொன்றாதங்கத்தாடே, ஒட்டி யரெண்டுஞ்சேர்ந்து உருகிடுமிடைபோகாது, அட்டியரெண்டுங் கூட அப்பனைகுருவுமாச்சு, ஒட்டியவேறைபோட உரைக்கிறே ன்கண்டுகொள்ளே. (உஎய)

கண்டிடுஞ்செம்புதானுஞ் சடிதோர்வெள்ளியேட்டு, குன்றி யேயுருகிநின்ற வுக்கமஇரும்புவொன்று, அண்டியசெயசாரந்தா னப்பனையதுவுமிட்டு, மண்டியலிங்கந்தங்கம் மாகுருவொன் றுபோடே. (உஎக)

போட்டபின்னாகிப்போட்டு போடதில்சமனாய்த்தங்கம், ஆ ட்டபின்மாத்துக்கேழ்க்க அப்பனைபத்துக்காணும், நீட்டியவே ல்போல்கண்ணாள் தேவிதானளித்தாள்பார்த்தேன், வட்டியகா யசித்தி உரைக்கிறேனறிந்துகொள்ளே. (உஎஉ)

கொள்ளிந்தக்கல்பர்தானுங் குலாவியேநினமேகுன்றி, தெ ள்ளிந்தப்புளிப்புமுப்பு சார்ந்திடும்பெண்ணு போக்கு, விள்ளிந் தமாய்கையான வீட்டையும்விரைந்தபின்னைத், தெள்ளிந்தமாய் கைநீக்கிச் சிறந்துநீகல்பங்கொள்ளே. (உஎங)

கொண்டிடத்தேகந்தானுங் குலாவியசிகப்பேயாகும், மண் டியமயக்கமில்லை மற்றொருபாதையில்லை, பெண்டியநோய்களெல் லா மிதுபடப்பொடியாய்ப்போகும், தண்டியேயுண்டுநித்தம்சூ திக்கில்சித்தனாமே. (உஎச)

ஆமென்றதங்கலிங்க மாடுறமார்க்கங்கேளு, வாமென்றசெய ளுகத்தில் மாட்டிகைதனாலுக்கொன்று, தாமென்றவெள்ளிசெம்பு தலிப்படவுருகும்போது, நாமென்றநாலுபத்தில் நாட்டிநீவேதை பாரே. (உஎரு)

பாரிந்தாகலிங்கம் பருதியகளைக்குச்சூதம், வாரிந்தக்கல் வத்தோடே மர்த்திக்கப்பொடியாமுன்னடை, தேகிந்தயிடைக்கிரெ ட்டி சிறந்திடுங்கெந்திபோட்டு, தாரிந்தத்தங்கங்கூட்டித் தனிக் குப்பிபெடுத்துப்பாரே. (உஎசா)

பார்த்திடுமோனன்போலே படிந்தசெந்தூரந்தன்னை, பேத்
திடுநவலோகத்தி லிடப்பட நாற்றிற்கொன்று, கோர்த்திடுமே
தையோடுங் குலாலியத்திசையாத்தருகும், ஆற்றிடுநிறத்தைப்பாரு
ஆற்றோடார்வாதிதானே. (௨௭௭)

## நவலோகச் சுன்னம்

தானானவிணங்கன்சுன்னஞ் சாத்திரைரநாகத்துக்குக்; கானன்
புடத்தைப்போடு கைகண்டசொரக்சுன்னந், தேனானசெம்புமே
லே சொரசொரச்சாரச்சுன்னம்; வானானபுடத்தைப்போட வள
ர்செம்புச்சுன்னமாமே. (௨௭௮)

ஆமிந்தஇரும்புமேலே அப்பிடுவீரச்சுன்னம், தாமிந்தப்புட
மேபோடத் தவளம்போல்சுன்னமாகும், காமந்தக்கருமால்தேவி
கடுகியசுன்னந்தன்னைச், சேமந்தவங்கம்ரெண்டில் சேர்த்திடச்சுன்
னமாமே. (௨௭௯)

சுன்னமாம்வங்கச்சுன்னஞ் சூட்டிடவெள்ளிமேலே, சுன்ன
மாமேசிதம்பாரு நலக்குறவெளுப்பேயாகும், சுன்னமாங்குதச்
சுன்னஞ் சூட்டிடப்பரியேசுன்னஞ், சுன்னமாநவலோகங்கள் து
டிபடக்குருவுமாமே. (௨௮௦)

துடிப்பட்டவெழுலோகம் சுயப்பிறப்பாணலோக, மடிப்பட்
டார்லோகம் வகைகளுஞ்சொல்லவென்யானும், பிடியிட்டசெம்பி
லிவங்கம் பெருகிவெங்கலமேயாச்சு, அடியிட்டசெம்பிலிய மணைந்
திடத்திராவுமாமே. (௨௮௧)

ஆமிந்தசெம்புக்குள்ளே அனுமிடில்ராகந்தானுங், காமிந்த
க்குட்வனுகும் கண்டவர்பொன்னேயென்பார், சேமிந்தலோகந்
தானுஞ் செம்பியேயுருக்குமாகும், ஓமிந்தப்பதினென்று
லோகமுமறிந்திடாயே. (௨௮௨)

அமிந்திந்தலோகந்தன்னை அது அதுவெவ்வேரக்கட்டத்,
தெரிந்திந்தவுரைப்பேனப்பா நினைவுற்றுநீதான்பாரு; பரிந்திந்த
சாரச்சுன்னம் பாங்குடன்லோகச்சுன்னம், பிறிந்திந்தக்காரங்க
ட்டிப் பேரண்டமுன்னீர்வாரே. (௨௮௩)

வார்த்துநீஅரைக்கும்போது வாழ்முன்றுஞ்சமனுப்கூட்டு,
போர்த்துநல்நாகந்தன்னை யில்புறக்ககட்டாய்போடு, போர்த்துந



ல்நாகமேலே புகமுறப்பரிசம்பண்ணி, தோர்த்துரப்புடங்கள்
போடச் சுகமுரச்சாரஞ்சாமே. (௨௮௪)

சாகுமேசாரமாகி தனிபண்டம்பொன்னேயாகும், சாகுமே
சாரமென்று தவித்தாலுங்கட்டாதப்பா, சாகுமேசாரமாக்க
ஞ் சந்திரமவுலிகண்டாற், சாகுமேசாரங்கட்டச் சாத்தினேன்
சாத்தினேனே. (௨௮௫)

சாத்தவேவங்கவீயம் தனித்தனிக்கட்டக்கேளு, வத்தவே
யிணங்கன்சுன்ன மிபல்மாலின்தேவிச்சுன்னம், கோத்தவேகார
ங்கூட்டிக் கொட்டிவெண்டமுன்னீர், சேத்தமுன்மருந்துமூன்று
ஞ்சேர்சமனுகக்கூட்டே. (௨௮௬)

கூட்டியமருந்துதன்னைக் குலாவியேயிருவங்கத்தில், ஊட்டி
யேபூசிப்பூசி யொவ்வொன்றுய்ப்புடத்தைப்போடு, தீட்டியவங்கம்
ரெண்டுஞ் சினத்திலேகட்டுங்கட்டும், ஆட்டியவேதைகாணா யட
ங்காதேயப்பாகேளே. (௯௮௭)

## செம்பு ஊறல்போக

கேளுநீசாரச்சுன்னம்கெடிபடுநாருசிச்சுன்னம், வாளுநீகார
த்தோடுவெளம்பெறச்சமனுய்க்கூட்டி, தேளுநீசெம்பின்மேலேசிற
க்கவெண்கருவாற்பூசு, ஆளுநீபுடத்தைப்போட யப்பனேயூறல்
போமே. (௨௮௮)

போதுமேசெம்பினூறல் பொல்லாதுபோகாதப்பா. போகு
மேவூறல்போனால் பொன்னாகுங்குருவுமாகும், போகுமேயூறலா
னுற்புகழ்காயச்சித்தியில்லை, போகுமேயூறலானல்பொன்போலே
வெளுக்கும்பாரே. (௨௮௯)

பாருநீவீரச்சுன்னம் பரிவுடனுப்புச்சுன்னந், தாருநீகாரங்
கூட்டிச்சமனுகக்கருவிலாட்டி, வருநீயிரும்புமேலேவியல்படப்பூ
சிவாட்டிக், காருநீயுருகவப்பா கண்விட்டியாடும்பாரே. (௨௯௦)

ஆடுமேயிரும்புமானு லண்டமும்பிண்டம்பொன்னும், ஆடு
மேயிரும்புமானு லாவில்லைவேதைகேளு, ஆடுமேயிரும்புமானு
லப்பனேகாயசித்தி; ஆடுமேயிரும்பேதன்னி லப்பிரேகசத்து
காணே. (௨௯௧)

காணிந்தவிரும்புதானுங்கண்விட்டேயுருகுமப்போ, ஆணிந்த
த்தங்கந்தானு மப்பனைசமனுய்க்கூட்டு, பேணிந்தரெண்டுங்கூடி

ப் பிறந்ததுக்கெட்டுக்கொன்று, வாணிர்கத்துத்தம்போடு மகத்
தானலிங்கம்போடே. (உகூஉ)

போடுநீயிதற்குள்ளிரம்புசமுடன்ராஜவற்கம், ஆடுமேதுரிசி
போடு அப்பனேமாவின்தேவி, ஊடுநீசூதமொக்க வூட்டிப்பூரக
ச்சத்து, தேடுநீபெட்டும்பாதி சிறக்கநீசேர்பாயூட்டே. (உகூங)

வூட்டிடலோகத்தங்க மொவ்வொன்றாய்விழுங்கும்பாரு, ஆ
ட்டியகோழிக்கிட்ட வப்பனேதவிதபோலே, நீட்டியேயிரும்புக்
காருஞ் சேர்ப்பதுபெட்டுக்கொன்று, மூட்டியகளங்கவேதை மூப்
பதுக்கொன்றுபோரிடே. (உகூச)

போடுநீவெள்ளிமேலே பொலிவுறமாத்துப்பத்து, தேடுநீ
செம்புமேலே சிறந்திடும்பத்துக்கொன்று, யேடுநீகுடவுன்மேலே
விருபதுக்கொன்றுபோடு, ஆடுநீவேதைபாரு மப்பனேயடங்கா
தென்னே. (உகூரு)

## நாகத்தொழிற் செந்தூரம்.

அடங்காதநாகத்துக்கு மப்பனேதொழிலக்கேளு, வடங்கா
தங்கமொன்று மாட்டுரெண்டேடைபோரகம், தடங்காதமுன்
றுக்கொக்க தாக்கிடுசெயசூதத்தைப், படங்காதவெல்லாம்ரெட்
டிப்பரிவுடன்கெந்திகூட்டே. (உகூசு)

கூட்டியேயெல்லாமொக்கக் குலாவியேபொடியாப்பண்ணி
ஆட்டியேகுப்பிக்குள்ளே யமாவேயடுப்பிலேற்றி, நீட்டியேதீ
யைப்போட்டுச் சிவந்திடும்பதமாம்பாரு, மூட்டியேயிருசாமத்தி
ல் முட்டையுமதுவும்வையே. (உகூஎ)

வைக்கவேமறந்துபோனால் மகத்தானதெனதையப்பா, தக்
கவேகருக்கிக்குப்பி தணலிலேபோடுவாள்பார், மைக்கதோர்பச
க்கள்வைத்தால் வாதமும்பலியாதப்பா, கைக்கதோரெட்டிக்கா
ய்போல் கபளிக்காள்கபளிக்காளே. (உகூஅ)

கபளித்துக்கொள்ளாளாகில் கண்டதோர்வாதம்பொய்யாம்,
கபளிந்துக்கொள்ளாளாகில் கடியதோர்சித்திபொய்யாம், கப
ளித்துக்கொள்ளாளாகில் கடுஞ்சுன்னங்காரம்பொய்யாம், கபளித்
துக்கொள்ளாளாகில் கவனமுற்கருந்தும்பொய்யே. (உகூகூ)

## பூசை.

பொய்யர்ச்சேயாத்தாள்பாதம் புகழுறப்பூசிக்காதால், மெய்
யர்ச்சேயவனோசேர்க்கிளைந்துமேதாவையுண்டால், வையாச்சவா



சிதாலுங் கடந்ததுகவனம்பாரு, தையர்ச்சவேதைதாலுஞ் சத
கோடிக்கேசும்பாரே. (ஙா)

## ஈயக்கட்டு.

பாருநீயீயக்கட்டில் பாச்சிடுபாதிதங்கம், சேருநீயுருகும்
போது செயம்பட்டலிங்கந்தானும், தாருநீதங்கத்தொக்கத்தனி
யிடைலிங்கம்போடு, வாருநீவாங்கிப்பார்க்க வளமுற்றகளங்கமா
மே. (ஙாக)

ஆகின்றகளங்கைக்கேளு அப்பனேவெள்ளிசெம்பில், தாகி
ன்றமுப்பத்தொன்று தாக்கிடுமாத்துமெட்டு; வாகின்றயுப்பை
மெள்ள வளமாகச்சுட்டுபோடு, போகின்றதொன்றுமில்லை புறை
வரத்தங்கமாமே. (ஙாஉ)

ஆமிதுகட்டுவங்கத் தங்குள்ளவேதைகேளு, தாமினிவலிந்த
லிங்கந் தானொன்றுதங்கமொன்று, சேமினிசெம்புரெண்டு சிறந்
திடும்வெள்ளிரெண்டு, ஓமினியொன்றாய்க்கூட்டி யுருக்கிப்பார்மா
த்துமேழு. (ஙாங)

எழென்றுசொல்லியெங்கும் எழைகாளிதக்குள் கேளும்,
வாவொன்றநாகமொன்று வளம்பட்டவங்கமொன்று, தாவென்ற
தங்கமொன்றுதனிச்செயசூதம்ரெண்டு, நாவொன்றுமுருக்கிமெள்
ள நலம்பெறமணிபோற்செய்யே. (ஙாச)

செய்ததோர்மணிக்கிரட்டி சேர்த்திடுகெந்திதன்னை, பை
ய்யதோர்மணிக்குப்பாதி பாச்சிடுசிலையைநீயும், கைய்யதோர்
மூன்றாய்க்கூட்டிக் களங்கறப்பொடியாப்பண்ணி, ஐயதோர்க்
குப்பிக்குள்ளே யடைத்துநீயெரித்திடாயே. (ஙாரு)

எரித்திட்டபதத்தைப்பாரு இயல்புறச்சிவப்பாமப்பா, ம
றுத்திடசெந்தூரத்தை மாட்டுநீலோகத்துள்ளே, திருத்தியமாத்
துக்கேளுதிசைபெறதிசைமாத்தாகும், அரித்திடஹேமவித்தை
யப்பாகேள்ரசிதமென்னே. (ஙாசு)

## ரசித வித்தை.

என்னதோரசிதமார்க்க மியல்புடனரைவேன்கேளு, தன்ன
தோர்வெள்ளியொன்று தனிக்கட்டுவங்கமொன்று, தென்னதோ
ர்செயச்சூதத்தைச் சேர்த்திடுமிதற்குள்ரெண்டு, மன்னதோர்பல
க்கள்ளாது மாவுடன்பொடியாப்பண்ணே. (ஙாஎ)

பண்ணியபொடிபிசிறொடு பாச்சொன்னப்பிரகசத்து, தன்னி யபலங்களஞ்சுசர் தனியொக்கயுருக்கிமெள்ள, தென்னியப்பொடி க்குள்சேர்க்கச்செப்புறேன் மருந்துகேளு, அன்னியபலமாச்தே வியந்திடைவெள்ளைசேரே. (௫௦௮)

சேர்த்திடுமிதுக்குள்காரஞ் சிறக்கவேபலமொன்றாக, ஆர்த் திடுமதுகையக்கே வெப்பனேபலமெட்டாச்சு, வார்த்திடுளருக் கும்பாலு மண்சதிர்க்களிப்பாலும், போர்த்தியேடரைத்துக்குப் பிப் புகமூடனடுப்பிலேற்றே. (௫௦௯)

ஏற்றியேயெரிப்பாய்நீயுமியல்பெறவாறுசாமம், மாற்றியே குப்பிவாங்கி மருந்துக்குள்பாலைவார்த்து, தேற்றிதியேயரைத்துமெ ள்ளச் செறுகவேவில்லைபண்ணிக், கோற்றியேகுகைக்குளிட்டுக் கொட்டியேபுடத்தைப்போடே. (௫௧௦)

போட்டிடில்பற்பமாகும் பொலியுற்றக்குருவாமையா, ஆட் டிடில்வங்கங்காஞ்சு யாட்பரிலன்னூற்றொன்று, தேட்டியநாகமீ யம் சிறந்திடும்முன்னூற்றொன்று, ஒட்டியசெம்புலோகம் பொ ருளூற்றுக்கொன்றுபோடே. (௫௧௧)

ரசிதச் சுன்னம

போடவேயஞ்சலோகம் புகழ்பெறவெள்ளியாகும், நீடவே வெள்ளிநாளும் நிலைபதினாறுமாத்து, ஊடவேரசிதந்தானும்வொ வ்வொருமலையாம்பாரு, ஆடவேவாசிகண்டோர்க் கருளெல்லாஞ் சித்தியாமே. (௫௧௨)

சித்தியாஞ்சுன்னமார்க்கஞ் செய்யவேதண்மைகேளு, அத் தியவாசிக்கொக்கு மயிந்தபார்க்கடிதாஞ்சுன்ன, மத்தியஅண்ட ச்சுன்னம் வளம்பெறலூங்கிபூதி, யெத்தியபலமதொன்று எடுசுன் னநீரில்வையே. (௫௧௩)

வைத்திட்டதெளிவைவாங்கி மாட்டவேமருந்துகேளு, கை த்திட்டாபூரங் கடியதோர்வீரஞ்சாரம், மொய்த்திட்டபடிகி யோடு முய்ன்றிடுமூரமேருதம், பைத்திட்டபுழுகோடொக்கப்ப றவியகுருவண்டேட்டே, (௫௧௪)

கடுஞ்சுன்ன அண்டநீர்

ஊட்டியமருந்துதானும் ஒன்பதுமிடையேகேளு, ஆட்டியவ கையொன்றொன்று மப்பனேவிராகனென்று, நீட்டிமுன்சுன்னநீ



ரால் நேர்படயரைத்துக்கொண்டு, கூட்டியேகுழம்புபோல கொ ட்டொருசேரைவையே. (௫௧௫)

வைத்திடுஞ்சேரைக்குள்ளே வார்த்திடஅண்டங்கேளு, கத் திபவண்டமூன்னீர் கடுகவொன்பதுநீவாரு, மறுத்தியேயொன்று ய்க்கூட்டி மர்த்திக்கச்செயநீராகும், பத்தியசெயநீர்மார்க்கம் பா ரப்பாவறியும்பாரே. (௫௧௬)

பாரிந்தசெயநீர்க்குள்ளே பருகியதுருசிதோய்ப்பாய், பாரி ந்தசெயநீர்க்குள்ளே பருகியகாரந்தோய்ப்பாய், பாரிந்தசெயநீர் க்குள்ளே படிகியுந்துவைத்துப்போடு, பாரிந்தசெயநீர்க்குள்ளே பண்ணையுந்துவைத்துப்போடே. (௫௧௭)

கடுஞ்சுன்ன போக்கு

போடவேநாலுங்கட்டிப்பொருமித்துசன்னமாகும், நீடவே நாலுந்தான்காண் நிலைபுற்றநாலுவேதம், ஊடவேநாலுக்குள் ளே ஆற்றியாயினதைக்கேளு, தேடவேயாயின்பேரு செப்புறே ன்செப்புறேனே (௫௧௮)

செப்பியதுரிசிச்சுன்னம் சேர்சமன்சாரத்தப்பு, ஒப்பியச்சீ னச்சுன்ன முடன்ரெண்டுவுப்பில்புக்க, கப்பியபண்ணைச்சுன்னங் காட்டிடுபூரன்மேலே, தப்பியகாரச்சுன்னஞ் சவுக்காரமிந்துப் பாரே. (௫௧௯)

உப்பிடவாலுங்கட்டு முறந்திட்டரவியிற்போட, ஒப்பிடச்சு ன்னமாகும் ஓராறுநாலும்பாரு, செப்பிடத்திசைச்சுன்னத்தில் செயகண்டிதாமவேதைக், கப்பிடரவியிற்சுன்னங் காய்மட்டுங்கர த்துக்கொள்ளே. (௫௨௦)

கொள்ளுநல்சாஸ்திரங்கள் கூடிற்றுஆறுமாறுய்த், தெள்ளு நற்பத்தும்பத்து சேர்ந்திடுவீரமொன்று, அள்ளுநற்கனிபோலொ க்கு மப்பனேபொடியாய்ப்பண்ணிப், பொள்ளுநற்பதினெட்டா ன பூரணப்பொருளைக்கேளே; (௫௨௧)

கேளுநீகெளரிதந்தி கெடிபடச்சிலைமால்தேவி, ஆளுநீவீர ஞ்சிங்கி யகண்டிடும்வெள்ளைலிங்கம், தோளுநீதொட்டிபுத்து அ லங்கியபொன்னினப்பார், வாளுநீகோழிகெந்தி வழங்கியகௌரி யாமே. (௫௨௨)

ஆமிதுநிமிளையோடு மடங்குகார்முகிலேயகூட்டி, போமதாரா சர்வர்க்கம் புகழ்பெறக்குதிரைப்பல்லு, நேமதுபெருமைனுக்கு நேர்படபதினெட்டாச்சு, தாமதுபுராணமார்க்கஞ் சரக்கிதுயறிந் துகொள்ளே. (௩௨௩)

கொண்டதோர்பதினெட்டுக்குங் கூட்டுமுன்பத்துச்சுன்னம், அண்டநீர்தன்னைவார்த்து யறைத்துநீயப்புமப்பா, பண்டதுவெ வ்வேறாகப் பருதிகொளுக்கொன்று, அண்டவேரவியிற்போட்டு யலறவேகர்ச்சிடாயே. (௩௨௪)

காஞ்சிடுங்காலத்துள்ளே கற்கியேபதினெட்டப்பா, மாஞ்சி டேடங்தும்பாரு மகுத்துவஞ்சொல்லக்கூடா, ஆஞ்சிடுஞ்சித்தவர் தி யகண்டத்தைப்பார்த்தோர்க்கெய்தும், பேஞ்சிடுஞ்சோமன் மாரி பிறப்பென்றும்பிறப்பதர்பாரே. (௩௨௫)

பாருநீபுராணமாளப் பதினெட்டுமூதச்சுன்னம், பாருநீபதி னெட்டாலே பலபலகளங்குமாகும், பாருநீபதினெட்டாலே பா வுசெந்தூரமாகும், பாருநீபதினெட்டோடே பரவியவினத்தைக் கூட்டே. (௩௨௬)

கூட்டியமுறைகள்தப்பில் கொடிநானதுரைகள்போய்யாம்; கூட்டியமுறைகள்தப்பில்கொடுக்காதுவர்ணம்போகும், கூட்டியே யிடையேயிஞ்சில்கொடுஞ்சரக்கெல்லாந்தூளாம், கூட்டியயரைப்பு மிஞ்சில் கொடுஞ்சண்டிப்பாகும்பாரீர். (௩௨௭)

பாருநீகடுஞ்சுன்னத்தை பகருவேன்பரிவாய்நோக்கு, தாரு நீசீனச்சுன்னந் தனியண்டநீரைக்குத்தி, கோருநீயுப்புமேலே கு மட்டினுற்கொண்டுபூசி, ஆறுநீரவியிற்போட்டு மமைத்திலேகு கையில்வையே. (௩௨௮)

வைத்துநீவுலையிலிட்டு வளம்பெறவூதுவூது, கத்தியயுப்புதா னுங் கடுஞ்சுன்னமாகும்பாரு, தத்தியநீரைக்குத்த தவளம்போ ல்நீறுமப்பா, அத்தியவுப்புச்சுன்ன மருபதுங்கட்டுந்தானே.

காணுநீகாரச்சுன்னங் கட்டொன்றுயிணக்கன்நாலில், பூணு நீயண்டநீரால் பொலிவுறயரைந்துப்பூசி, தோணுறரவியிற் போடுசுகப்பட்டக்குகையிலிட்டு, ஊணுறவூதுவூது வுறுதியாச்சு ன்னமாமே. (௩௩0)

சுன்னமாந்துரிசிச்சுன்னம் சுகப்பட்டசாரம்நாலில், பண்ணை மாயண்டநீரில் பரிவுடன்பூசிப்போடு, தன்னமாய்ரவியிற்காய்ந் து தனியுறச்சென்றபின்பு, மண்ணமாம்குகையிலிட்டு வளம்பெ றவூதவூதே. (௩௩௧)



ஊதவேசூடன்சுன்னம் ஒன்றினுற்காரத்தப்பி, பாதவேரவி யிற்போடு பட்டுள்ளேயுருகுமட்டும், நீதவேகுகையிலிட்டுச் சி தையாமலூதுவூது, ஆதவேகாரச்சுன்னத் தாண்மையையறிந்தி லேனே. (௩௩௨)

## சீனச் சுன்னம்.

அறிந்துநீபூரச்சுன்ன மப்படிசீனன்மேலே, பிழிந்துநீரவியி ற்போட்டு பெலமெல்லாம்போகுமட்டும், மறிந்துநீகுகையிலிட் டு வளம்பெறவூதுவூது, கரிந்துநீசீனச்சுன்னம் கடுஞ்சுன்னமாகு ம்பாரே. (௩௩௩)

பாருநீசாரச்சுன்னம் பாச்சினுல்துரிசிமேலே, சேருநீரவியி ற்போட்டு செந்தூரங்காய்ந்தபின்பு, தாருநீகுகையிலிட்டுத் தா க்கியேயூதுவூது, போறுநீசுன்னமாறில் பூட்டிவாயண்டநீரே.

அண்டத்தினீரைவிட்டா லாகாதுகடிதாஞ்சுன்னம், பண்ட த்தச்சரக்குக்கெல்லாம் பரவுசத்துருவைப்பார்த்து, ஒண்டித்துவூ துவூக உயர்ந்தநற்சுன்னமாகும், கண்டுக்கப்புடினுல் சொன்னே ன் காட்டுநீவியும்பாரே. (௩௩௫)

பாருநீயிந்தமார்க்கம் பதைப்புறுங்கடிதாஞ்சுன்னம், சேரு நீயிதக்குள்வேதை சிவன்சொல்லதேவிகேட்டாள், ஆரினியறி யப்போரார் அறிந்தவர்சித்தரப்பா, தேருநீதிருநாளாகச் செப்பு றேன்வாதக்கேளே. (௩௩௬)

கேளுநீகுதக்கூட்டி கெடிபடவேதைபோட, வாளுநீகறுத் தநாபி வளம்பெறயுரைத்துக்கொண்டு, சேளுநீபூணுகுசட்டஞ் சேர்ந்துறமேலேபூசி, கோளுநீதீயிலாட்டிக் குமுறவேயுளுகை வாங்கே. (௩௩௭)

வாங்கிநீபுணுகுதன்னை வைத்திடுபறணிக்குள்ளே, தேங்கி யகழுஞ்சிருநஞ் சிறக்கவார்ப்பிங்காணுக்குள், ஓங்கியச்சாரச்சுன் ன முயர்ந்தமஞ்சாடியொன்று, பாங்கியிப்புணுகுதானும் பரப்பு வோர்பணமேதூக்கே. (௩௩௮)

தூக்கிடுகெந்திபாதி சுகப்பட்டபூரம்பாதி, தாக்கிடுசாரப்பா தி கனிந்திடும்சாரம்பாதி, பாச்சிடுதுக்கமெல்லாம் பணமறைப்

ணைமேதூக்கம், ஆக்கிடுவெல்லாங்கூட்டி அடவுடன்பார்த்திப்பரி
யே. (௩௩௯)

மர்த்திக்கில்சூதந்தானும் வளம்பெறும்வெண்ணெயாகு,மன
த்திக்கக்கிளிபோல்கட்டி மற்பிடிசூடன்தீப, மத்தித்தசூடன்கட்
டித் மறிப்படவிறுகும்பாரு, கொத்தித்த கரண்டிக்குள்ளே கொ
ட்டினீயென்னைகுத்தே. (௩௪0)

குத்தியேதணலில்வைத்து குழையவேஊதும்போது, பத்தி
யேயுருகும்பாரு பதங்கண்டுகொட்டிக்கொண்டு, அத்தியேகுகை
யிலிட்டு அதட்டியேஊதும்போது, பொத்தியேகாரம்போடு பொ
ன்போலேஆடும்பாரே. (௩௪௧)

பாரிந்தச்சூதராசன் பகலிரவொன்றாய்பண்ணும், பாரிந்தச்
சூதராசன்பறக்குமேயானைக்கொன்று, பாரிந்தச்சூதராசன்பகிரா
தபொருளிலேறும், பாரிந்தச்சூதராசன் படிமுன்னேயேமா
மே. (௩௪௨)

ஆமிந்தயீசன்கையி லணைத்திடுமாதிசேஷன், வாமிந்தயீசன்
கையி லணைந்திடுமாதிசேஷன், வாமிந்தச்சிங்கிப்பூட்ட மப்பங்கிய
வாறுபோலத், காமிந்தச்சித்தரும் தனிச்சித்தன்சிவனேகண்டா
ய், யேமிந்தரசத்தில்பூட்ட பெரிசிங்கிமுறையைக்கேளே. (௩௪௩)

கேளுநீதுரிசிசுன்னம் கெடிபடக்களஞ்சிவொன்று, வாளுநீ
சலாதுவொன்று வளம்பெற்றபுழுகுவொன்று, தோளுநீவொன்றாய்க்கூ
ட்டித்தூலக்கவேமத்தித்தப்பர, வேளுநீபீங்கான்கிண்ணிவிரவியே
அப்பிவையே. (௩௪௪)

அப்பியேயரவியில்வைத்து பதமேமேலகாந்திக்காட்டு, ஒப்பி
யவுள்ளேசென்று வுருகியேதயிலமாகும், செப்பியத்தயிலத்துள்
ளே சேர்த்திடமருந்தைக்கேளு, கப்பியகாரசாரம் கடுஅரிதாரங்
கூட்டே. (௩௪௫)

கூட்டிடுகெந்திகொட்டி கொடிதானவீரம்பூரம், ஆட்டிடுநா
பிபோடு வப்பனேவரமுங்கேளு, நீட்டியவொன்பதுக்கான நிற
மொருப்பணமேதூக்கி, ஊட்டிடுபேதயிலத்துள்ளே உரைத்துநீக்கு
ழப்பிக்கொள்ளே. (௩௪௬)

கொண்டிந்தயிலப்பேரு கோடியேரிசிங்கிதான்காண், தன்
டியெப்போட்டால்சூதந் தலைச்சுற்றிவெறைத்துப்போகும், ஒன்றி



ந்தயிலங்குத்தி புறவாகமர்த்திச்சப்பா, பண்டிடுங்கிளிபோல்க
ட்டிப் பருந்சூடன்தீபில்வாட்டே. (௩௪௭)

வாட்டிப்பின்சூதந்தன்னை வளமானகரண்டிக்குள்ளே, நீட்
டிப்பின்னெண்ணெய்குத்தி நிலைக்கவேயுருக்கிவாரு, பூட்டிப்பின்
குகைக்குள்காரம் போட்டதையுருக்குமப்பா, ஊட்டிப்பின்னுருக்
கச்சூதம் ஒளிவிட்டுஆடும்பாரே. (௩௪௮)

பாரிந்தச்சூதந்தானும் படிமுன்னேதூரவோடும், சேரிந்தச்
சூதம்போலே செகத்திலேகட்டுமில்லை, ஓரிந்தத்தழைவேர்சத்தா
லுருக்குவார்சுருக்குசெய்வார், யாரிந்தமடையரப்பா கடுஞ்சூதக்
கட்டென்பாரே. (௩௪௯)

கட்டென்பார்சுருக்குப்போட்டுக் கண்கெட்டாப்போலேநி
ற்பார், மட்டென்பார்சூதந்தானும் மயினம்போலச்சகென்பார், வி
ட்டென்பார்சொட்டிச்சென்பார் விடுபட்டசூதபானை, தெட்டென்
பார்வாதமெல்லாந் தெரிகெட்டுத்திகைத்தவாறே. (௩௫0)

வாறுகேளாடசிங்கி வகையினிசொல்லக்கேளு, கூறுகேள்
புழுகுவொன்று கூட்டதில்சவ்வாதொன்று. தேறுகல்லிந்துவொன்று
சிறுகோழிப்பீசமொன்று, தாறுகேள்பொன்னின்னுதம் தனிய
ஞ்சுசமனாய்க்கூட்டே. (௩௫௧)

கூட்டவேமருந்துகேளு குலாவியசாரச்சுன்னம், ஆட்டவே
வீரச்சுன்ன மப்பனேதுரிசிச்சுன்னம், மூட்டவேமுன்றுதானும்
முக்கழஞ்செடையேதூக்கு, ஆட்டமுன்னஞ்சுகேளுஅபரெண்டுப
த்துத்தூக்கே. (௩௫௨)

தூக்கியேபெடையேசெர்ன்னிற் றுலக்காககழஞ்சுபத்து, தாக்
கியமருந்துபோடச் சரக்குடன்வளையைகேளு, ஆக்கியகாரசாரம்
அரிதாரங்கெந்திகொட்டிப், பாக்கியவீரம்பூரம் படிகியேழும்
போடே. (௩௫௩)

போடுநீகிருமிஷத்தான் புகழ்பெறத்துத்தத்தோடே, ஆடு
நீபதினென்றேதான் அப்புறம்வைத்துக்கொண்டு, தேடுமுன்ன
ஞ்சுமூன்றுந் தெளிவுறவறைத்தேபப்பிக், கோடுகல்ரவியில்வை
த்துக் கொடுங்காந்திக்காட்டுகாட்டே. (௩௫௪)

காட்டிடத்தயிலமாகுங் கலந்தொன்றாயுள்ளேகூட்டி, ஓட்
டியபதினென்றேதா னென்றேகாற்பணமேதூக்க, நீட்டிடத்தயி

லத்துள்ளே சேர்மையாயுரைத்துக்கொண்டு, கூட்டிடவிதன்தன் பெயருங் கொடுலாடசிங்கிகாணே. (௬௫௫)

காணிக்கசிங்கிப்பட்டால் கடுஞ்சூதம் விரைத்துப்போகும்; பூணிக்கச்சிங்கிவிட்டுப் புகழ்தரசத்தைக்கேய்க்குத், தோணிக்கு க்கெழிபோற்கட்டிச் சூடன்தீகன்னில்வாட்டு, வாணிக்கக்கரண்டிக்குள்ளே வர்க்கவித்தூணெயுருக்கிப்போடே. (௬௫௬)

போட்டபின்துகையிலிட்டுப் பொரிகாரப்போட்டேயூது, ஆட்டபின்ரசந்தான்தீயி லப்பனேயாடும்பொன்போல், மூட்டபின் சூதக்கோடே மூட்டிபேச்சைசூதம், கூட்டபின்கூட்டக்கூட்டக் கொடிதானசூதஞ்சாமே. (௬௫௭)

சாகுமேசூதக்காணுந் தனிபொன்றேயல்லகேளு, ஆகுமே சரக்காய்நின்ற வறுபத்துநாலுஞ்சாகும், போகுமேசாரகாரம் போட்டிலேகட்டிப்போகும், வாகுமேயினத்தைக்கண்டு மாட்டு நீசொர்ணமாமே. (௬௫௮)

சொன்னமேபாகுலப்பா துலங்கியமாற்றுக்கேளு, மன்னவேபைந்நூற்றெட்டு மாற்றெனவுரிந்துபார்த்தேன், என்னமோசிங்கியென்றே யெளிதாகச்சொல்லவேண்டாந், தன்னமேசிங்கிக் கொக்கத் தைலமுமொவ்வாதென்னே. (௬௫௯)

ஒவ்வாதுமலைகள்தோறு முந்தமுநகர்தானு, மொவ்வாது மலையில்நிற்கு முயர்ந்தமூலிகையேபாரு, ஒவ்வாதுபரிசவேதி யுயர்ந்திடுங்கிணறுதானு, மொவ்வாதுசிங்கிக்கொக்க வொத்ததைக் கண்டிலேனே. (௬௬௦)

## ருத்திர சிங்கி.

கண்டொன்றுசொல்லக்கேளு கூடிதானருத்திரசிங்கி, மண்டொன்றுமானமயிசன் வழங்கியவொழுங்குகேளு, தண்டொன்றுமளிகனுறுந் தனிக்கனிகொழுப்பைவாங்கி, பொண்டொன்று சோழிப்பிசு மொக்கஞ்சுகழஞ்சோரஞ்சே. (௬௬௧)

அஞ்சாயுமொன்றுப்கூட்டி யனுப்பிவைபின்காணுக்குள், வஞ்சையகாந்திகாட்ட வரும்நெய்தான்வழித்துக்கொண்டு, தஞ்சையபுனுகுமஞ்சு சவாதுமைங்கழஞ்சுபோடு, வொஞ்சையகாதம்விந்து வொவ்வொன்றுகழஞ்சுகூட்டே. (௬௬௨)



கூட்டியவெல்லாம்பதக்குள் கூட்டவேசன்னங்கேளு, ஆட்டிய துருசுச்சுன்ன மப்பனேசாரச்சுன்னம், காட்டியகாரச்சுன்னங் கடுகியுமிளச்சுன்னம், பூட்டியவீரச்சுன்னம் புகழஞ்சுங்கழஞ்சி போடே. (௬௬௩)

போட்டுநீபொன்றாய்ச்சேர்த்துப் புகழுறப்பிங்கானப்பி, யாட்டுநீகாந்திகாட்டு அப்பனைதைலமாகும், பூட்டிடத்தைலத்துள்ளே போக்கெலாஞ்சொல்லக்கேளு, மாட்டியகாரசார மால்தேவ்கெந்திகூட்டே. (௬௬௪)

கூட்டுநீவீரம்பூரம் கொடிநீருவிகமுநாபி, ஆட்டுநீகவரிமாளி னப்பனேசகையும்வாங்கிப், பூட்டுகஸ்தூரிவீணைப் புகழ்கோரோசனையுமொக்க, வேட்டுநீகொகையெநெண்ணி விசையுடன்பதினொன்றுச்சு. (௬௬௫)

ஆச்சிந்தப்பதினொன்றேகாணப்பனேரெண்டாமுக்கால், பாய்ச்சிந்தப்பனைத்தின்தூக்கம் பாகியேயுரைத்துக்கொண்டு, தேய்ச்சிந்தத்தைலத்தோடே சிறப்புடன்வைத்துக்கொண்டால், கோய்ச்சிந்தருத்ரசிங்கி கொடுஞ்சிங்கிகாமகேளே. (௬௬௬)

கேளிந்தசிங்கிபோட்டாற் கெடிசூதக்கெசமுஞ்சாகும்; வாளிந்தக்கெழிபோற்கட்டி வாட்டிடுசூடன்தீயில், தாளிந்தக்கரண்டிக்குள்ளே தனியெண்ணெய்குத்தியூது, வேளிந்தச்சூதந்தானும் விடுபட்டேயுருகும்பாரே. (௬௬௭)

பாருநீயிந்தச்சூதம் பாய்ச்சியேகுகைக்குள்வைத்து, வாருநீகோரய்போட்டு வளம்பெறவூதும்போது, சேருநீயிசானத்தில் செழிகழிடுதுவும்வைத்துக், காருநீபூசைபண்ணக் கண்விட்டேயாடும்பாரே. (௬௬௮)

ஆடுமேசூதந்தன்னை இப்பனேசுருபிபண்ணு, ஆடுமேசூதந்தன்னை யடங்காதகமலிபண்ணு, ஆடுமேசூதந்தன்னை யஷ்டமாசித்திபண்ணு, ஆடுமேசூதந்தன்னை பகண்டமாஞ்சொருபம்பண்ணே. (௬௬௯)

பண்ணுநீகோடிவேதை பரியுடன்போகம்பண்ணு, பண்ணுநீசந்தானந்தான் பநகுமட்சயமேபண்ணு, பண்ணுநீவிண்ணிலாட்டிப் புலசிவவிதயதிபி, பண்ணுநீநாதவேதை புரிசினைபண்ணிப்பாரே. (௬௭௦)

பாரித்தப்பணிரெண்டாலே பலபலகுளிகையாகும், பாரித்தப்பணிரண்டாலே பாரத்திடும்போதமுன்னைப், பாரித்தப்பணிரண்டாலே பரவியவாசிகாணும்; பாரித்தப்பணிரண்டாற்குப் பலித்திடும்வாசியோர்க்கே. (௯௭௧)

வாசியும்பணிரண்டேதான் மணியதுபணிரண்டேதான், தேசியும்பணிரண்டேதான் செயம்பணிபணிரண்டேதான், காசியில்விட்டோடும் நாட்டியவ்வெளியாக்காணும், மாசியின்மாயையான வாசனைபோகும்பாரே. (௯௭௨)

போகுமேபார்க்காரத்தாற் பொருமியமுன்னையுந்திப்ந்து, போகுமேபெண்ணைக்கூடிப் புணர்ச்சித்தகக்கமெல்லாம், போகுமேசாவுபொய்யாய்ப் பொன்மணித்தாயுங்காண்பாள், போகுமேயண்டந்தாண்டிப் புகழுற்றுக்கெவனம்பாரே. (௯௭௩)

பாருநீயித்தநூலைப் பரிவுடனுணர்ந்தேதீயும், ஆரிணியென்னைம்போலே யாத்தாளைக்கேட்டுச்சொல்வார்; காருநீயித்தநூலைக் கட்டியேபதனப்பண்ணு, காருநீபாவனைகள் சகலமுங்கட்டக்கேளே. (௯௭௪)

கேளித்தருத்ரசிங்கி கெடியானவிரலிற்றெட்டு, ஆளித்தப்பாஷாணக்களறுபதும்புரட்டிவாட்டித், தாளித்தகவேலாகங்கள் தணிமணல்செங்கல்லும், வேளித்தவெள்ளிமாற்று விரைந்தொராயிரமுமாமே. (௯௭௫)

ஆயிரமாற்றுமட்டு மப்பனேயறிந்துபார்த்தேன்; பாயிரந்தோடேயிந்நூல் பாடினேனுரையைக்கேளு, சேயிரசிவகாமித்தாய் செப்பியமொழியைப்பார்த்து, வாயிராகமேழு வானமாயிரமுங்காணே. (௨௭௬)

காணித்தநூலைவொட்டக் கயிலையிலீசர்நானும், பூணித்தவுரைத்துப்பார்க்கப் பொன்னிதேயதிகம்பாரு, வாணித்தத்தாயேசொல்ல வளமாகச்சோதித்தேன்யான், வணித்தநூலைப்போல வொருநூலுமுரைசொல்லாதே. (௯௭௭)

## அஞ்ர சிங்கி

சொல்லாதேயைஞ்சிங்கி சூட்சத்தைபருளுவேன்யான், வல்லனையாளரூத மற்றொன்றுமகட்டாதப்பா; கல்லாலையாயசெல்லாங் கடுந்தங்கயானையாகும், பொல்லானதேகப்போக்கிப் பொன்தேகமாக்கும்பாரே. (௯௭௮)



பாரிந்தச்சிங்கிபஞ்சும் பரமனுக்கஞ்சுபூதம், பாரிந்தச்சிங்கியஞ்சும் பரவியயோனியஞ்சும், பாரிந்தச்சிங்கியஞ்சும் பகர்ந்திடுங்கிலமஞ்சு, பாரிந்தசச்சிங்கியஞ்சாற் பரவிற்றிவண்டம்பாரே. ()

பாரொன்றுநீரொன்று பரவியவன்னியொன்று, காரொன்றுவாயுவொன்று கடந்தமேல்விண்ணதொன்று, சேரொன்றுயஞ்சுபூதஞ் சிங்கியுமஞ்சுபூதம், வாரொன்றுஞ்சிங்கிபோனால் வாதமும்பொய்யாய்ப்போமே. (௯௮௦)

பொய்யாமோவாதமென்றால் பொருஞ்சூதங்கட்டாப்பாரும், மெய்யாமேவாதந்தானும் விரைந்துதற்சூதங்கட்டில், கையாமோலவணமென்றாற் கடிகைக்குக்கோடிகாதம், கையாரநிர்த்தங்காணுஞ் சச்சிதானந்தப்பாரே. (௯௮௧)

பாரித்தப்பணிரண்டான பரிபுடன்குளிகைமார்க்கம், சேரிந்தச்சாபித்தப்பா சேர்க்கலாகிரியைபேற்று, யேரிந்தச்சுருபிரெண்டு மியல்புடன்பிரித்துச்சொல்வேன், காரிந்தவேமங்கூட்டிற் கடுமேற்சுருபியாமே. (௯௮௨)

## சுருபி குளிகை கமலி.

ஆமொன்றில்ரசிதங்கூட்டி வடவாகக்குளிகைபண்ணித், தாமொன்றில்வங்கந்தூட்டில் தணிவங்கமெவெள்ளியாகும், சேமொன்றிற்சுருபியிட்டாற் சிறக்கமேற்கட்டிகட்டி, வாமொன்றிற்றெரிந்தபின்பு வாங்கிநீபோலிற்போடே. (௯௮௩)

போட்டிடுசுருபிரெண்டின் பொருளெல்லாஞ்சொன்னேனப்பா, மாட்டிடுகமலிமார்க்கம் வகைசொல்லக்கேளாயையா, நாட்டிடுவேலைநீரை நலமாகக்குடிக்குப்பாரு, ஊட்டிடுந்திமையுண்ணு முழுவாயுவுண்ணும்பாரே. (௯௮௪)

உண்ணுமக்குளிகைவாயி லுதட்டிலேவைத்துக்கொண்டு, பண்ணுநல்மணலுஞ்செகல் பருகிபகல்லினூது, மெண்ணிடுமேலாகம்போலாம் வெதுப்பியேபொன்னையாகும், கண்ணுநல்வேதைதானுஞ் சாற்றுமானயிந்திலேனே. (௯௮௫)

அயிந்திலேன்வாயில்வைக்கி லப்பனேகெவனமோடும், மிறிந்திலேனண்டந்தாண்டிப் போண்டப்பதமும்போகும், நறிந்துகன்றுயனுர்தான் நாட்டிபேபாட்டிப்பார்த்தார், பயிந்துநல்பானுஞ்சென்று பதமெல்லாம்பார்த்திட்டேனே. (௯௮௬)

பார்த்திட்டேன்பதமுமண்டம் பலபலசித்தர்கண்டேன், ஆ
ர்த்திட்டசித்தர்வென்ற ரடிமைநான்மூலர்க்கென்றேன், கோர்த்
திட்டசொருபமுண்டோ கொடுமூலசிஷ்பரானல், கார்த்திட்ட
சொருபங்காட்டிக் கடந்துநான்வந்திட்டேனே. (௱௮௭)

வந்திட்டே னண்டந்தாண்டி வருகில்போண்டத்துள்ளே
வெந்திட்டசித்தர்வென்று மெவ்விடமிருப்பதென்றார், கைந்திட்ட
மூவர்க்கையா கடைசிகால்தாந்துப்பிள்ளை, சந்திட்டபாக்சுதப்
பா தனிமதுவுண்ணென்றாரே. (௱௮௮)

உண்ணத்தான்மதுவைவாங்கி யுகந்ததாய்மணிக்குக்காட்டி
ப், பண்ணந்தான்வாசியோடே பரிவாகவிழுந்துக்கொண்டு, வி
ண்ணைந்தானுக்கநோக்க வெளிவிட்டுவிளக்கைதந்தார், பண
ணைந்தான்சித்தரோடு பாவித்தேன்பாவித்தேனே. (௱௮௯)

பாசிந்தசித்தருக்குப் பாட்டேமூலரானல், நேசித்தவைந்
நூறேடே நிரைத்தவாயிரமுமெய்கே, கோசித்தவெண்டுநூறுங்
கொட்டினேனேநாற்றுள்ளே, வாசித்தசித்தரேநீர் வகைகேட்பீ
ர்வகைகேட்பீரே. (௱௯0)

வகையென்னபதினெழுக்கம் வைத்தேனேவைந்நூற்றுள்ளே
தகையென்னபந்தமேமுந் தனிவெண்டுமேலேசொன்னேன், ப
கையென்னசித்தரேகான் பாஷிக்கவல்லாருண்டோ, மிகையென்
னவேலைதபோட விடுமயர்விடுமயரே. (௱௯௧)

விடுமென்றசித்தர் வேலைக்கோ வாண்மைசொன்னீர், கெடுமெஞ்
கடுங்குளிகையாலவ் காட்டுமுன்வேலைதாண்டிக், கெடுமெஞ்
சக்கதொன்று கொடிவெளிபுள்ளேபுக்கிப், படுமென்சொருபம்போ
ட்டுப் பறக்குறேன்பிடித்திடீரே. (௱௯௨)

பிடித்திடப்போமோவப்பா பெய்பயன்சொருபமானல், அ
டித்திடப்போகாதப்பா வாடவுந்தோற்றுப்போனேன், மடித்திட
வெழுமேலே மாட்டினவெண்டுஞ்சொல்லு, கடித்திடச்சிங்கியோ
டு மஞ்சுன்னங்கண்டுகொள்ளே. (௱௯௩)

கொள்ளென்றமூலமூர்த்தி கொடுஞ்சுன்னஞ்சொல்லாதென்
றே, கள்ளென்றமுந்நூற்றுள்ளே தனிச்சிங்கிச்சுன்னஞ்சொன்
னர், விள்ளென்றபதினெட்டானும் . விளக்கேதையந்நூறுகந். தெ
ள்ளென்றதமிழால்பாலுஞ் சிக்கறச்சொன்னேன்பாரே. (௱௯௪)



பாரொன்றிரிசர்நூலும் பாங்குடனேநூறெழுக்க, நேரொன்
றிப்பார்த்தகாலம் நிற்குமோவில்லாதேகான், சீரொன்றியென்
னூலோடே சிவனூலுந்தோற்றுப்போகும், காரொன்னபாட்டர்
நூல்மேற் கைகடந்தாடும்பாரே. (௱௯௫)

ஆடுமேபாட்டர்நூல்மே லப்பனேபந்தநூலைக், கூடுமென்று
ரும்பார்க்கக் கொடுக்கிறநூலேயல்ல; நாடுமென்றிந்தவண்ட
நற்குகைக்குள்ளேவைத்துந், தேடுமென்நாயைக்காவல் சிறக்க
நான்வைத்தேன்கேளே. (௱௯௬)

கேளுநீயணிமாவோடு கெடியெட்டுச்சித்தியாட, யாளுநீய
ஷ்டமாதி யாமந்தக்குளிகைபாரு, வேளுநீசுருபமான விளங்கிய
மணியின்விந்தைத், தாளுநீவாயில்போடத் தனிச்சுடன்றீபமா
கும். (௱௯௭)

தீபம்போல்நிற்குந்தேகம் சிதையாமல்தத்தியோடும், கோ
பம்போமூலையும்போகுங் கொடியவாசனையும்போகுந், தாபம்
போமயக்கம்போகுந் தன்னையுமெடுக்கும்போதம், ரூபம்போம்
சாயைபோகு கொடிக்குள்ளேசித்திபாரே. (௱௯௮)

சித்தியாம்ஞானசித்தி சிறந்துவாயிதன்முன்னே, யித்தி
யாமபியாசாகில் எளிதிலேஞானம்வாரா, யெத்திபாப்நோக்கநோ
க்க வெழுந்தவாசனையாற்கெட்டுப், பத்தியமனமும்விட்டுப் பட்ட
ப்போலாடுங்காணே. (௱௯௯)

காணித்தக்குளிகைபோட்டாற் கையிலேசிக்குப்போகும், பூ
ணித்தமூலனார்க் தப் பொருந்திபகந்திசொன்னார், வாவனிந்திடுவனை
க்குச்சொல்ல வளமாகப்பார்த்துக்கண்டேன், தாணிந்தப்போக
மூர்த்தி தன்பதமறிந்திலேனே. (௨00)

மரிந்திலேன்காமதேனு மாத்திரைமார்க்கங்கேளு, நிரைத்
துளேநினைத்தகெல்லாம் நீட்டியேமுன்னேவைக்கும், குறைந்தொ
ன்றும்போகாதப்பா குளிகையைவாயில்வைத்தால், அரைந்திந்த
நூலிற்சொன்னே னப்பனேகண்டபின்பே. (௨0௧)

## போகிகுளிகை.

கண்டபின்போகிஷிப்பாங் கடுமணித்துணைந்தைகக்கேளு; த
ண்டியபுஷ்பமாம்பை தனிக்கிடிலாசவெல்லாம், ஒண்டியகட்டில்
மெத்தை யுறவாதம்பெண்கள்சூழக், கொண்டிடும்போகம்பெண்
ணைக் கொடுத்திடும்பாருப்பாரே. (௨0௨)

## சந்தான குளிகை.

பாருநீசந்தானத்தின் பருமணிமார்க்கங்கேளு, வாருநீதான் தொண்டாய் மணிதனை வெட்டிப்போட்டுச், சேருநீகுளிகைகாட்டு செணத்திலேபொருந்திப்பேசும், காருநீகுளிகையாலே கடும் போகசித்திபாமே. (௪0௩)

ஆமினியட்சயத்தின்மணிமிபரங்கேளு, காமினிதனங்கள் கூச்சு கனிந்தகாமியங்கள்கூச்சு, சேமிவிபன்னங்கூச்சு, சிறந்திடும்பொருள்கள்கூச்சு, பேமினிக்குளிகைவைத்தா லெடுக்கவுந் தொலையாதாமே. (௪0௪)

தொலையாதகவனமோடுந் சூழ்மணிக்குணத்தைக்கேளு, அலையாதமனதுகாணு மகண்டத்தைபக்கக்காட்டும், நிலையாதகசமாதியெல்லாம் நிலைக்கவும்நேர்ன்மைகாட்டும், கலையாதேயுமிழ்நீர்வாங்கிக் காயமும்சித்திபாமே. (௪0௫)

ஆமினிப்பாசிவத்தி லவியெலாந்தீபம்போலாம், தாமினிவெளியாய்க்காட்டுந் தனிமணிச்சித்திகேளு, வாமினிசெனங்கள்செத்து மறுசென்மமெடுக்கவெல்லாம், ஓமினிபுள்ளையாகி யுண்மையைக்காட்டுங்காணே. (௪0௬)

காணுநேரகவேதை காட்டுமுறையைகேளு, பூணுநீருதங் கட்டிப் புகட்டிச்சாரணைகள்செய்து, தோணுநீவில்லைபோலே சுகப்படவார்த்துத்தட்ட, வாமினிச்சத்தங்கேட்டு லம்மட்டும்வேதையாமே. (௪0௭)

வேதையாய்பரிசந்தன்னில் விளங்கியமணியைக்கேளு, ஆதையாலோகஞ்செக்கல் அதைவுடன்சுக்காய்மன்னும், பாதையாய்க்காட்டுமானே பரிச்செனுதங்கமாகும், கோதையாய்பனிரண்டான குணங்களுங்கூடிவேனே. (௪0௮)

## சாரகார பாஷாண ஈயம்.

கூடினேன்மணியின்மார்க்கம் கொடும்பாசங்கள்நாடு, ஆடினேன்சாரகார மருப்பக்காநாதுகாணு, தேடினேனியமாகச் செகமெச்சவேதைபோடப் பேறுகோரகச்சொல்லேன் பிறக்கிறவியம்பாரே. (௪0௯)

பாருநீபூரச்சுன்னம் பாங்குடன்வராகன்கால்தான், காருநீ திமிளாதாணும் கல்கியவராகன்கால்தான், தாருநீசாரந்தானும் அரிந்திடும்வராகன்கால்தான், ஆருநீமூன்றுந்தானு மரைப்பண்டமுன்னிர்காணே. (௪௧0)

காணவேயரைத்துக்கொண்டு கலந்திதிலுமிழ்நீர்விட்டு, ஆணவேவராகனுடமடைவானசாரங்கட்டிப், பூணவேபூசிப்பூசிப் புலர்த்திபேசாட்டவாட்டி, தோணவேதாரைதாரை சுகமானவியமாமே. (௪௧௧)

ஈயம்போலிறுகிக்காணு மிதுகாணுமுக்கட்டப்பா, காயம்போலிறுகிப்போகும் கனவிலும்சாவும்பொய்யாம், பாயங்கேகுத்தன்னுள்ளே படுமுன்னேகுதஞ்சாகும், சாயங்கேருகந்தகம் தனிரெண்டும்கூட்டித்தின்னே. (௪௧௨)

தின்றிடத்தாயந்தானுஞ் சிலைபோலேயிருக்கும்பாரு, மன்றிடுந்தேகம்பொன்போல் விளங்கியதசமாற்றுகும், பன்றிடுங்குளிகையிட்டாற் பட்டம்போற்பறக்கும்பாரு, தன்றிடுஞ்சாரத்தாலே தனிவருமீயங்கேளே. (௪௧௩)

கேளுநீசாரந்தன்னைக் கெடிபடப்பொடித்துவைக்க, வாளுயர்சாரந்தானும் வளம்பெறச்செயநீராகும், கேளுறவங்கச்சுன்னஞ் சிறந்தரைக்கழுஞ்சிபோட்டுக், கோளுறக்குழப்பிவைக்கக் கொடிப்பதார்செயநீராமே. (௪௧௪)

செயநீரின்பேரைக்கேளு செகமெல்லாமீயமாகும், செயநீர்ப்பாஷாணங்கள் சேர்ந்திடும்பாசங்கள், செயநீர்ச்சாரசாரஞ் சிலைமுதலியமாக்கும், செயநீர்பூரேய்த்துத்தோய்த்துத் தெளியுறவாட்டியூதே. (௪௧௫)

வைப்பாஷாணங்களுடந்தையாங்காசார, மாதிடவுபரசங்கள் மற்றுள்ளவஸ்துவெல்லாம், பேதிடவினத்தைக்கண்டு பிரிமாற்றுவேதைபோட, ஆதிடமாற்றுப்பொன்னு மாடமுங்கொதைகாணேனே. (௪௧௬)

தொகையென்னவியமான துறைதுறையியமெல்லாம், வகையென்னரசத்திலூட்டி மடிபிடிவழக்காயிறதும், பகையென்னவிளக்கத்தள்ளிப் பரிவானவினைதக்கூட்டித், தகையென்ன வேதைபோடச் சாஸ்திரகோடியாமே. (௪௧௭)

ஆமினியினங்களான வடைவுறதகாரசாரம், ஆமினியினங்களான விருபத்துநாலுதானும், ஆமினியினங்கள்தானு மப்பசெயுபரசங்கள், ஆமினியினங்களான அடைவுறதாரஞ்சேமே. ( )

## காரசாரச் சத்துரு மித்துரு.

### வேறு.

சாரமுதல்வெண்காரம்வீரமொமிகெந்தி தலைபாகுமினிப்பூர்ந்தயங்காதசிலையும், பாரமுடனரிதாரங்கபரியுடனிமிளை பார்புகழிங்கெளரியுடன்பண்ணைலிங்கமெல்லாம், சூரமுடன்வாதமென்றசொன்மொழிக்குக்குருவாந் தாலக்கமுறவிரத்தப்போலிருக்குமக்தந்துருசு, ஆரமூத்தயிவைவெல்லாமித்துருவேயாகுமபிந்திதனைப்பெருமையுள்ளோயட்க்கியிணங்கிடாயே, (௪௧௯)

### வேறு.

இணங்கள்கூடனப்பிரக மிசையாப்படிகைகல்லுப்பு, பிணங்கும்வெள்ளைக்கற்சவுடு பெரியதொட்டியஞ்சனமும், கணங்குஞ்சவுடுமிந்துப்பு தனியசிங்கெர்ந்தமுட, ணணம்கேசாகம்துருசுவங்க மமியீசத்துருகாரமிதே. (௪௨0)

காரமிணங்கன்கெந்தகமுங் கடிதாஞ்சிலையுந்தாளகமும், வீரம்லிங்கங்காரீயம் விளங்குங்கற்பூரசிலாசத்தும், பாருங்கெளரிநாகமுடன் பகர்ந்தமிமிளைமனவர்த்தம், சேருஞ்செம்போடிவையெல்லாஞ் சிறந்தசாரப்படிகமித்துருவே. (௪௨௧)

படிகிலவணமிந்துப்பு பகர்ந்தவளையல்கூர்மையுடன், கொடியவிரும்புதாந்தமுடன் கொள்ளாவங்கமண்டூத்தோல், மடியச்சுக்கான்சிலைச்சுன்னம் வழுங்குமப்பிரகங்கடல்நுரையும், கடியசவுடுளிஞ்சில்முதற் கண்டீர்சாரச்சத்துருவிதே. (௪௨௨)

இந்துப்புடனேகல்லுப்பு விசைந்தபடிகைக்காரம், முந்துலிங்கம்வீரமுடன் முருக்கன்தேவிமுன்னைதுத்தம், கந்தகாகம்கடலிநுரை கடிதாம்நிமிளையிவையெல்லாம், பந்தியதிந்தசேர்ந்தரைக்கப் பகரிணங்கன்மித்துருசவுடே. (௪௨௩)

சவுடுடன்காரீயந் தனித்தவங்கந்துருசியுட, னிவுடுமிரும்புவெள்ளிசெம்பு விசைந்தகாந்தமனவர்த்தம், செவுடுங்கெந்திசிலைகொட்டி கேளிர்சிங்கிதீமுறுகல், அவுடுமண்டூஞ்சுரைகெந்தி அகவணிணங்கன்சத்துருபூரமிதே. (௪௨௪)

பூரஞ்செம்புமிரும்பொடே பொருவுங்காரம்நாகமுடன், கூரங்கெளரிதாளிமிளை யசையாக்கெந்திதாளகமும், சாரும்வெள்ளையப்பிரகந் தயங்கவங்கம்லிங்கமது, பாரும்பாரும்வையகந்தோர் பகர்ந்தவுப்பின்மித்துராசமென்னே. (௪௨௫)



ராஜவர்த்தஞ்சவுட்டுவில்லை தங்கொள்கூடன்படிகியுடன், வாசாகாந்தமிந்துப்பு வளமாம்பூரஞ்சிலையுடனே, காசாசிங்கிவீரமுடன் கவநும்பவளந்தொடுமுத்து, பசேயறுக்கலைல்லைமையாம் வழங்குமுப்பின்சத்துருபுளியே. (௪௨௬)

புளியுமண்டூத்தோல்சகுடன் பொலஞ்சேர்பூரஞ்சலாசத்து, அளியுஞ்சுன்னமிதுவெல்லா மணியகாரச்சத்துருவாம், கிளியேலோகமுபரசங்கள் கேள்விக்குகந்தாரமாயும், மொளிமேயகாரம்சீனம்ரெண்டின் முபன்றமித்துமுன்சூரமே. (௪௨௭)

ஆயுசாரக்குவகைமுறையே யதட்டிச்சத்துருவாறுகொன்று, வேறுசமுமித்துருவும் வெருவிக்கொடுக்கவேண்தையுறும், கூறுஞ்சிவனார்க்காதாரங் கொடியசார்க்காமிவையாறும், தேறும்மித்துசித்தர்களே தெரியார்மயங்கியழிவாரே. (௪௨௮)

ஊறல்போம்லிங்கத்துக்கு ஊட்டவேயின்னங்கேளாய், மாறவேபழச்சாறப்பா வளமாகப்படிகாலூட்டித், தேறவேமுலைப்பாலப்பா சேரைதான்பின்புஊட்டு, ஆறவேலிங்கந்தன்னை யப்பனேவாங்கிக்கொள்ளே. (கசுகூ)

வாங்கியேலிங்கத்துக்கு மாட்டுமுன்தைலச்சிங்கி, தாங்கியேதோய்த்துத்தோய்த்துச் சமத்தாகவாட்டுவாட்டு, பாங்கியேகறுப்பேயொடிற் பாருநீயுருக்குப்போலாம், ஓங்கியேலிங்கசூதமுறுதியாய்ச்சாகும்பாரே. (கஎ0)

பாருநீபெண்ணைப்பார்த்துப் பலபலவிளைஞரெல்லாம், வாருபொற்குடமோகோடோ மல்லிகைச்செண்டோவென்பார், தாருநீயிளநீரென்பார் தனிமதன்மகுடமென்பார், ஊருநற்கொங்கைரெண்டு முறைப்பாகப்பார்ப்பார்காணே. (கஎக)

காணிந்தப்பார்வைரெண்டுங் கடுங்கொங்கைக்குள்ளேசிக்கி, பூணிந்தப்பார்வைபுக்கி யுழலுவார்பிடுங்கமாட்டார், தோணிந்தவிதம்போலிங்கஞ்சூதமுங்கட்டிப்போகும், பூணிந்தமனத்தைநீயும் போதத்திற்பாருபாரே. (கஎஉ)

போதமேகொங்கையென்பார் புகழானஞானியப்பா, வாதமேகொங்கையேது வளமானசிங்கியாச்சு, நீதமேமனதுக்கப்பா நெடுகியமாயைகொங்கை, காதமேசூத்தத்திலோடக் கடுங்கொங்கைசூதமாச்சே. (கஎங)

ஆச்சிந்தகொங்கைமீதி லாசைபோற்போதம்பாரு, ஆச்சிந்தகொங்கைமீதி லாசைபோல்மனதைத்தேற்று, ஆச்சிந்தகொங

கு

நைமீதி லாசைப்போற்பொருளைத்தேடு, ஆச்சிந்தகொங்கைமீதி லாசைபோனூலைப்பாரே. (௧௭௪)

பாருநீ நூலையெல்லாம் பலநல்லாயுணர்ந்துகொண்டு, பாரு நீமனதுக்கேற்ற பக்குவமெல்லாஞ்சொல்லிப், பாருநீபோதந்த ன்னைப் பளிச்சென்றேயேறவோடும், பாருநீபோருபாரு பார்த்து றைம்முத்திதானே. (௧௭௫)

முத்தியேகொடுக்குமப்பா முன்னென்றவாதசித்தி. சித்தி யேகொடுக்கும்பாரு தெளிந்துநீகற்பமுண்டால், அத்தியேமணி த்தாயோடு மாடலாமாறும்பாரு, மத்தியேமனத்தைத்தேற்றி ம ருமமாய்க்காணுகாணே. (௧௭௬)

காணிந்தமுறையைவிட்டுக் கட்டிடான்வாதியானால்; பூணி ந்தலோகத்தோர்கள் பொன்னுக்காய்ச்சொல்லுவார்கள், வேணி ந்தபோகமாயை விட்டவர்ஞானியானால், வாணித்தித்தாயார்மே லே வச்சிரத்தோடாய்வாழ்வார், (௧௭௭)

வச்சிரத்தோட்டைப்போட்டால் வாசனைவாளெய்யாது, வ ச்சிரத்தோட்டைப்போட்டால் மாயமாம்சாய்படாது, வச்சிரத் தோட்டைப்போட்டால்வாராதுபிறப்புத்தானும், வச்சிரத்தோ ட்டைப்போட்டு வாதிகள்போதம்பாரே. (௧௭௮)

பாரிந்தலிங்கம்போலே பருவமாய்வீரம்வாட்டு, பாரிந்தலி ங்கம்போலே பருவமாய்க்கெந்திவாட்டு, பாரிந்தலிங்கம்போலே பாஷாணமெல்லாம்வாட்டு, பாரிந்தத்தைலச்சிங்கி படுமுன்னே ருநஞ்சாமே. (௧௭௯)

லிங்கவேதை பாஷாணக்கட்டு.

சாதிரசக்கையெல்லாந் தனித்தனியினமேகண்டு, பேதிற பொன்னிற்கூட்டிப் போக்கோடேவேதைபாரு, ஆதிறவினமே தென்று லறையிறேன்லிங்கத்துக்குப், பாகிறதங்கம்ரெண்டிற் பாய்ச்சொன்றுலிங்கந்தானே. (௧௮௦)

தானென்றரெண்டுஞ்சேர்த்துத் தனிப்படவுருகும்போது, வேறென்றலிங்கமார்க்கம் வெருவிடுகாகமப்பா, தானென்றமூன் றுஞ்சேரிற் களங்காச்சு குருவுமாச்சு, ஆனென்றவேதைபோட வறையுநேனறையுறேனே (௧௮௧)

அறையுறேன்களிம்புபோன படைவானசெம்புபத்தில், மு றையுறேன்களங்கொன்றேதான் மாட்டில்குருவேயாச்சு, கறை



யுறேன்வெள்ளிநாலிற் காட்டொன்றுயிந்தச்செம்பைத், துறையு றேன்மாற்றேதென்னிற் சுத்தமாகவிருப்பதாமே. (௧௮௨)

இருபதுமாற்றுய்போச்சு இதுமூன்றிணுண்மையென்ன, மரு பதுபொன்னேபூமி மகத்தானநாகம்வித்து, தருபதுகுருநம்வர்ண ம் தனிக்கெந்திராகமாச்சு, கருபதுமூன்றுங்கூட்டிக் கடுமாற்று பேறுதென்னே. (௧௮௩)

ஏறுகேதேதோவென்றே இயல்புடனுரைத்துப்பார்க்க, மா றுதருகத்துக்கு மாட்டிச்சாரணையோயில்லை, தேறுதருகத்துள் ளே சேர்ந்திட்டகஞ்சத்தாலே, தாறுதமாற்றுக்கொஞ்சந் தானு ச்சுயப்பாகேளே. (௧௮௪)

கேளுநீபாஷாணங்கள் கெடியாகக்கட்டிற்றென்பார்: வாளு நீகேட்டுக்குள்ள வரிசையைக்காணமாட்டார், வேளுநீமுக்கட்டப் பா விரவிடுமூசித்தாமம், ஆளுநீமுக்காற்கட்டு அதில்ரெட்டிப்பு கையுமாமே. (௧௮௫)

ஆமினியரைக்கட்டாறு லப்பனேபுகைதான்சுற்றும், போ மினிலோகத்துள்ளே பூட்டையிற்புகையும்பாரு, தாமினிப்புகை ந்ததென்று தடுமாறிப்பப்பட்டாதே, காமினிப்புகையுங்கட்டும் கருந்தங்கத்தூட்டுவூட்டே. (௧௮௬)

ஊட்டிலப்பாஷாணங்கள் ஒகோகோபுகையுநன்று, மூட்டிடி லுபாசங்கள் முக்துப்போலுருகநன்று, மாட்டிடிற்காரசார மற் றொன்றும்புகையலாகா, ஆட்டிடிற்குநந்தானு மாட்டிடிற்பொ ன்போனன்றே. (௧௮௭)

நன்றிதுபாருபாரு நலமாகமுறைகள்சொன்னேன், கன்றி துபாஷாணங்கள் கடும்புகைகட்டினற்போல், ஒன்றிதுவேதை தாக்க புத்தமங்கற்புத்துக்கும், பன்றிதுயான்முன்பார்த்துப் பரு கியேநின்றவாறே. (௧௮௮)

வாறுகேள்துருசுகொண்டு மகத்தானவேதையாடத், தாறு கேள்திரிவங்கந்தான் தனிமூன்றுவாரகன்மூன்று, வாறுகேள்கா ண்டிக்குள்ளே வாரிதில்ரெண்டுருக்கம், பேறுகேள்வெள்ளைகண் டால் பிலவானரெண்டுபோடே. (௧௮௯)

போட்டிறிற்கிண்டிப்போடு பொடியாகுமெல்லாமப்பா, மா ட்டிதிற்பூரங்கால்தான் வழலையாஞ்சுன்னங்கால்தான், நீட்டிதில்

விமொன்று நேரரைகருவைவிட்டுப், பூட்டிநில்லில்லைதல்ட்டிப்
புகழாகப்புடத்தைப்போடே. (கசுய)

புடந்தீர்ந்தபின்புகேளு போடிதிற்பாநிருகம், அடந்தீர்ந்த
குருநப்போல அப்பனைதெந்நிபோடு, கடந்தீர்ந்தமென்றவாதங்க
ழேச்சுக்கேவையம்போடு, தடந்தீர்ந்தகுருவாட்டித் தனிப்படவி
ல்லைகட்டே. (கசுக)

கட்டிபோவில்லைகன்னைக் களங்கறக்குகையில்வைத்து, ஒட்
டியோடித்திற்போடு ஓகோகோசிவப்பேயாகும், அட்டியேதிக
ற்குப்பேரு மானத்தக்குருக்காணும், எட்டியேநிமிளைகாலி விது
வொன்றுபூசுபூசே. (கசுஉ)

பூசியேவாட்டிமெள்ளப் புகழாகப்புடத்தைப்போடு, வாசி
யேநிமிளைதாலு மப்பனைவெந்துபோகும், காசியநிமிளையொன்று
கடுந்துங்காலிற்பூசித், தேசியேபுடத்திற்போடச் சிவந்திடுந்தங்
கம்பாரே. (கசுங)

பாரிந்தந்தங்காலிற் பகராதலிங்கமொன்று. சேரிந்தப்பொ
டியேபண்ணு செகச்சாலக்குருவாநாமம், வேரிந்தக்குருவைத்
தொட்டு வேண்டிபசாக்கைவாட்டு, கோரிந்தச்சரக்கொன்றொன்
று கொடுஞ்சிவப்பாகும்பாரே. (கசுச)

பாருநீசெந்தூரக்கள் பண்ணுவோமென்பார்மாண்பர், வா
ருவேங்கமுன்றின்வகைகாணார்வழியுங்காணார், ஒருநீவங்கம்பேர
ளுல் ஓகோகோவாதம்போச்சு, தாருநீசெம்பில்வங்கந் தனிசேர்
ந்தாறல்போச்சே. (கசுரு)

போச்சிதுலோகத்தோர்கள் புகழாகத்தாலமுண்டு, வாச்சி
துசெம்பைக்கொல்ல வழிகண்டோமென்பாரில்லை, யாச்சிதுவெ
ன்னசொல்வே னப்பனைவங்கமுன்றில், காச்சிதுபொன்றுன்கொ
ட்டிக் கரையில்லைகாணுகாணே. (கசுசு)

காணவேவங்கமான கடும்ரசவாதக்கம்பம்; பூணவேருதங்
கட்டும் புகழானதாதுகட்டும், காணவேகாரசாரம் கைபதாம்பா
ருபாரு, பூணவேகவளங்கெந்தி போடுநீசிவந்துபோமே. (கசுஎ)

சிவந்தபின்னேதுவேதை சிறுபிள்ளையாமெப்பா; சிவந்தபி
ன்நிரிவங்கத்தாற் செகமெல்லாஞ்சிவந்துபோகும், சிவந்தபின்
செந்தூரத்தைச் சேர்சகத்திமேகோடி, சிவந்தபின்னினத்தைக்
கண்டு சேர்ந்ததில்வேதைபோடே. (கசுஅ)



போடென்றநூலைப்பார்த்துப் புளகித்தானந்தமாவார், நீ
டென்றபொன்னைப்பார்த்து நித்தமானந்தமாவார், ஆடென்றபெ
ண்ணைக்கட்டு அதிகவானந்தமாவார், தேடென்றவன்னமுண்டு
செகத்திலானந்தமாவார். (கசுகூ)

மாதை பூசை.

ஆனந்தநாலுக்குள்ளே யருந்திணரியோவையோ, வான
ந்தக்காண்டிப்போன மறையந்தங்காணார்காணார், கோனந்தங்க
டந்துபோன கொடுவெளிந்துரியம்புக்க, மானந்தமாயிபாத ம
னத்துள்ளேபூசைபண்ணே. (உா)

பண்ணவேபிரமத்துக்குப் பழமேதுஜலமுமேது, பண்ண
வேபிரமத்துக்குப் பன்னுட்பாலுமேது, பண்ணவேபிரமத்துக்
குப் பரப்பிடத்தூபமேது, பண்ணவேபிரமமுண்ணப் பார்த்தா
யோமுடப்போடா. (உாக)

போடாநீமனதேபூசை புகழுற்றவன்பேக்ஷீரம், வாடாதபுத்
திபுட்ப மகத்தான்விவேகமன்னம், தேடாதசாந்திநீர்தான் தெ
ளிவானவருளேதூபம், கோடானுகோடிசித்துக் கொடுத்திடுமு
ன்னேபாரே. (உாஉ)

உள்ளேதானிருந்தசித்தை யோமென்றுவெளியேநோக்கித்,
தள்ளேதான்றாபதீபஞ் சாற்றினசமர்த்தனன்று, கள்ளேதான்பூ
சையப்பா கல்லதுபேசுமோதான், அள்ளேதானண்டரண்ட மட
ங்கலுநிறைந்தார்காணே; (உாங)

காணுவண்டரண்டங் கடந்தநிற்குணமேயென்பார், தோ
ணவேதாந்தரெண்டுஞ் சுடர்க்கொடிபானுவென்பார்; பூணவேநி
ராகாரத்திற் புக்கிடில்வெளியேயென்பார், ஆணவேயெல்லாமுன்
னே யாடுதிவாதிபாரே. (உாச)

ஆதியுமந்தமில்லை யளவில்லைகரையுமில்லை, சேதியுநிலையுமில்
லை நின்மலநிராகாரத்திற், சாதியும்வரவுமில்லாச் சச்சிதானந்தத்
தென்றார், வாதிதானென்னவாதி மயங்கியமாடுதானே, (உாரு)

மாகுபோல்திண்பார்சோற்றை வார்த்தைகளாடுவார்கள், வி
டுதானென்னதென்று வேண்டியப்பெண்ணைச்சேர்வார், கேடுதா
ன்பிரமதென்று கிஞவிலுமெண்ணமாட்டார்; நாடுதானுருந்தவா
தினம்பாகக்கெட்டவாறே. (உாசு)

## பெண்சரீர தூஷணை.

கெட்டதுபெண்ணுலப்பா கேளவன்கைநிதானம், மட்டமர் குழலேயென்பார் மருவிப்பார்சிக்குநாறும், கட்டுறுந்தேனெயெ ன்பார் கலந்துபாரவாயேநாறும், ஒட்டுறுங்கண்ணைப்பாரா யொ ழுகியபீளைதானே. (௨௱௭)

பீளைதான்பீயேநாறு பெருத்துடல்குமரிநாற்றம், கோளை தானெஞ்சிற்கட்டுங் கொழுஞ்சபம்கொடிதாநாற்றம், ஊளைதானு ற்றுப்பாரு ஓங்காரகோயோனியப்பா, காளைதான்மதனேறென் பாரகருநாகப்படமென்பாரே. (௨௱௮)

படமானயோனியப்பா பலபலபிறப்புக்குட்டந், திட்மானவ ழும்புஞ்சீயுஞ் சந்தித்தமூத்ரவாசல், கடமானநரககூபங் கண்டபோ ரமூலேநாறுந், திடமானமாயச்சீலை சிறப்பாகச்சுற்றினுளே. ()

சுற்றினசீலைபோனுற் சுகமாகவெளியாய்ப்போச்சு, வற்றிய துருசுகண்டால் வாகாகாவாதமாச்சு, பற்றியபோதங்கண்டாற் பதவிரவொன்றாய்ப்போச்சு, வொற்றியருதங்கட்ட வோடிற்றுக் கவனம்பாரே. (௨௧0)

## ரசக்கட்டுக் குளிகை.

கவனமேமேயாடவப்பா கட்டவேகுளிகைகேளு, தவனமும் பசியும்போக்கிச் சார்ந்திடக்குளிகைகேளு, மவுனமாம்ஞானங்கி ட்ட வாய்க்கவுங்குளிகைகேளு; புவனமும்பதமூர்தாண்டிப்போ கவேகுளிகைக்கேளே. (௨௧௧)

கேளுநீதுருசியாலே கெடியானகுருத்தானென்று, வாளுநீ சவுர்காரத்தால் வழங்கியகுருத்தானென்று, ரேளுநீதிரிவங்கத் தால் செய்திடச்சுன்னமொன்று, வேளுநீவீரமொன்று விதிநறு ம்வராகனுலே. (௨௧௨)

நாலையும்கருவைவார்த்துநலம்பெறவரைத்துநன்றாய்க், தோ லியதங்கரேக்குக் கொடியவன்ரெண்டிற்பூசிச், சீலையுஞ்சுற்றி யொன்றித் தெளிவாகப்புடத்தைப்போடு, வாலையும்கரும்புபோ லவாமர்னதங்கநீரே. (௨௧௩)

நீரிலேயொன்றுபோடு நிலைபத்துருதத்துள்ளே, தாரிலே சைத்லசிங்கி தானொருதுள்ளிருத்து, தேரிலேகையால்தேய்த்துச்



சிறக்கவோர்கிழிபோல்கட்டி, வாரிலேதீபக்கோட்டில் வளமாக வாட்டுவாட்டே. (௧௪௨)

வாட்டியேயெடுத்தபின்பு வளமாகக்காரந்துத்தி, நீட்டியே யுருக்கிடப்பா நிலைத்ததுகண்விட்டாடும், பூட்டியேபுரசங்கள் போக்குநூற்றிருபத்தெட்டு; மாட்டியேசத்தைவாங்கி மனைத்து ச்சாரணையேசெய்யே. (௨௧௫)

செய்தபின்பாஷாணங்கள் சேர்ந்தறுப்த்துநாலும், கைதபி ன்சத்தைவாங்கிக் கட்டிச்சாரணையேயேறு; கொய்தபின்லோக மூட்டு குறிப்பானரத்தினமூட்டு, பைதபின்தங்கச்செம்பைப் பா ய்ச்சிநீவிடுவித்தேதேறே. (௨௧௬)

## குளிகைசாரணை தங்கநீர்.

வறீமுதிர்ந்தபின்ன ரிதுவொருவிடுவிப்பாச்சு, மாறுநீவா யிலிட்டால் வாங்கிடும்கவனமப்பா, தேவிவைதிறமேயிந்தச் செ யல்போலவிடுவித்தாக்கா, லாவியேகுளிகைபேரு மட்டமாசித்தி யாமே. (௨௧௭)

சித்தியாயிருபத்தொன்று சேர்த்துநீவிடுவித்தாக்கால், அத் தியநாமங்களே வகண்டத்தோர்கமலியாகும், பத்தியுவைம்பத் தொன்று பாய்ச்சிநீவிடுவித்தாக்கால், முத்தியபோதத்துள்ளே மூட்டியசொரூபியாமே. (௨௧௮)

ஆமிந்தச்சொரூபியாலு மஷ்டமாசித்தியாலுங், காமிந்தக் கமலியாலுங் கைமுறையாகநாயன், வாமிந்தப்பதங்கன்தாண்டி வாகாகத்திரிந்துவந்தார், ஓமெந்தனையன்முன்னே யொருவருமெ திர்காணேனே. (௨௧௯)

காணேனைசொரூபம்போலே கைக்குள்ளேஞானம்கட்டி, யாணேனேசித்தர்கூட்ட மறுபத்துநாலுபேடந், தோணேனேம றைவுக்கெல்லாஞ் சொரூபமாம்குளிகையில்லை, நாணேனுகார்ச்சு னர்க்கு நாலொருவர்ணமுண்டே. (௨௨0)

உண்டதுகுளிகைதானு மோகோகோகொடிதுவோட்டம், ப ண்டதுவோடுமெல்லாற் பராபரங்காட்டமாட்டார்; கண்டதுமுனி வர்கையிற் கலந்தொருலகிமாவுண்டு, கொண்டதுமச்சர்கையிற் கொடும்பேதியொன்றுகாணே. (௨௨௧)

காணுங்கோரக்கர்கையிற் கடிப்பதோர்போகிரியான்று, ஆ னுநல்ரிஷபயோகி யவர்கையில்சாய்கைவேதி, பூனுகல்மடங்க ள்தோறும் புகழானதொன்றென்றப்பா, வாஞுநன்மூலநாயன் மாபுக்குளஞ்சுகேளே. (உஉஉ)

அஞ்சேதோவென்றுகேட்க வறைகிறேன்கேளுமப்பா, மி ஞ்சேதுபூரணத்தில் விரவிடுசொரூபமொன்று, கஞ்சேதுகமலி யொன்று கமெஷ்டசித்தியொன்று, பஞ்சேதுலோகத்துள்ளே ப ரசிவதெரிசியொன்றே. (உஉ௩)

தெரிசிக்கமலையுமண்ணும் செகத்திலேயுள்ளதெல்லாம், பரி சிக்கவேண்டாமப்பா பார்க்குமுன்னேமமாகும், புரிசித்துப்பாலி ற்போட்டுப் போக்கோடேகுடித்தாயானால், கரிசித்தகாயசித்தி கண்ணிமைக்காகும்பாரே. (சஉச)

ஆகுமேமூலநாய னஞ்சல்லோகண்டாரென்று, வாகுமேநா யன்பாதம் வளமாகச்சிரசில்வைத்துப், போகுமேபோகிகாமி பு கழ்சிவதிவிமூன்றும், பாகமேயெட்டாய்ச்செய்தேன் பரயரையரு ள்தான்காணே. (உஉரு)

அருளானமூலநாய னடியேனையழைத்துவந்து, பொருளான வாதந்தானும் போக்கோடேநன்றாய்ச்சொன்னாய், மருளாதே லோகத்தோர்கள் மறைப்பையேன்வாங்கிவிட்டாய், யிருளான நூல்வையாத வேழைமையென்னென்றாரே. (உஉசு)

என்னென்றபோகமூர்த்தி யியல்பாகச்சொல்லாவிட்டால், பன்னென்றநூலுக்குள்ளே பலனேவாவ்வையேது, தன்னென் றபெரியோர்பார்த்துத் தனைக்கண்டுசெமாதியுற்றால், கன்னென்ற சுகிர்தத்துக்குக் கரையுண்டோகாணீர்சொல்லே. (உஉஎ)

சொல்லியமுதிரத்தைச் சோதித்துப்பார்ப்பார்பார்ப்பார், ம ல்லியமூலநாயன் மகத்தானநூலிதென்பார், பல்லையுந்திறந்துகொ ண்டு பட்டினியின்றைக்கென்பார், அல்லவேயடியேநூலை யழிந்த வன்குபேரன்றானே. (உஉஅ)

நூல்கற்றோர்க்குப்பெயர்.

குபேரனுமீடோவையா குழந்தைநூல்கற்றோர்முன்னே, பு பேரன்றானுனக்குநானு மோடினேன்போதமெல்லாம், கபேரந் தானண்டரண்டங் கடந்திட்டபொருளைக்கண்டே, னபோந்தா னெக்குரோ மையனேநிறைந்திட்டாயே. (உஉகூ)



நிறைந்திட்டீர்நீர்தானல்லோ நிலையெல்லாம்வெளியாய்ச்சொ ன்னீர், நிறைந்திட்டநீர்தான்முன்னே நிறையவேமூடிவிட்டீர், நி றைந்திட்டவுன்றன்பாத நினைவிலேயுன்னியுன்னி, நிறைந்திட்ட மூட்டமெல்லா நிமிஷத்தில்வெளியாய்ப்போச்சே. (உ௩0)

போச்சிதுவென்றுசொன்ன புகழ்மெந்தநன்றுநன்று, வாச் சுதேசிவன்முன்சொன்ன வரத்தாலேமூடிவைத்தால், வாச்சுதே பேழுலட்சம் வகைமூட்டையெணணிப்பாரு, ஒச்சுதேலோகத் தோர்கட் குற்பனமூடினாளே, (உ௩க)

மூடினமூட்டேதென்று முறைமுறையுன்னிப்பாரு, கூடின சித்தர்க்கப்பா கொடுமூட்டும்வெளியாய்க்காணு, மூடினஞானிக்க ல்லோ வுற்பனவாதசித்தி, தேடினலோகத்தோர்க்குத் தெரியா தேமூடினாரே. (உ௩உ)

தெரியாதேமூடாவிட்டாற் செகத்துள்ளோர்விந்தைகேளு, பரியானபெண்ணைக்கண்டு பலபலசிந்தையாயின், மரியானகற்பை சசேர்வார் மகத்தானபாவஞ்செய்வார்க், குரியானநாலுஞ்சொல் லா ரோகோகோநரகந்தானே. (உ௩௩)

தானுந்தன்னூலேசித்தர் தனிப்பட்டலோகத்தெய்தில், தே னுந்தக்கமலம்போலச் செய்தொழிலொன்றுந்தப்பா. காணுந்து ம்பொன்னைக்கண்டு காமுகப்பாவியானா, வானுந்துதவத்திற்கெ ல்லாம் வந்ததுவானிதானே. (உ௩ச)

ஆனிதான்வராதேயுன்னு லடக்கவும்போமோசொல்லு, ஆ னிதான்கருவூரார்க்கு முனக்குமேமன்சண்டைதீரா, வானிதான் சொன்னாளானால் வருகிறகர்மதர்பந், தேனிதானசொல்லாவிட் டால் சொல்வதுவென்னபோவே. (உ௩ரு)

போவென்றுசொன்னவார்த்தை புத்தியில்புத்திபுத்தி, தே வென்றவுன்பதத்தைச் சிந்தையில்வைத்துச்சொன்னேன, கா வென்றபாலிக்கென்னால் கண்டாலுஞ்சித்தியாகா, கோவென்ற மச்சான்றங்கை கொடுஞ்சாபங்கொடுத்திட்டாளே. (உ௩சு)

சாபந்தான்றாயும்போட்டாள் தனிப்பின்புயானும்போட்டே ன், சோபந்தான்கொண்டுபாவி தொழில்கானூர்மயங்கிப்போவா ர். தாபந்தான்பாவிக்கல்லால் தனியொன்றுஞ்சித்தியில்லை, கோ பந்தான்வந்துலோகக் கொடியோர்க்குச்சபித்தேனையானே. ()

சபித்தாய்நீகொக்கையொன்று தனிக்கோபம் பெண்ணின்மேலே, யெபித்தாய்நீயேறுதேனோ விதமென்னவுணிப்பாரு; வபித்தாய்நீகேற்பினோடு வாடாதேன்சித்தாசொல்லாய். நபித்தாய் நீகற்பதென்னிற் கடுவொன்றிலொன்றினாளே. (௨௩௮)

ஒன்றினாள்பத்தர்மேலே யோகியமதவேதத்தை. பன்றினாள்மனத்தினுள்ள பலநினைவெல்லாம்விட்டாள், கன்றினாலேல்தும்பாரான் கற்புக்குவந்தவாறு, வன்றினமற்றைமாத நாகாவேசிதானே. (௨௩௯)

தானென்றவலைப்போலே தனித்தோர்மனதேயொன்றாய், வானென்றுகடந்துபாரு மத்தாகஞானசித்தி, பானென்றுமுண்டாளோடே பரைக்கற்பாம்பெண்ணுகோரங், தேனென்றுவுன்னூற்கப்பா சேவித்துவாரான்சொல்லே. (௨௪0)

சொல்லுறேன்வேதாந்தத்தின் சொரூபத்தைக்கண்டமூர்த்தி, பல்லுறேன்யோகஞானம் பாவியவாசியோர்க்கு, மல்லுறக்கோபப்பாபம் வாராதுபெரியோர்க்கையா, கல்லுநவெட்டுப்பேர்ல்க் கைகாணுஞ்சித்திதானே. (௨௪௧)

சித்திக்குநன்றாய்ச்சொன்னாய் திருடர்க்குச்சாபஞ்சொன்னாய், மத்திக்கு மறையாய்ப்பாவம் வந்தது வவர்க்குத்தோஷம், சத்திக்குங்கொடுக்கவேண்டா மிந்தநூல்சித்தர்க்கீ, பக்திசொண்டேழினோர்க்குப் பலித்திடும்பாருபாரே. (௨௪௨)

திருட்டு வாதிகளறிய.

பாருநீமுன்னேசொன்னேன் பழிக்குருவாம்மனை, தாருநீகுளிகையிட்டுஞ் சற்றினேனதற்குள்ளப்பா, கோருநீகுருவைத்தொட்டுக் கொடுஞ்சரக்கதனைத்தொட்டு, வாருநீவாட்டுவாட்டு வகையெல்லாஞ்சாகுந்தானே. (௨௪௩)

சாகிறசரக்கையெல்லாஞ் சாத்திரவிதத்தைக்கண்டு, போகிறலோகத்துள்ளே போர்க்கோட்டேகொடுத்துப்பாரு, வாகிறவன்னகாணு மாற்றதுவெழும்பக்காணும், வேகிறபிணத்தைத்தின்டி விறகொக்கப்போட்டவாறே. (௨௪௪)

வாறுகேள்புத்திகெட்ட மாடுகள்சிலபேருண்டு, தாறுகேள் குருசொல்லாமுன் தசக்காஞ்செய்வாரையோ, நீறுகள்கரியதா

மோர்நில்லாதுதிருட்டுவாதங், கூறுகேளிவர்கட்கென்றும் கொடும்வாதம்பலியாதென்னே. (௨௪௫)

பலியாதுகுருச்சொல்லின்றிப் பரவிலேதிருடினாக்கால், கலியானலோகத்துள்ளே கசட்டுருக்கடுததவாறு. மலியானகர்ப்பமுள்ளா ளாண்பிள்ளைபெறுவாளோசொல், கெலியானதிருட்டுவாதி கெடுகுவான்கெடுகுவானே. (௨௪௬)

கெடுகிறதிருட்டுவாதி கெடுநிசவேனைதபோட்டால், படுகிறமாற்றொன்றில்லை வைத்திட்டவெள்ளிநீயும், படுகிறபாடுபிள்ளைப் பாவந்துக்காணுமாவான், வடுகிறதிருடனுக்கு வாராதுவாதந்தானே. (௨௪௭)

தானென்றலோகத்துள்ளோர் தனித்தனிநூலைப்பார்த்து, வானென்றஞானமெல்லாம் வந்ததுவெனக்கேயென்பார், கோனென்றகுருவுங்காணார் கூறுறவழியுங்காணார், கானென்றாகமுமைம் கருதினகதைதானுச்சே. (௨௪௮)

ஆச்சிந்தக்கள்ளஞான மறைந்தோரைமுகம்பாராதே, வாச்சிந்தக்குருவில்லாமல் வாதநூல்திருடினோனேல், மாச்சிந்தமுகம்பாராதே மகத்தானதோஷந்தோஷம், தாச்சிந்தவிடத்தைவிட்டுத் துனிமலையேறுயேறே. (௨௪௯)

ஏறியேலோகத்துள்ளோ ரியல்பதுகேளுகேளு. மாறியேதெண்டஞ்செய்வார் மகத்தானகுருவேயென்பார், கூறியேயடியேன்வீட்டிற் கொடுஞ்சோற்றுக்கில்லையென்பார், தேறியுன்பதமில்லாமற் றிநில்லையென்பார்காணே. (௨௫0)

திக்கில்லையென்றுசொல்லுந் திருடனைமுகம்பாராதே, வொக்கியவாதந்தானே வுலகத்தோர்பிழைப்பதெல்லா, மக்கியவீசனன்றே யவ்ரவர்க்களித்தாரன்னம், மக்கியரசனுமத்தால் மயங்கினார்பாருபாரே. (௨௫௧)

மயங்கியபேரைப்பாரு, மயங்காதபேரைப்பாரு, தயங்கியபேரைப்பாரு தயங்காதபேரைப்பாரு, வியங்கியபேரைப்பாரு வேகமாமனத்தைப்பாரு, வயங்கியலோகத்துள்ளோர் வழக்கத்தைப்பாருபாரே. (௨௫௨)

வழக்கந்தானின்னுமெத்த வரவரச்சொல்லுறேனான். பழக்கந்தானசீடனோடு பருவத்தைநன்றாய்ப்பாரு, யிழக்கந்தான்மன

தென்னுமே யிளைநாலையென்னென்றுதே, பிழக்கந்தான்செம்பு பாண்டம் பெருக்கிடக்குசவன்போமே. (௨௫௩)

குசவன்றானேதெந்ன்னிற் கொண்டிடுசித்தவாதி, குசவன்றானேதென்னிற் கொடியநான்முகதோனப்பா, குசவன்றானேதென்னிற் கொடியகோர்மணித்தாயப்பா, குசவன்றானுகும் போதக் கூறலுகன்றிகொள்ளே. (௨௫௪)

தண்டுகொள்போதமப்பா கடியதாய்க்குசவனுச்சு, வண்டுகொள்மணித்தாயேபம்மப்படிபடைநீயென்றார், தண்டுகொள்மணிக்காய்தானுஞ்சதுமுகன்படைநீயென்றாள், பண்டுகொள்நிசமான்சொன்ன பரிசக்காறபடைக்கார்காணே. (௨௫௫)

காணாவேவாதத்துக்குக் கடும்போதமாசானுச்சு, ஊணவேபாதவர்சொல்ல வுறுதியாய்க்கைக்கொள்ளாமல், தேனவேசொல்லும்போது சொற்களைத் திருடிப்பார்த்துப், பூணவேவாதம் பொய்யாய்ப் போச்சுதுவென்பார்காணே. (௨௫௬)

போச்சுதுவென்றுசொல்லும்புலையர்தான்மெத்தவுண்டு, வாச்சுதுகுருவேயென்று வணங்குவார்கிடையாதப்பா, வேச்சிதுவாதமென்ற விதம்பர்கள்மெத்தமெத்த, வாச்சுதுவிவர்களோடே யறைந்திடத்தோஷந்தானே. (௨௫௭)

தோஷந்தான்சிவனுலே சுழன்றிடுமென்றார்மூலர், தோஷந்தானுன்மாக்கர்க்குச் சூட்சுமனல்நரகமென்றார், தோஷந்தான்வாதநூலைச்சோரர்க்குச்சொல்லாதென்றார், தோஷந்தான்வென்றுநாயன் சொன்னபின்னேங்கினேனே. (௨௫௮)

ஏங்கினபின்புநூலை யெப்படி மறைப்போனென்று, வேங்கினஞானிக்காகு மொழுங்கிலாமாண்பர்க்கெல்லாம், பாங்கினவாதமெல்லாம் பலியாதுபலியாதென்றே, யாங்கிபபடியேமூல ரப்படி போவென்றாரே. (௨௫௯)

போவென்றுநாயன்சொல்லப் புகழ்தேவியாமாமென்றாள், ஓமென்றமூலப்பார்த்த வுத்தமர்க்கேற்குமென்றார், தாமென்ற வெனனைநம்பிச் சார்ந்தவர்க்காகுமென்றார், ஆமென்றவாதிமார்க்க மறிந்தவர்தாகிநானே. (௨௬௦)

வாதந்தான்வருகுமென்று வாமத்திற்புக்கின்று, வாதந்தான்வராமற்போனல் வாமத்தைவிடுவார்மாண்பர், வாதந்தான்



வரவுந்தேவி மகத்தானபரிட்சைபார்ப்பார், வாதந்தான்வருகுமீசன் மலரடிபணிந்துநில்லே, (௨௬௧)

பணிந்திட்டுவுள்ளேயும்பிரவியலுஞ்செழுக்கதை, யணிந்திட்டையைந்தாக வப்பனேமாறுமாறு, கனிந்திட்டமவுனமாக்கக்கண்டுள்ளேசெபித்தாயானுற், றணிந்திட்டவாதம்வந்து சரணத்தில்வீழும்பாரே. (௨௬௨)

சரணத்தில்விழவஞ்சற் சாற்றிமெய்யாபிசக, காணத்திலுன்னிபுன்னிக் கைமுறையாகவாடு, மரணத்தில்வார்த்தைபொய்யாமவாதமுமேவல்கேட்டுந், தருணத்தினடனங்காணுந் தப்பாதேநோக்கினேர்க்கே, (௨௬௩)

நோக்கிடில்வாதஞ்சநநோறுணுக்கங்கள்தப்பினுலு, மாக்கிடிலீசனங்கே யப்படியல்லவென்பார், தேக்கிடும்வாதமென்னதெருவெல்லாங்கிடக்குதோசொல், மாக்கிடுசோறுசற்றே மறந்திட்டாற்குழந்தைபோச்சே. (௨௬௪)

குழைந்ததுசோறேயென்று குழுறுதேகேளுகேளு, யழைந்துவார்பச்சைநீரை யப்பனேவிரைத்துப்போடும், இழைந்துபார்வாதந்தப்பி லெண்ணியேநினைத்துப்பாரு, விழைந்ததுவருளிற்கானுற விரவிப்பின்தொழிலைப்பாரே. (௨௬௫)

தொழிலைநீபார்க்குப்போது சூட்சங்கள்தப்புந்தப்பும், தொழிலைநீபார்க்கும்போது சூட்டியேகனலேயறும், தொழிலைநீபார்க்கும்போது சொன்முறைமறந்தியர்கும், தொழிலைநீபார்க்கும் போது சூட்சமாய்நாலைப்பாரே. (௨௬௬)

விநுகக் கட்டு.

பாரொருலிங்கக்கட்டு பருவமாய்ச் சொல்லுறேனுன், தாரொருசுருக்காற்சுத்திக் தனியெல்லாந்தீர்ந்தபின்பு, தேரொருவீரத்தோடு சேர்சமன்வழலைச்சுன்னம், ஓரொருசமனுய்ச்சேர்க்கவுத்தமச்சிவப்புமாமே. (௨௬௭)

சிவந்திட்டவீரமொன்று சேர்ப்பதுலிங்கமேலே, கவந்திட்டசாரம்நாலுங் கவுரியும்நாலுபோடு, வுவந்திட்டதுருசுச்சுன்னமொன்றதுகூடப்போடு, வவந்திட்டகருனிவவார்த்து வப்பனேயரைத்துப்பூசே. (௨௬௮)

பூசியேபூசிப்பூசிப் பொலிவாகவாட்டுவாட்டு, மாசியேபற்று
லிங்கம் மழுங்கிப்போந்தாரையெல்லாம், காசியேல்போகவேண்
டாங் கனகத்தைக்கண்டால்முத்தி, வாசியேயேபியாடு வாதந்தா
ன்சவுக்குமாச்சே. (உசாகூ)

ஆச்சிந்தவாட்டுக்கேந்தா. லப்புனேமணலில்வைத்தக், காய்ச்
சிந்தவேர்வைமேலே கனக்கவேபுடத்தைப்போடு, வாச்சிந்தவு
ள்ளேலிங்க மணிபோலத்திரண்டுகட்டும். போச்சுந்தக்சாவுபொ
ய்யாய்ப் பூட்டிட்டமலிதான்பொன்னே. (உஎ0)

மலைதனேவெய்துக்கலிக்கும் வரிதிகடையலாகும், நிலைதனையா
காசத்தை நீக்கியேயகலாகும், கொலைதனைலிங்கக்கட்டே கொ
டுஞ்சூதக்கட்டாமப்பா; வலைதனைலிங்கங்கட்ட வாகாகவெளி
தோசொல்லே, (உஎக)

சொல்லியலிங்கந்தன்னைச் சூட்சத்திற்கட்டிற்றென்பார்,மல்
லியவாட்டாற்கட்டு மணலுக்குள்புடந்தாற்கட்டு, மெல்லியநீரா
லியவாட்டாற்கட்டு மெனுக்குள்புடத்தாற்கட்டு
ற்கட்டு மென்பார்களேபோட்டுமாண்பர், பல்லியலிங்கங்கட்டப் ப
திறன்குங்கட்டும்பாரே. (உஎஉ)

கட்டியவுப்புசாலிற் காட்டொன்றுவழலைச்சுன்னம், ஒட்டிய
கருவாற்பூசி யுலர்ந்தபின்னூதிப்போடு, மட்டினகோடிமாணு ம
ற்றவைசுன்னமாகும், அட்டினவுப்புக்கொக்கு மப்பனேதந்தஞ்
சேரே, (உஎந)

சேர்த்துநீகருவாவாட்டிச் சிக்கெனஊதஊதா, மாத்துநீதக்
கச்சுன்ன மகத்துவங்கேளுகேளு. வாத்துநீவெங்கமிரண்டு மதி
லொன்றாகுதம்விட்டுப், போத்துநீதத்தச்சுன்னம் போடநில்லெ
ன்டுதானே. (உஎச)

நாடுன்றுப்பக்கரண்டிக்குள்ளே தயிரைப்போற் கடைநீரு
ண்டாற், தேனென்றவுங்கமப்பா சிதைந்ததுதவளமாகும், கா
னென்றதவளத்துக்குக் காட்டுநாற்கொன்றேவீரம், கோனென்
றவண்டநீரைக் குத்திநீயரைத்துக்கட்டே. (உஎரு)

கட்டியலிங்கதன்னைக் கடுகவேயுலரப்போடு; வொட்டியே
யூதிப்போடு வுகந்திட்டவங்கச்சுன்னம், மட்டியாள்சுன்னம்விட்
டால் வாய்வாதமெய்யாதையா, வட்டியுழியிலைமுள்ளி லப்பனே
பொன்மயபூசே. (உஎசா)



பூசியேயூதிப்போடு புகழானமிளைச்சுன்னம், மாசியேநிமி
ளைச்சுன்ன மத்திடைவீரம்போட்டுக், காசியேசிவப்பாமப்பா கல
ந்தப்புச்சாரமேலே, வாசியேகசிவரிஞ்சாரம்வைத்துநீகுகையில்
மூடே. (உஎஎ)

குகையேதோவென்னவேண்டாங், கொடுஞ்சுன்னங்குகையி
ல்வைத்து வகையோடேமணலுக்குள்ளே வைத்தந்தக்குகை
யோடேநீ; தகையோடேமணலைமூடித் தாக்குநீபுடத்தைமேலே
பகையோடேசாரநீரைப் பாற்றிடுஞ்சுன்னம்பாரே. (உஎஅ)

பாருநீசாரமுன்னே பாங்காகவிறுகத்தேணீ, தாருநீசினச்சு
ன்னம் தனிப்படுமிணங்கன்சுன்னம், ஊருநீகருவிற்போடு வள
மாகச்சலமேயாகும், கோருநீசாரந்தோய்த்துக் கொடுவேருமர
வியிற்போடே. (உஎகூ)

போட்டிடவுலர்ந்தசாரம் புகழாகவெலும்புபோலாம், ஆட்
டியபாஷாணங்க ளறுபதுந்துவைத்துப்போடு; காட்டியேதுவைக்
கவிட்டாற் களிம்பறுப்புகையுங்சட்டா, மூட்டியேசாரம்பின்பு
மூளையைப்பதிக்கும்பாரே, (உஅ0)

பதித்திட்டுநீறுபோலாம் பற்பம்போனடுவேநிற்கு, மதித்
திட்டசாரநீரை வளமாகக்கொட்டிக்கொண்டு, பொதித்திட்டவழ
லைச்சுன்னம் போடிநிலெட்டுக்கொன்று, குதித்திட்டவில்லைகட்டி
க் குகையிலிட்டூதலூதே. (உஅக)

ஊதிடக்காரந்நானு முகந்திடக்கடதாஞ்சுன்னம், வாதிடச்
சுன்னத்தோடே வளமானவீரஞ்சேரு, மாதிட்மாசுரெண்டும்வ
ழங்கியசிவப்பேரமெத்த, காதிடத்தருசுமேலே கலந்திதைப்பூசு
பூசே. (உஅஉ)

துருசுக்குரு.

பூசியேபார்க்கப்பார்க்கப் புகழானசுக்கிறுகு, மாசியேயற்
றுப்போகும் வளமாகஊதிப்போடு; காசியேங்வகண்டங்கள் கடு
வெள்ளைதனக்குமொவ்வா, வேசியேயிந்தச்சுன்னம் விரவியசிங்கி
கூட்டே. (உஅந)

கூட்டிந்தத்துருசிச்சுன்னங் குறைவானதுருசிமேலே, பூட்ட
ந்தவீரங்கூட்டிப் புகழாகவாட்டுவோட்டுக், காட்டிந்ததொந்தம்நூ
று கைமுறைசுன்னமாகு, மோட்டிந்தத்துருசுக்கொப்பு மொன்
மில்லைமணித்தாயொப்பே. (உஅச)

ஒப்பானசாரச்சுன்ன முறவானசாரபேலே, யப்பாநீயப்பர கேளு மனதுக்குள்ளறவாட்டிக், கொப்பானசாரங்கட்டிக் கொடியதோரெழுப்பேயாருஞ், செப்பானமுன்போனது சிறந்திடுஞ் சுன்னம்பாரே. (உஅ௫)

பாருநீதங்கநீரில் பார்க்கிறவிதத்தைச்சொல்வேன், தாருநீ கண்டாசாரஞ்சமனுகவுரைத்துக்கொண்டு, கோருநீவீரன்மேலே கொண்டிடவாட்டுவாட்டு, தாருநீசத்தாய்வீரந் தனிப்படக்கட்டுங்கானே. (உஅ௬)

கட்டியவீரமொன்று கடுந்தங்கம்நாலிலூட்டி, யொட்டியே குகையில்வைக்க வோகோகோபொருமிச்சிந்து, மட்டிநாள்வாதம்பாரு வாய்வாதம்போடும்போடும், கொட்டியேதங்கநீரைக் கூவென்றுறப்பறக்குங்கானே. (உஅ௭)

பறக்கிறதங்கச்சுன்னம் பமுன்னேயெல்லாஞ்சாகு, மிறக்கிறசரக்கில்வேதை பெத்தனைகோடாகோடி, துறக்கிறதொழிலேயல்லசொல்லாதேசொல்லிப்போட்டேன், கறக்கிறபால்போலென்னால் கடுகவேஞானிபாரே. (உஅ௮)

பாருநீதருசுச்சுன்னம் பாங்குடன்சவாதுகூட்டிக், கோருநீயுபரசங்கள் கொள்ளவேவுருக்கவப்பா, தாருநீமுத்தப்போலே சகலமுமாமேபாரு, வாருநீகாரசார வகையெல்லாமுருக்குங்கானே. (உஅ௯)

உருக்கவேயின்னமொன்று வுறபனஞ்சொல்லக்கேளு, பருக்கவேசாரச்சுன்னம் பாய்ச்சிதிற்சவாதுகூட்டிச், சொருக்கவேயுபரசங்கள் சுகமாகவுருகுமப்பா, வருக்கவேசாரகார மறுபதுமுருகுந்தானே. (உ௯0)

தாமென்றதருசுச்சுன்னஞ் சமன்போடுசாரத்துள்ளே, வாமென்றவெளுப்புப்போலே வைக்குமுன்சலமுமாகும், கோமென்றவீரப்போடு சொடுஞ்சிவப்பாருமீர்தாவ், காமென்றநீருக்குள்ளே கடுந்தங்கரேக்கையூட்டே. (உ௯௧)

ஊட்டிக்கைவாங்குமுன்னே யோகோகோசலமேயாச்சு, மாட்டிப்பின்வீரத்தோய்த்து வாதுகலாட்டுவோட்டு, நாட்டிப்பின்தங்கநீரால் நலவீரமெழுக்குமாச்சு, பூட்டிப்பின்பரிசேலந்தான்பொன்மாற்றுமிருபதாமே. (உ௯௨)



ஆமிந்தவீரம்போலே யறுபதும்வாட்டுவோட்டு; காமிந்தமெழுகேயாகுங் கரையில்லைவேதைசொல்லப். போமிந்தப்போதைமார்க்கம்பொற்கொன்றைச்சடையோர்கண்டார், தாமிந்தத்தெளிலையென்றாய் சாற்றினன்கண்டிட்டேனே. (உ௯௩)

கண்டிட்டதங்கச்சுன்னங் கடியதோர்வராகனஞ்சு, வுண்டிடுமுன்னேசுத்தி யுறைந்திட்டசாரமஞ்சு, பண்டிடுகாரச்சுத்தி பாய்ச்சஞ்சுவராகனப்பா, வண்டிடுமூன்றுங்கூட்டி யரைத்துநீயமுத்திவையே. (உ௯௪)

வைத்தபினிதற்குளஞ்சு மாட்டுநீவெள்ளைகண்டா, கைத்தபின்வீரமஞ்சு கலந்திடாயப்பாநீயு, மொய்த்தபின்னண்டநீரை முட்டிநீயுரைத்துக்கொண்டு, தைத்தபின்பணம்போல்வில்லை தான்தட்டியுலரப்போடே. (உ௯௫)

போட்டபின்வழலைச்சுன்னம் பொலிவாகக்குகையிற்பூசி, யாட்டபின்னுலர்ந்தவில்லை யதற்குள்ளேபோடுபோடு, காட்டபின்சில்லாப்போட்டுக் கடுரவியுலரப்போட்டு, நீட்டபின்கல்லுச்சுன்னம் நிலைநானுபடிதான்வாங்கே. (உ௯௬)

வாங்கியசுன்னத்தோடு வளமாகவுப்புரெண்டு. பாங்கியேயரைத்திடப்பா பரிவாகக்குகைக்குமப்பு, தேங்கியபுடந்தானப்பா தெளிவாகக்கெசந்தான்போடு, வோங்கியசுன்னக்கார முள்ளேயிச்சுறுக்காம்பாரே. (உ௯௭)

பாருநீயின்னமொன்று பருவத்தைச் சொல்வேன்யானும், தாருநீயிருபத்தஞ்சில் தனிமூன்றுவழலைச்சுன்னங், கோருநீகருவர்லாட்டிக் கொள்கியவடைபோல்தட்டிக், காருநீரவியில்வைத்துக் கடுகெனவுலரப்போடே. (உ௯௮)

உலர்ந்தபின்வாட்டிவாட்டி யுள்வைத்துவோடுமூடி, யலர்ந்தபின்சந்துதோறு மப்பனேசீலைசெய்து, கலந்தபின்முழங்கால்மட்டுங் கடியதோர்குழிவைப்போட்டு, வலந்துமுன்னுப்புச்சுன்ன மப்படியெடுத்துக்கொள்ளே. (உ௯௯)

எடுத்திட்டவுப்புச்சுன்ன மியல்பாகக்கிழேபாதி. மடுத்திட்டவோடுவைத்து மறுபாதிமேலேபோட்டுக், கடுத்திட்டவெருவையப்பா கலந்தப்புமார்புமட்டுந், தொடுத்திட்டதீயைப்போட்டுச் சுகமாகப்பூசைபண்ணே. (௩௱)

பண்ணியேபுடந்தானப்பா பதறாதேகுளிருமட்டு, மண்ணி யேகுருவுக்கொப்பு யாரைநான்சொல்லப்போறேன். தண்ணியதி மாதாரத்தின், சைதன்யமொய்ப்புவொப்பு, புண்ணியவானானாற் போட்டிந்தக்குருவைப்பாரே. (௯௱௧)

குருக்கொண்டேவண்டரண்டங் கூட்டோடேயசைக்கலாகு ந், கருக்கொண்டவண்டமேலே தனியொருபோடப்போடத், திருக்கொண்டவீரங்கூட்டிச் சேர்ந்திழைப்புதப்பு, கருக்கொ ண்டவண்டந்தானுங் கடுமெழுங்காகும்பாரே. (௯௱௨)

மெழுகையேசுவலோகத்தில் விரவியேலேபம்பண்ணித், த முகையேகாய்ச்சிப்போடு தனிமாற்றுப்பதினாறுதொன்று, அழு கையேன்வாதிகாளே யகினிந்திந்தக்குருவைப்பாரு, விழுகையே சுட்டுச்சுட்டு வெங்காரதேகுருவைக்கேளே. (௯௱௩)

சேனுநீகுருவைக்கொண்டு கெடியாகவாடவேதை, யானுநீ வீரத்தோடு மாமிந்தச்சுன்னம்போடு, வானுநீசிவப்பேயாகு மா ட்டதில்சினஞ்சற்றே, தோனுநீகறுத்துப்போகுஞ் சொற்கேளு வேதையாமே. (௯௱௪)

சொல்லக்கேள்கருப்பைவாங்கிச் சூட்டுவீரன்மேலே, மல் லக்கேள்சிலைசுற்றி மாட்டியேயுப்புப்பூசி, கல்லக்கேள்தணலிலூதி தனிக்கொடியசையாதப்பா, வல்லக்கேள்வீரக்கட்டு வாகாக வீரமீறே. (௯௱௫)

நீறியவீரத்தோடு நேராக வீரம்போட்டுக், கூறியநாலுங் கொன்று கூட்டிலிங்கமப்பா, தேறியசிவப்பையப்பாரு செக மெல்லாமயங்கியாட, ஊறியகேணிபோலே வோடிடும்வேதை பாரே. (௯௱௬)

வேதைதானேதுதற்குவிபரமாய்ச்சொல்லக்கேளு, போதை தானவலோகத்திற் போட்டொன்றிற்றங்கமாகும், நேதைதான சிலைசுற்றி நெருப்பிலேதிணித்துப்போடு, பாதைதானுபரசதிற் பருகியேயுருக்கப்பொன்னே. (௯௱௭)

பொன்னுக்கெளிதோமாண்பர் போக்கோடேபாருபொன் னும், பன்னுனநாலுக்குள்ளே பருவத்தையுரைக்கப்பாரு, மன் னுனகுருவைப்பாரு வழியோடேவரிசைகேளு, கன்னுனமுறைக ள்தப்பில் கருக்கண்டுஊதுஊதே. (௯௱௮)



ஊதிடச்சுன்னமெல்லா முயர்ந்தேறுமெத்தக்கார, மூதிடச் சோம்பினக்காலோகோகோசுருக்குப்போச்சு, ஊதிடமாகிபோ டு முட்டிவெழலைச்சுன்ன. மூதிடவல்லாயானு லொருகோடிசுன் னமாமே. (௯௱௯)

ஆமினிரசிதச்சுன்ன மறையுறேன்கேளுகேளு, வாமினிவெ ள்ளிநாலு வாட்டொன்றுசெயசூதத்தைத், தேமினியுருகும்போ து செயவீரமொன்றுபோடு, வோமினிக்குகையில்வைக்க வோ தோகோநீறும்பாரே. (௯௱௰)

பாருநீவிண்ணீர்பத்து பருஞ்சக்திச்சாரமஞ்சு, தாருமுன்கா ரமஞ்சு தனிவெள்ளைக்கண்டரஞ்சு, வாருமுனவீரமூன்று வழலை யின்சுன்னையிரண்டு, கோருமுன்முப்பதம்மா கொடும்வெள்ளைக் கருவாலாட்டே. (௯௱௰௧)

ஆட்டியேசில்லுப்போலே யனைத்தொருவில்லைகட்டி, நீட்டி யேயோட்டில்வைத்து நீரையொருவோடுமூடிப், பூட்டியேசீலை செய்து புகழானயெருவுக்குள்ளே, காட்டியேசுன்னமுப்புக் கடு ங்கிழூமேலும்போடே, (௯௱௰௨)

போடுநீபெருவைமேலே புகழானசெசபுடந்தான், ஊடுநீயா றுமட்டு முறசெறடுசுருக்குச்சுன்னந், தேடுநீயெந்தச்சுன்னந் திற மிந்தச்சுன்னமொவ்வா, வாடுநீரசிதவித்தை யாகாகாவறையுறே னே. (௯௱௰௩)

அறையுறேன்காரிரெண்டு மப்பனைசாரியொன்று, பறையு றேனிண்டகனென்று பருமாலின்தேவியொன்று, நிறையுறேனை ஞ்சமஞ்ச நேரானவீரகன்தூக்கித், துறையுறேன்குருவைப்போ ட்டுக் சுழலவெண்கருவாலாட்டே. (௯௱௰௪)

ஆட்டியேவெள்ளைமேலே யப்பனையிதைத்தான்பூசிப், பூட் டியேவாட்டிச்சிலை புகழாகவொன்றுசுற்றி, நீட்டியேயுப்பைப்பூசி நிலைபெறவூதிப்போடு, காட்டியவெள்ளையுள்ளே கலங்காதேசுன் னமாமே. (௯௱௰௫)

ஆமிந்தவெள்ளைச்சுன்ன மப்பனைசெம்புநாறில், வோமிந்த ப்பூட்டியாட்ட வுயர்ந்திட்டரசிதமாகும், வேமிந்தவலோகத்தில் வெருவிட்டூதல்போகும், காமிந்தப்போக்கைவிட்டுத் தனியொ ருபோர்க்குக்கேளே, (௯௱௰௬)

கேளுநீ ரசிதச்சுண்ணங் கெடியானவீரங்கட்டி, வேளுநீதேய்த்தாயானல் விளங்கியசிவப்பேயாகும், காளுநீசினம்போடக் கடுகியகறுப்புமாகும், வாளுநீ வீரன்மேலே வளமாகப்பூசிப்போடே. (௩௧௭)

போட்டபின்சிலைசுற்றிப் புகழாகவுப்புக்கட்டி, யாட்டபின்னாறிப்போடு மப்பனைகட்டிப்போகும், நீட்டபின்னிரும்புயீயம் நிலைநிலேபூசியூதக், காட்டபின்ரசிதமாகும் தனிமாற்றுப்பதினாறுமே. (௩௧௮)

பதினாறுமாற்றுச்செய்த பாங்கானரசிதச்சுண்ணம், கெதிநைசேதக்குள்ளே கெடிநாறுக்கொன்றுபோடு, நிதிநேரக்கட்டிப்போடும் நிமிஷத்திலுருகியாடும், மதிநாறுமீசன்சொல்ல மாயிதான்கேட்டவாறே. (௩௧௯)

வாறுகேளமர்சுண்ணம் வகைபொருபணமேதூக்கித், காறுகேள்நூறதொன்று தனிப்பட்டரசத்திற்போட்டுக், கூறுகேள்கிண்டிப்பார்க்கக் கொத்துப்போல்வெள்ளியாகும், மாறுகேளுருக்கிப்பாரு மகத்தானசூதக்கட்டே. (௩௨௰)

கட்டுண்ணுஞ்சூதம்போலே கலந்திட்டபாஷாணங்கள், கட்டுண்ணுஞ்சூதம்போலே கடியகந்தார்காரசாரம், கட்டுண்ணுஞ்சூதம்போலே கண்டுகொள்ளப்பாரீயுக, கட்டுண்ணுஞ்சரக்கைவெல்லாங் கண்டிணைப்போதைப்போட்டே. (௩௨௧)

வேதையின்முறையுங்காணார் விதங்காணார்துறையுங்காணார், தாதையாம்வாதிகிட்டச் சாதித்தேவார்த்தைசொல்வார், பாதையாங்கண்டோமென்பார் பாருங்காண் சொல்வேனென்பார், கோதையச்சுண்ணப்போக்கின் குணங்களைச்சொல்வார்காணே. ()

காணவேவுண்மைமார்க்கங் கடுகியேபண்ணும்போது, தோணவேதவழிப்போனாற் சூட்சத்தைமறந்தோமென்பார், பூணவேபின்புசெய்வார் போடுறவரிசைகாணார், மாணவா வாதிக்குள்ளே வாதாகவழிம்பன்றானே. (௩௨௩)

அழும்பானவாதிப்பேச்சு மாகாதககசடன்பேச்சுங், கழிம்பானமகன்சொல்பேச்சுங் காணாததிருடன்பேச்சும், விழிம்பானகாமிபேச்சும் வேதாந்தம்பாரான்பேச்சும், தழிம்பானமூடர்பேச்சுங் தான்கேட்டார்கெட்டவாறே. (௩௨௪)



கெட்டார்கள்லோகத்தோர்கள் கேள்வியாம்வாதந்தேடிப், பட்டார்கள்பெண்ணைக்கூடிப் பழிபட்டுவாசிபோக, விட்டார்கள்வேதாந்தத்தை வெளியக்கேதோவென்று, பொட்டானகழுதைபோல வேதோகோவலைகிறாரே. (௩௨௫)

அலைகிறசத்தியெது வாலைாடேசிவன்றானேது, குலைகிறமன்தானேது குறிப்பானபாதையேது, நிலைகிறபொருளங்கேது நேராகவழிதானேது, தலைகிறநோக்கிலுன்னிச் சண்டாளர்பாருபாரே. (௩௨௬)

பாருநீயுரைத்தாகன்றாய்ப்பள்ளிச்சென்றுபோதங்காணும், பாருநீயுரைத்தாகன்றாய்ப் பார்த்திடில்வாதங்காணும், பாருநீயுரைத்தாகன்றாய்ப் பலபலபிறப்புங்காணும், பாருநீயுரைத்தாகன்றாய்ப் பலபலசித்துமாமே. (௩௨௭)

சித்தேதவசித்தங்கேது சிவன்றானுட்லிலேது, உத்தேநீபாருபாரு வொக்கவேவெளியாய்ப்போகும், மத்தேநீசிவலிங்க மதத்தானவாயில்வாய்த்தால், பத்தேநீசடந்தான்கோயில் பருந்திபம்புலன்றானஞ்சே. (௩௨௮)

அஞ்சானவிளக்கைத்தூண்டி யாதாரமேறிப்பாரு, பஞ்சானசத்திசிவன் பருஞ்சிவன்சத்தியாச்சு, வஞ்சானவகாரஞ்சத்தி வழங்கியசிகாரமீசன், கஞ்சானரெண்டுங்கூடித் தனிச்சுழிவீதியோடே. (௨௨௯)

ஓடையிலிடைபின்ரெண்டு மோகோகோபெங்கேயென்னில் வாடையிலிடைவகாரம் வழங்கியசிகாரம்பின்றாள், தேடையிலிரண்டுஞ்சேர்க்கில் தேசியாஞ்சுழியிலேலாம், மாடையிலானந்தத்தையவைகாலுமறியுங்காணே. (௩௩௰)

காணந்தாலைக்கண்டாற் கைகண்டான்ஞானமெல்லாங், காணந்தாலைக்கண்டார் கைவிட்டபதுமையானார், காணந்தாலுங்கொக்கும் கடியமுன்குருவாம்ரெண்டெ, காணந்தாலும்பாருகவோதசித்திதானே. (௩௩௧

சித்தியாத்தைதலமொன்று செப்புறேன்கேளுகேளு, வத்தியவழிஞ்சிகுன்றி யடங்காதகேவதாளி, பத்தியாக்கஞ்சாமத்தைபரியவாலுளுவையோடு, மத்தியாப்புரசவேறு வகைக்கொருபலந்தான்பத்தே. (௩௩௨)

பத்ததுவெவ்வேறாகப் பருவமாய்நறுக்கியப்பா, முத்ததுமா
ணிச்சாறு முழுகவேவரித்துவைத்து, வொத்ததுபின்னேபோட்
டுறவானமருந்துகேளு, கொந்திப்புல்க்காண்மூன்று. கொய்யதோ
ர்கெந்திபோடே. (௩௩௩)

போட்டபின்னரிதாரந்தான் போடநிற்பலந்தானென்று, நீ
ட்டபின்சாரமொன்று நேரதில்வெடியுப்பொன்று. வோட்டபின்
படிகையொன்று வுரவாகக்கல்லுப்பொன்று, காட்டபின்பண்ணை
யொன்று கூடுகிபகாரமொன்றே. (௩௩௪)

ஒன்றாகத்துரிசியொன்று வுயர்ந்தகுங்கிலியமொன்று, தன்
றானசாம்பிராணி தானொருபலந்தானப்பா, தொன்றானபூநாகந்தா
ன தொட்டஞ்சுபலமூரீயுரு, தன்றானதார்த்திலைகக்குக் கடுக்கிழ
ங்கையாபத்தே. (௩௩௫)

பத்திடுவமுரிப்புப் பாங்காகவொன்றுய்க்கூட்டு, வொத்திடு
விதைபோடெர்க்க வொத்ததேயுரைத்துப்போடு, மத்திடுகாசு
போல வளமாகவில்லைகட்டு, முத்திடுபுடத்திலப்பா முட்டியேதை
லம்வாங்கே. (௩௩௬)

வாங்கியதைலப்பேரு மகத்தாநவுற்றசிங்கி. பாங்கியவமுரி
ச்சிங்கி பருகியபீசச்சிங்கி, தாங்கியகெந்திச்சிங்கி சாரமாய்காரச்சி
ங்கி; யோங்கியபாபிச்சிங்கி யொப்பொன்றுமில்லைகாணே. (௩௩௭)

காணிந்தத்தைலத்துள்ளே கலக்கவேமருந்துகேளு, பூணி
ந்தப்புவைகுராபி புகழூரப்பூரம்போடு, வாணிந்தவீரத்தோடு வள
மானதுருசுச்சுன்னம், தோணிந்தவங்கச்சுன்னம் செந்தூரமும
வராகனெடை. (௩௩௮)

எழையுந்தைலக்குத்திராதமாதவரைத்துக்கொண்டு, எழை
யுந்தைலத்தேட்டே யிணங்கவே கலந்துபோட்டுத், தாழையுமாயி
காளைச்சங்கமாப்பூசைபண்ணிக், கோழையுமடக்கவேதைகொ
ள்ளுறேன்கேளுமேளே. (௩௩௯)

கேளுநீருதம்பத்திற்தெடிமூன்றுதுள்ளிருத்து. வாளுநீகே
ய்த்துவொன்றுப் வளமாகக்கிளைபோற்கட்டித், தேர்ளுநீருட்ளிநீ
யிற் சுகமாகவாட்டிப்பின்பு, யாளுநீயெண்ணெய்க்குத்தி யளவியக
ரண்டிப்பூகே. (௩௪௰)



ஊதிடவியம்போல வுருகிநிற்கும்கமப்பா. மாதிடவாகுப்பி
ன்பு மாட்டியேகுகையில்வைத்து, வேதிடமென்னவேலட்டி
ல்பானகாரங்குத்திப் போதிடவுருக்கிப்போடு புகழானகுகை
டே. (௩௪௧)

கட்டியருகந்தன்னைக் களங்குசெந்தூரம்பண்ணு வொட்டி
யேதருவேபண்ணு வோகோகேசாரவேர்நிந், தட்டியசத்னதக்
கூட்டிச் சாரணைவிளித்தேற, வட்டியகவனமார்க்க மாடலாமாட
லாமே. (௩௪௨)

ஆடலாந்தைலத்துள்ளே யப்பனேலிங்கந்தோய்த்து
லாந்தைலமெல்லா முண்டிடுமளவுமாட்டு, நீட்லாய்த்தோயத்த
தோய்த்து கிலையதுவிருபத்தொன்று, காக்கடலாம்பொன்னேயாக
க் கலங்காமல்வாட்டுவாட்டே. (௩௪௩)

வாட்டியலிங்கமப்பா வச்சிரம்போலேகட்டும், நீட்டிடுதங்க
ம்ரெண்டில்நேரானலிங்கமொன்று, ஆட்டிடக்குருவேயாச்சவுடை
த்ததைப்பாருபாரு; காட்டிடுசுத்திச்செம்பு தனிகாணுக்கொன்
றுபோடே. (௩௪௪)

போட்டவேசெம்புமப்பா புகழானதளங்கமாச்சு, வாடவேவெ
ள்ளிபத்தி லணையிந்தச்செம்புவொன்று தேடவேவேண்டாம்வா
சுந் தெருவெல்லாம்பொன்னுப்போகும், கூடவேயெங்கேயென்
னிற் குறிநாலிற்கூடுகூடே. (௩௪௫)

குழியானலிங்கம்போலே குமட்டியேவீரம்வாட்டு, குழியா
ன்லிங்கம்போல கொள்ளுமொனபதுமேவாட்டு, குறியானலிங்
கப்போலே கொடுஞ்சாரகாரமாட்டு, குழியான்லிங்கம்போலே
கூப்பிட்டதெல்லாஞ்சாமே. (௩௪௬)

எல்லாந்தான்செத்ததானு லிங்கக்கணடுவேதைபோடு, வல்
லாதகடினம்பாரு வழங்கியமெத்தவைப்பாரு, சொல்லாதமுறை
யைப்பாரு சூட்டிடுவரிசைபாரு. கல்லாதம்மணலைமட்டுங் கட்ந்
தோடும்வேதைபாரே. (௩௪௭)

பாருநீராசதந்தான் பண்ணுறவிதத்தைக்கேளு, தாருநீவா
ட்டபூசத் தனித்ததோர்துசுகட்டக், கோருநீபெண்ணைக்கூடக்
கோடானுகோடிதேடு, வாருநீசந்தோஷித்து மகத்தாகக்கொச்
சிப்பாயே. (௩௪௮)

வேறு.

கெர்ச்சிக்குமொருமந்தான்வந்துகூடிற் கேடியமாமாங்காரங்கிளிகம்டாறும், வர்ச்சிக்கப்போகிறு கோபமிஞ்சும் மாளுறு தையெண்ணுது மசகமாக்கும், நிர்ச்சிக்கவிதுரெண்டுந்தீர்க்கமாட்டார் நிலையோகம்சோகமென்னகேர்ப்பாமென்ன, வர்ச்சிக்கவாதாரமெந்தவென்ன வாகாகாதன்னறியாரழும்பர்தானே. (௩௪௯)

வேறு,

தானென்றரெண்டினுண்மை சாற்றுறேன்கேளுகேளு, வானென்றலோபத்துக்கு வச்சிரதந்தம்ரெண்டு, கோனென்றசித்தனன்று கொடுந்தந்தம்பிடுங்கிளுற்போல், வேனென்றவிவேகசித்தன் விழலெண்டுமடித்தார்காணே. (௩௫௦)

அடித்தபின்னவசரத்துளப்பனேவந்துசேர்வான், பிடித்தவள்குணத்திற்சேர்ந்து போரகவாரும்பாரு, மடிந்தவர்போகாவிட்டால் வாதமும்ஞானம்பொய்போ; யிடித்தபின்பல்லைக்காட்டியேஙகாதேகன்ருய்ப்பாரே. (௩௫௧)

நன்ருவதேதுவப்பா நாலதேமெத்தனறு, குன்ருவதேதுவப்பா குவிந்திட்டஞானக்குன்று வன்ருவதேதுவப்பா வாகாதமாயவாதை, வன்றுயேன்மெத்தன்று வள்ளாட்டாற்கேடுதானே. (௩௫௨)

கேடெல்லாந்தள்ளிப்போகுங் கெடியானவொன்றைநோக்கு, விடெல்லாம்வாதமாக விரைந்திந்தச்சிங்கிநோக்கு, கூடெல்லாநாளுக்குள்ளே குழிப்புரகவுற்றுப்பாரு, வேரடெல்லாஞானவாத மொக்கவுஞ்சமனுக்காணே. (௩௫௩)

காணுநீவங்கந்தானுங் கலங்காதேசுன்னமாக்க, வேணுநீயோமத்தோடும் வெள்ளாட்டினெருவுங்கூட்டு, தோணுநீபொடியாய்ப்பண்ணிச் சுகமாகவைத்துக்கொண்டு, வாணுநீவங்கந்தன்னை வளமாகத்தகடுபோடே. (௩௫௪)

தகடதுலேசுவேண்டாந் தளமாகத்தகடுபோடு, நிகடதுதாளகத்தை நீற்றிவாசுன்னத்துள்ளே, வகடதுவீரங்கூட்டி வார்த்தரையண்டநீரால், பகடதுவங்கத்துக்குப் பரிவாகப்பூசுபூசே. ()

பூசியேயபத்துக்கும் புகழ்ாக்கோணிக்குள்ளே, யாசியேலங்கரேக்கை யப்பனேபரப்பிவைத்து, வாசியேமேலேயோமம் வளமாகப்போட்டுகென்ருய்க், காசியேபாவைப்போலக் கடுக்கேசுருட்டிக்கட்டே. (௩௫௬)

காட்டியேயக்கமாகக் கட்டிடுயெருவைப்போடு, வாட்டியேதீயைமூட்டு வாகாகநீறிப்போகு, மொட்டியேவங்கச்சுன்ன மொடுக்கத்துக்கெல்லமாகும், மட்டிகாள்வாதமென்ற வாருதிக்கோடமாமே. (௩௫௭)

ஓடமேயாச்சுதப்பா வொடக்கோல்சொல்லக்கேளு, ஏடவேறுநிச்சுன்னந் தனியோடக்களையுமாச்சு, நீடவேகரைதான்வீரம்நேரோடங்கட்டுதற்குக், கூடவேகயிறுமாச்சு கொடுங்காரஞ்சாரந்தானே. (௩௫௮)

தானென்றகுத்தத்துள்ளே தனிராசன்சூதராசன், கானென்றராணிகெந்தி கடுமேவலர்ள்தான்லோகம், வேனென்றகண்டையாலே வேதாந்தம்வெளியாய்ப்போகும், வானென்றவோடலாகு மகத்தானசித்துமாமே. (௩௫௯)

ஆமினிச்சித்தன்வாதி யருளுள்ளஞானிமூவர்; போமினியுலகத்துள்ளே பிறப்பேதுபொய்யிற்பொய்யே, காமினியாகச்சென்று கருத்துள்ளேநோக்கிறைக்கால், வாமினிச்சின்னமுண்டு வந்தாலும்ராசவாமே. (௩௬௦)

ஆமினியிரும்பைபாட்டி யப்பனேயுருக்கக்கேளு, காமினிக்கட்டிக்கொண்ட கல்லுப்புநாலுதூக்கு, வாமினிகாரமஞ்சு வழுக்கியசாரம்ரெணடு, வோமினிமூன்றுங்கூட்டி யுறவதில்முரிவாரே.

வாரதிலரைத்துவொன்ருய் வளமாகமெழுகேயாக்கி, வேரதுகேளாயப்பா வெள்ளைச்சாரணையின்வேரு, கோரதுமுக்காவேளைகொடியதோர்வேருங்கூட்டிச், சேரதுவொன்ருய்நீயுஞ் சேர்ந்துநீவைத்துக்கொள்ளே. (௩௬௨)

வைத்தநிலயமேயப்பா வாமாகப்பலமேமூன்று, தைத்ததிற்பிசறிக்கொண்டு தனித்ததோர்குகையில்வைத்து, மொய்த்ததிற்கரியைப்போட்டு மூட்டியேயூதமுத்தாய, கைத்ததிலுருக்கத்திற் கனமானவுருக்குக்கேளே. (௩௬௩)

உருக்கியலோகந்தன்னையுடைத்திந்தப்படியேமுக்கால், சொருக்கியேயுருக்கிறைக்கால் சொர்ண போற்கண்விட்டாடும், வரு

அ

யிவிரும்பைப்போக்க மாட்டாதுவுப்புக்காவி, பருக்கியவரும்பே தென்று வயிர்துபாரயிர்துபாரே. (௩௬௪)

பாருநீமர்யிரதம் பரவியவிரும்பேயப்பா, காருநீநின்றுயா ளூற் கடுகியகாயசித்தி, கோருநீசெம்பானூட்டக் கோகோகோ வாதசித்தி, யாருநீர்மியப்போறு ரயிர்துநீயிரும்பைப்பாரே. ()

இரும்பென்றுவெளிதுவாய்க்கு மெவராலுமுருக்கப்போகா து, துரும்பெல்லாம்பொன்னேயாகும் சூட்சத்தைச்சொல்லக்கே ளு, அரும்பென்றேசாரக்கட்டு மப்பனேதுருசுக்கட்டு, விரும்பெ ன்றவிரக்கட்டுவெண்காரக்கட்டுமாமே. (௩௬௬)

ஆயிர்தாலுக்குள்ளே யதுவதுவெவ்வேறாகப், போயிர்தவி ரும்பைக்கூட்டிப் புகழாகவுருக்கிப்பாரு. காயிர்தமாற்றுக்கொக் கக் கடியகோர்பதிறைப்பா, வோயிர்தமார்க்கங்காண வுளமுரு மாண்பர்தானே. (௩௬௭)

தானென்றவிரும்புக்குள்ளே தாக்குநீலிங்கமப்பா. தானெ ன்றவிரும்புக்குள்ளே தாக்குநீதங்கமப்பா, தானென்றவிரும்புக் குள்ளே தாக்குநீவீரமப்பா, தானென்றவிரும்புக்குள்ளே தாக்கி டாய்ருதர்தானே. (௩௬௮)

தானென்றநாலின்வேதை சதசகத்திரமேயோடும், பானெ ன்றவிரும்பையப்பா பலமொருகாசாவிற்பார், வானென்றவேதை யோடு மாற்றிலறுபதாகும், கோனென்றமூலராயன் கொள்கி னூர்கொள்கிறாரே. (௩௬௯)

கொள்கினூலைப்பார்ப்பார் கூடவும்வகையுங்காணூர், கொ ள்கினூலுக்குள்ளே குயிப்பானபொருளைக்காணூர். கொள்கின நூலைப்பாரத்தென் குருவேண்டுமென்பார்மாண்பர், கொள்கின நூலைக்கண்டார் குழிகாலுங்கண்டார்பாரே. (௩௭௦)

நாலுடவிபாத்தொக்க நாட்டுறேன்வாதங்கேளு, வேலுட வெளிப்பாளொக்கும் விளம்பியவிரும்பேயப்பா, காலுடவெளிப் பானுக்குங் கடுகியநாகமப்பா, தாலுடவெளியொளிக்குச் சமனு கும்நிமிளைதானே. (௩௭௧)

தானென்றநிர்க்குணத்தின் சழுனுகுஞ்சூநங்கேளு, பானெ ன்றநாலுக்குள்ளே படர்ந்தநீக்காய்த்தாற்போலே, காளென்ற விந்துனாவிற் கரையில்லைகணக்குமில்லை, வானென்றநாலுக்குள் ளே வளர்ந்தனுவாகமப்பாரே. (௩௭௨)



பாரந்தாலாய்நின்ற பரிவெல்லாங்கேளுகேளு, சேரந்தச் சரிகைநானஞ் சிறந்திட்டகிரியைஞான. மோரந்தயோகஞான மொருமூன்றுங்கடந்தானுல், வேரந்தநிராதாரத்தில் வெளிக்கு ளேவெளியுமாச்சே. (௩௭௩)

ஆச்சந்தவிரும்பில்மாற்றே வறுபதுசொன்னேனப்பா, வா ச்சந்தநாதத்துள்ளே வழங்கிற்றுநூறுமாற்று. போச்சந்தநிமிளை யாலே புகழுமைந்நூறுமாறது, வோச்சந்தச்சூதத்துக்கு வுயர்ந் தவாயிரவகாண்மாற்றே. (௩௭௪)

மாற்றுமாயிரமேயானுல் மகத்துவஞ்சூதமென்னப், போற் றுவாமநிர்க்குணத்தின் புகழானகரையுங்காணேம், தோற்றுவா மசூதத்துள்ளே துலங்கியகஞ்சம்போஞல், காற்றுவாம்விரவண் டவ கரையற்றமாற்றுமாமே. (௩௭௫)

ஆமதேச்சூதத்துக்கு மடங்கியகஞ்சம்போனுற், போமந்தம னதுக்கப்பா புருந்திற வாசைவாம்பு, வோமந்தவாசைபோனு லோகோகோவென்றேயாச்சு, தாமந்தச்சூதஞ்சற்றே தனியுண் டுகற்கநேரே. (௩௭௬)

நேராகுஞ்சூதத்தோடே நிலையானவர்தவப்பா, போராகும லையுமண்ணும் பொன்னுகும்விண்ணும்பாரு, வேராகும்போதத்து ள்ளே விளங்கிற்றுசிவசெந்து, வாராயுஞ்சித்தர்காளே யருள்பொ ருளிலாவைவொன்றே. (௩௭௭)

ஒன்றானபோதத்துள்ளே யொருசகத்தோற்றமானூர், கன் றானபிறவிவந்து கலந்திட்டவாறேதென்ன, வுன்றானமண்ணும்நீ று முருண்டத்தின்றீயில்வீழ்ந்து, பன்றானவாய்சேரிற் பலபலநி னைவுமாமே. (௩௭௮)

நினைவதுகர்மதர்மம் நிலைத்திட்டபடியேகாணும், கனவது கண்டாற்போலே கண்முன்னேதோன்றுந்தோன்று, மனமது தோற்றிநின்ற மயக்கத்தேசிவன்சென்று, வனமதுகோடிசன்ம மாகாதாவெடுக்கும்பாரே. (௩௭௯)

எடுக்கவேதுணிந்ததானு லெந்திரம்போலேசுற்று, மடுக்க வேவிவேகம்பாரா வசட்டையர்கேளுமப்பா, தொடுக்கவேதொடு க்கத்தைத்துச் சுகமானமாயப்பாம்பு, வடுக்கவேபிடித்ததானுலா ருக்கும்விடுபடாதே. (௩௮௦)

விடுபடாப்பலத்திறனாலே விளங்கிற்றுச்சின்னக்கோடி, கடுப டாமனந்தான்சென்று தாமரைச்சலம்போலாச்சு, கெடுபடாவிலை கத்தனுக்குக் கேடாச்சுமாயையையா, வடுபடவுரைத்துப்பாரு வா வாவாபிறவிபோச்சே. (௩௮௧)

போச்சுதுவென்றுசொன்னாற் போகுமேபிறவிப்பாம்பு வா ச்சுதுவிவேகத்தோடு வருத்துநீயேயிப்பாரு, காச்சுதுவண்டாண் டங்கடுமத்திமேமேலமாயி, வாச்சுதுவவரைத்தொட்டு வளமாக வேயிப்பாரே. (௩௮௨)

பார்க்கையிலகண்டங்கொன்றும் பாவற்றவெளியேயாகும், நேர்க்கையில்நிலையுமில்லை நிறைந்தெங்குநின்றசோதி, சேர்க் கையிலடுக்கக்காணுந் தெளிந்தபின்பிறப்புப்போச்சு, ஆர்க்கை யில்கருத்தைவிட்டாற் கைப்புலன்பிறவிதானே. (௩௮௩)

பலனாகவேதாந்தத்தைப் பார்த்தவனோரங்கட்டிக், குலனை கவிறந்துபோனாற் கொடுக்காதோஞானமப்பா, தலனாகநரசன்ம த்திற் றானவன்சனனமாகிப், புலனாகஞானத்துள்ளே புக்குவான் புக்குவானே. (௩௮௪)

புக்குவதெவ்வாறென்னிற் பொலிவானவுவமைகேளு, தக்கு வதாகஞ்சுகங் கனிக்கண்டாநவலோகங்க; ளொக்குவதென்ன போலே பொருங்கிப்போமனந்தானப்பா, மக்குதாய்விவேகம் போனால் மாட்டோதான்மனிதன்றானே. (௩௮௫)

தானென்றமனிதன்சென்மந் தனிக்கோசுகிறத்ததாலே, கா னென்று பிறப்பார்கோடி களங்காயப் பிறப்பார்கோடி, வே னென்றவகையினைப் விளங்கியேபிறப்பார்கோடி, ஞானென்றகாம க்காமி பொருகோடிபிறப்பார்காணே. (௩௮௬)

காணலாம்மோகோடி கருத்துள்ளேநினைப்பார்கோடி, பூ ணலாமோதத்துள்ளே புணர்ச்சியாய்க்கிடப்பார்கோடி, தோண லாஆலைப்பார்த்துச் சுற்றியேயலைவார்கோடி, யாணலாகோடிக் கோடி யதற்குள்ளேயொருவர்காணே. (௩௮௭)

ஒருவரைப்பத்தியேயி யோகோகோசாவிற்செல்வான், பரு வந்தான்மற்றோரெல்லாம் பார்க்காதகர்மமேதோ, வுருவந்தா னெசித்தர்லென்ன வுற்றுப்பார்க்கர்மியானால், தருவந்தான்பார்க் கவொட்டார் சுழன்றவன்செத்துவாமே. (௩௮௮)



செத்துவாய்ச்செனிப்பதெல்லாஞ்சேர்ந்தந்தநாளுக்குள்ளே பத்துவாம்விவேகம்வந்தாற் புலபலயோனியார்காண், கத்துவாம் விவேகம்போனாற் கரையில்லாப்பிறப்புக்கப்பா, இத்துவாம்பல கைமேலே யிருக்கின்றாள்தாயைப்பாரே. (௩௮௯)

பாரந்தமனிதாய்கையிற் பகடைகாணிந்திரசாலங், கோர ந்தச்சொக்கட்டான்போற் கோடானுகோடிசென்மம், வாரந்தம னிதாய்கண்டால் வளர்ந்திட்டபிறப்புப்போச்சு, ஆரிந்தமுறை யைப்பார்ப்பா ரறிந்தவர்பிறந்திடாரே. (௩௯௦)

பிறந்திட்டவிந்திரசாலம் பேரானசின்னம்போலே, அறந்தி ட்டவழுரிசிங்கி ஆக்காஆந்தையா, திறந்திட்டந்தப்பினுலுஞ் சேற்றுக்குளெழிந்தகல்போ, லிறந்திட்டபாஷாணங்க ளேக்கமு நகண்டிலேனே. (௩௯௧)

கண்டிலேன்வாதமொன்றுங் காணேனுவொன்றேன்வாயி ல், பண்டிலேன்மண்ணைவாரிப் பசிச்சென்றுவாயில்போட், வொ ண்டிலேன்விரக்கட்டு வுறுதியாயொன்றுகேளு தண்டிலேன்கார சாரச் சமையலையொன்றுகேளே. (௩௯௨)

கேளுநீவெள்ளையொன்று கெடிமாலின்தேவியொன்று, தா ளுநீருகமொன்று தங்கமிருகாரேயொன்று, வாளுநீகாரச்சுன்ன ம் வழங்கியபூரச்சுன்னம், ஆளுநீரெண்டும்ரெண்டு மாகாகாகமுஞ் சிதூக்கே. (௩௯௩)

தூக்கியேயண்டநீரிற் சுகமாகவரைத்துச்சாமம், தாக்கியே பழச்சாறுகுத்தித் தனியரைவாலையாகும், வாக்கியேவாலையோ டேமாட்டியேகாரசாரந், தேக்கியேசமனாய்மூன்று சிறக்கவெ ண்கருவாலாட்டே. (௩௯௪)

ஆட்டியேநாகம்பந்தி லப்பிடாமப்பாமூன்று, பூட்டியேபுட த்தைப்போடு புகமாகவுருக்கிப்பாரு, நீட்டியேகண்விட்டாடி நி லைத்ததுநாகக்கட்டு, கூட்டியேசமனாய்ச்சூதங் குறையாமற்சேர்த் துக்கொள்ளே. (௩௯௫)

கொண்டதிற்சமனாய்வீரங் கூட்டியேயரைப்பாயானால், க ண்டதில்விடுபட்டாடுந் தனிச்சூதமகத்தாம்வாலை, அண்டமுன்க வலோகத்தி லாணிதான்பத்துபத்து, வண்டுதின்வீராவேசம் வ கையெல்லாஞ்சொல்லக்கேளே. (௩௯௬)

சொல்லியவாலைக்குள்ளே ருட்டிடுதங்கரேக்கை, மல்லியக ரும்பையானை மத்தித்தமென்றுறபோல, அல்லியேதின்னும்பா ரா யம்மட்டுங்குந்துவாவா, நல்லியதின்றபின்பு நாட்டிடுவேதை யாமே. (௩௱௯௰௭)

ஆடவேவேதைதானு மடைவெல்லாஞ்சொல்லக்கேளு. நீ டவேபாஷாணங்கள் நிலைக்கெல்லாம்வாலைப்பூசி, யூடலேவாட்டி வாட்டி யுருக்கிடவுருக்குமெல்லாம், கூடவேபாஷாணங்கள் குலங் கண்டுவேதைபோமே. (௩௱௯௰௮)

போடவேவாலைபத்து புகழ்ருதர்சுத்திபத்து, நீடவேயொ ன்றாய்க்கூட்டி நேராகசுவப்புர்சுன்னம், தாடவேசாரம்பத்து த னியொக்கவரைக்கநீராடி, வட்டேவபூரம்போட்டேயுறவிரகக்கொ திப்பித்தேதே. (௩௱௯௰௯)

எறையிற்பத்தும்பத்து யிழைந்தொன்றிவாலையாகும், தே றையில்மார்க்கமாகச் சேர்த்தேறுதூறுதொந்தம், வேறையின் னென்றுமில்லை வெகுகோடிவாலையாச்சு, ஆறையினுதகம்போல வொருகோடிவேதையாமே. (௪௱)

ஆயிர்தவாலைரெண்டு மடர்ந்தமுன்னுகம்ரெண்டு, காயிந்த வீரம்ரெண்டு கடியதோர்பூரம்ரெண்டு, வோமிந்தவுரந்தான்ரெண் டு வொக்கவெண்கருவாற்கட்டி, யாமிந்தத்தங்கப்பத்தி லப்பிநீ ரவிவிற்போடே. (௪௱௧)

போட்டுநீமுன்றுநாளிற் புகழாகக்காந்திகாட்டு, ஆட்டுநீத ங்கமெல்லா மப்பனைமெழுகுமாகும், ஓட்டுநீமெழுகில்வேதை யொடுங்காதகோடாகோடி, நீட்டுநீலிங்கமேலே நிலைத்தரைவா சிபூசே. (௪௱௨)

பூசியேயுருக்குக்கொட்டிப்பொடியிலேபிறட்டிடப்பா, மாசி யேசுன்னச்சிலை வளமாகச்செய்துநீயும், ஆசியேபுடத்தைப்போ டாயம்மம்மாவுருகிகிற்கு, மோசியேநவலோகத்தி லொருநூறு க்கொன்றுபோடே. (௪௱௩)

போடவேபத்துமாற்றும் புகழானலிங்கமப்பா, வாடவிப்ப டியேசேர்ந்தா லறுபத்துநாலுங்கட்டும், நீடவேயினத்தைக்கட் டு நீட்டிவாசர்க்கையெல்லாம், ஓடவேவேதைபோட வுயர்த்தி யைப்பாருபாரே. (௪௱௪)



பாருநீகவசமான பரிமெழுகெல்லாம்வாங்கிச், சாருநீசாரநீ ரைச் சத்தத்திற்குத்தியாட்டிக், கோருநீபதமேபண்ணு கோடா னுகோடிசாகும், ஆருநீவென்னைப்போலே யறிவிப்பார்வாதங் காணே. (௪௱௫)

காணிந்தமெழுகைப்போலே காணுமோநவலோகங்கள், பூ ணிந்தவொன்பதாலே போக்கென்றுசொல்லக்கூடா, வாணிந் தவுபாசங்கள் வகையெல்லாம்மெழுகேயாகும், ஊணிந்தமெழுகி ன்லேதை யுத்தமியறிவாள்காணே. (௪௱௬)

அறிவாளேநவலோகங்க ளாகியமெழுகில்வேதை, பிறிவான நூறுதொட்டுப் பேர்சகத்திரமேயாடும், செறிவானவுபாசங்க ள் நிலைத்திட்டுமெழுகின்வேதை, குறிவானகோடிக்கோடுங் கொ ள்ளயான்பார்த்தவாறே. (௪௱௭)

பார்த்திட்டபடியேசொன்னேன் பாராதேவிட்டுவிட்டேன், வேர்த்திட்டவென்னூற்குள்ளே வெளுத்தொன்றுந்தப்பாதப்பா, மார்த்திட்டமாகச்சொன்னேன் மனதூன்றி நூலைப்பாரு, கோர்த் திட்டவண்டமெல்லாங் கொடுமைக்குளடங்கும்பாரே. (௪௱௮)

அடங்கிடுமண்டரண்ட மறுதியாம்புவனமெல்லா, மடங்கிடு ம்பதமேதொட்டே யறுபத்துநாலுசித்தி, யடங்கிடுஞ்சீவராசியை ரெண்டுதோற்றமெல்லா, மடங்கிடுமுன்னுக்குள்ளே யப்பனைநா லைப்பாரே. (௪௱௯)

நாலையேபார்க்கவென்று னண்பாகச்சொல்லக்கேளு, காலை யேமாலைவேண்டாங் கடியதோர்கூட்டம்வேண்டாம், மாலையேநடு ச்சாமத்தில் வைத்துயேயிருந்துபாரு, கோலையேயானும்பார்த்துக் குழியார்தலத்தில்நில்லே. (௪௱௰)

நின்றிடுலகண்டத்துள்ளே நிலைத்தெழுக்கீரெட்டப்பா, வொ ன்றிடுஆயிரேயாகு முள்ளாறில்வகாரம்நிற்கும், கன்றிடுற்சாவு பெர்யாங் கைக்கெட்டநாலுங்காணும், மன்றிடில்வாசியேறி மா ர்க்கம்நால்வீதிபோடே. (௪௱௰௧)

போடையில்மூன்றும்வீதி புகழானதாயுங்காண்பாள், ஆடை யில்மூப்பாழெல்லா மப்பனைவெளியாய்ப்போகும், நீடையிற்கு திரையேற்ற நேர்ச்சுமகனையென்பாள், ஊடையில்நாலிற்புக்கி யொன்றாகவிருவென்றேன். (௪௱௰௨)

இருவென்றசொல்லைக்கேட்டே னின்புடன்குதிரைகாணே
ன், கருவென்றவாறுதாரக் கனமெல்லாங்காணேன்காணேன்,கு
ருவென்றமொழியுங்காணேன் குழிகதிட்டபொழியுங்காணேன்,
மருவென்றநாயுங்காணேன் மட்டற்றபோதமாச்சே. (௬௧௩)

போதத்தில்நின்றேயுன்னிப் போதாந்தமேயிப்பார்த்தேன்
சோதற்றசுழியாம்நீரிற் குமிழிபோலொடுங்கிப்போனேன். வ
தைத்தான்சொல்லவின்ன மியானென்றநாமம்போச்சு, நாதந்
தையல்லமுன்னே காணுதுபாருபாரே. (௬௧௪)

பாரந்தப்போதத்தொக்கும் பரிவானவாலைச்சூதங, காரந்
த்தாயோடொக்குங கடியதோர்தங்கவெள்ளை, சேரந்தவெள்ளிப்
பாஞ்ஞைக்குஞ் சேர்ந்திட்டவுபாசங்கள், வாரந்தவொளிப்பாளொக்
கு மன்னியலோகந்தானே. (௬௧௫)

தானென்றசரிதைஞானந் தனிவெளிப்பாழுமாச்சு. வானெ
ன்றகிரியைஞானம் வளமானவொளிப்பாழாச்சு, கோனென்ற
யோகஞானம் குலவெளியொளிப்பாழாச்சு, கானென்றபதத்தின்
மேலே கன்னிதாளிருந்தாள்பாரே. (௬௧௬)

இருந்துநீநாலுக்குள்ளே யேகவுங்கூடாவிட்டால், அருந்து
நீமாயிபாத மன்பாகப்பூசைபண்ணு, சொரிந்துநீமனதையொன்
றிச் சூட்டிநீபூசைபண்ணு, அரிந்தநல்வாதம்வந்து அடிமையா
னென்னுங்காணே. (௬௧௭)

காணவேமனதிற்பூசை கபடறச்செய்தாயானால், பூணவே
ஞானத்துள்ளே புக்கலாம்புகலாமப்பா, தோணவேயென்னவெ
ன்று சோம்பிநீவிட்டாயானால், ஆணவேவாதஞான மடியோடே
தகர்ந்துபோமே. (௬௧௮)

போகுமேவாதம்விட்டாப் பொலிவான வாதம்பொய்யாம்,
வர்குமேவாட்டுதப்பில் மலர்ந்தங்கேயுதிர்ந்துபோகும், வேகு
வேப்புடங்கள்தப்பில் விரைந்தங்கேகண்டசேரும், பாகுமேவுந
க்குத்தப்பிற் பண்பானகிட்டமாமே. (௬௧௯)

கிட்டம்போனுதிப்போட்டுக் கெடிநாலைப்பொய்யென்றெ
தே, கிட்டம்போற்செய்தாயானுற் சேரவும்பலிக்குமப்பா, மட்
டம்போலாச்சுதென்பார் வளமானகாவிக்கோடு, அட்டம்போ
றகண்டமாற்றுக் கள்வுகான்சொல்லக்கேளே. (௬௨௰)



கேளுநீநான்குமூன்று கெடியானவுர்னங்கண்டாற், றுளுநீ
யியம்போட்டுத் தாக்காதேயெல்லாம்போகும், வேளுநீதங்கங்கூ
ட்டி விரைந்தங்கேபுடங்கைப்போடு, யாளுநீதங்கத்தோடே யத
ன்கிளேயிறங்கும்பாரே. (௬௨௧)

இறங்காமற்கடிக்குக்கொண்டே யிருந்திடுஞ்சிலதுபாரு, வு
றங்காதேமனதைநீயு முட்டியேதங்கஞ்சேரு, திறங்காணவிறங்கு
ம்பாரு இருட்டெல்லாம்வெளியாய்ப்போகும், அறங்காணமட்டு
மெல்லா மாமிந்தப்படியேபாரே. (௬௨௨)

ஆமிந்தப்படியேவிட்டு ஆகாகானுதிப்போட்டுப், போமிந்
தநூலிற்போட்டுப் பொய்ப்பாட்டேயென்பார்மாணபர், காமிந்த
வாதிக்கப்பா னைகண்டபொன்னுஞ்செய்பாம், ஓமிந்தக்குணத்
தைப்பார்த்தே யுத்தமத்தொழிலைச்சொல்லே. (௬௨௩)

சொல்லையிற்கேட்டுநல்லோர் சுகமாகமனதில்வைப்பார், வ
ல்லையிற்கசடரய்யா வாய்ப்போக்காயெங்குஞ்சொல்வார், எல்லை
யிலிரண்டும்பாரு யேற்றவர்க்கிதனைச்சொல்லு, வல்லையில்வாய்வி
ளர்க்கும் வாதமும்பலியாதென்னே. (௬௨௪)

என்னவுட்சமபமாறி லிருந்தவர்குணத்தைப்பாரு, பன்ன
வேபிரமர்மாறிற் பாஷாண்டிபேசவேண்டாம், கன்னவேவாமத்
துள்ளே கலந்தாக்காற்பேசபேசு, அன்னவேதுஷித்தாக்கா லா
ரெங்காண்மவுனமாமே. (௬௨௫)

மவுனத்திலிருக்கும்போது வாசியிலேறிபாடு, மவுனத்திலி
ருக்கும்போது வாதத்தையுரைத்துப்பாரு, மவுனத்திலிருக்கும்
போது மகத்தானநாலைப்பாரு, மவுனத்திலிருக்கும்போது மண்ணி
யிட்டுஅண்டம்பாரே. (௬௨௬)

அண்டங்கள்புவனந்தாண்டி யளவைத்தப்புரும்பார்த்துக்,
கண்டுந்தவாரையெல்லாங் கைமுறையாகத்திரத்திப், பிண்டங்க
ளுள்ளதெல்லாம் பேறுகநோக்கிப்பார்த்துத், தண்டங்கேநாலிற்
கூடித் தம்பம்போலிருந்துபாரே. (௬௨௭)

தம்பம்போலிருக்கவல்லோர் சாற்றினாரீசன்வாதம், கம்பம்
போற்காயத்தைக் காட்டவோவிடவேசொன்னார், கும்பம்போ
ன்முலையைப்பார்த்துக் குலைப்போரின்வேறுசொன்னார், விம்பம்
போலிருக்கச்சொன்னார் வேதாந்தமூர்த்திதானே. (௬௨௮)

தாவென்றவுப்பேயாதி தனைவிட்டால்வாதம்போச்சு, வேவென்றவுப்பைநீறி விரியவேசொல்லக்கேளு. மாவென்றகட்டுமுப்பை மணிப்போலேவாங்கிக்கொண்டு, வேவென்றமெழுகுச்சுண்ணம் வீரமுங்கூட்டித்தேயே. (௪௨௯)

தேய்த்ததையுலரப்போட்டுத் திறமாகவூதவூது, மாய்த்தது கோடிபோட்ட மல்லிகைப்பூப்போலாகும். மோய்த்ததுவாதம் வந்தே மொடுங்கிற்றவுப்புக்குள்ளே, யாயத்திதையறியாமாண பரலையுற்றலையுற்றே. (௪௩0)

அலையாதேசொல்லக்கேளு வப்பனேவுப்பின்வித்தை, மலையானமேருப்பொன்னும் மாட்டினரீசனன்று, தலையானவாதத்துக்குச் சார்வடியுப்பேயாச்சு, நிலையானவுப்பின்வேதை நீட்டுறேன்கேளுகேளே. (௪௩௧)

கேளென்றவுப்புச்சுண்ணம் கெடியானசாரம்ரெண்டு, தாளொன்றியரைக்கநீராந் தனிக்குள்ளேபோடக்கேளு, வாளொன்றுவீரம்பூரம் வழலையின்சுண்ணத்தோடு, வேளொன்றுமெழுகும்போடு வெறும்ரெத்தமாகும்பாரே. (௪௩௨)

பாரிந்தநீருக்குள்ளே பலகையாங்காரந்தோய்த்து, வாரிந்தாவியிற்போடு மகந்தானமுழுக்கட்டப்பா, காரிந்தநீறுக்குள்ளே சுடியதோர்சாரந்தோய்த்து, வேரிந்தவாட்டவாட்ட விரலிபோல் மெழுகுமாமே. (௪௩௩)

மெழுகிலேவீரஞ்சற்றே முப்பூசியாய்ப்பிசைந்துகொண்டு, மெழுகியேதங்கரேக்கை மீட்டையில்தின்னுந்தீயில், அழுகிலேப்ரிசைவேதை யாடுமப்பாகேளு, வொழுகிலேவீரன்மேலே யுபரித்தியாய்ப்பிடித்துவாட்டே. (௪௩௪)

வாட்டையில்வீரன்முன்னே மணிபோலேயுருகிநிற்கும்; மீட்டையில்முறையேவாட்டு நிலையாறும்பத்துஞ்சாகும், வாட்டவும் முறையேகண்டு வூட்டிடப்பொன்னுமாகும். ஆட்டவிச்சாரவேதை யளவில்லைகாணுங்காணே. (௪௩௫)

காணுமுன்னுலர்ந்தகாரங் களங்கறவூதுசுண்ணம், பூணவிச்சுண்ணத்தோடு புகழ்ரெண்டுகாரம்போடு, வூணந்தச்சாரங்காரமுறவாகப்போட்டேயாட்டு, தோணந்தசலமேயாகுஞ் சொகுசானகாரநீரே. (௪௩௬)



நீரிலேவீரம்போடு நிலையானபூரம்போடு, காரிலேபுனுகினோடு கடியதோர்வழலைச்சுண்ணங், காரிலேபோட்டுநீரைத் தனிபொக்கக்கலக்கிக்கொண்டு, வாரிலேதங்கரேக்கை மாட்டிவாமெல்லுங்காணே. (௪௩௭)

காணவேநீரில்வீரங் கரைகியேதோய்த்துத்தோய்த்துப், பூணவேவிளக்கில்வாட்டு பொரிபோலேமெழுகாய்வீழும், ஆணவேபொன்பதுக்கு மப்பனேபரிசவேதை, தோணவேமெழுகுலிங்கஞ் சூட்சமாய்க்கூட்டிக்கொள்ளே. (௪௩௮)

கொள்ளவேசாரச்சுண்ணங்குறையாமற்பலமொன்றப்பா, கள்ளவேசாரம்ரெண்டு தனிரெண்டுமொன்றாயாட்டு, வுள்ளவேமுன்னொருநாளும் முட்டுதாகக்கலந்துகொண்டு, தன்னையேவெள்ளிரேக்கைதாக்கிடமெல்லும்பாரே. (௪௩௯)

மெல்லிட்டநீருக்குள்ளே விதமாகச்சீனந்தோய்த்து, வல்லிட்டாவியிற்போட வப்பனேமுழுக்கட்டாகும். மல்லிட்டவெள்ளையோடு மகந்தானவீரம்போடு, சொல்லிட்டரெண்டும்ரெண்டு சீனந்தானுடம்போடே, (௪௪0)

